அனைவரும் எழுந்து, இரண்டு நிமிடங்கள் அமைதியாக நிற்கக் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், பேரவையின் அலுவல்கள் இப்போது ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் முற்பகல் 11.15 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10.17 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் முற்பகல் 11.15 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

3. வினாக்கள் — விடைகள்

உடுக்குறியிடாத வினாக்கள்

(*பட்டியல்கள் 1 முதல் 8 வரை)

முதல் பட்டியல்

1—

மழவேனிற்காடு சாலையை தார்ச்சாலையாக மாற்றுதல்

வினா எண் 565-திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், மழவேனிற்காடு கிராம ஆதிதிராவிடர் சாலையை தார்ச் சாலையாக மாற்றிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை வட்டம், மழவேனிற்காடு கிராம ஆதிதிராவிடர் சாலையை தார்ச்சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

* இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

2—

கீவலூர் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுதல்

வினா எண் 1524—திரு.வே. தம்புசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் வட்டம், கீவலூர் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுவது குறித்து அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

3—

அனந்தகோபாலபுரம் மேல்நிலை நீர்த்தொட்டியைப் பழுது பார்த்தல்

வினா எண் 1837-ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அனந்த கோபாலபுரம் மேல்நிலை நீர்த்தொட்டியைப் பழுது பார்க்கவும் நல்ல குடிநீர் தண்ணீர் கிடைக்கச் செய்யவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இக்குடிநீர்த் திட்டத்திற்காக அமைக்கப்பட்ட குடிநீர்த்தொட்டி பழுது பார்க்கப்பட்டு தற்போது பராமரிப்பிற்காக ஊராட்சி ஒன்றியத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

4—

நடுவிக்கோட்டை பெரியார் நகரில் சமுதாயக்கூடம் அமைத்தல்

வினா எண் 1905-ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை, ஒன்றியம், நடுவிக்கோட்டை பெரியார் நகரில் ஒரு சமுதாயக்கூடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு.டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

5—

இடையாத்தியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல்

வினா எண் 2376-ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (கி) ஆதிதிராவிடர்களுக்கு சமுதாய ஆழ்குழாய் கிணறு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், இடையாத்தி கிழக்கில், தாட்கோ திட்டத்தில் மூன்று ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகிறது. இதன் மூலம் அனைத்து ஆதிதிராவிடர் மக்களும் வேளாண்மை செய்து பயனடைந்து வருகிறார்கள்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

6—

பைங்கால் தொடக்கப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 2716—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பைங்கால் தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், பைங்கால் தொடக்கப் பள்ளிக்கு 1992-93-ம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் ரூ.1,31,000 மதிப்பீட்டில் ஒரு கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

7—

பைங்காலில் பாலம் கட்டுதல்

வினா எண் 2719—திரு. ஆர். *சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பைங்கால் வடக்கு ஆதிதிராவிடர் தெருவிற்கருகில் சி.எம்.பி. வாய்க்காலில் ஒரு பாலம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பைங்கால் (வடக்கு) ஆதிதிராவிடர் தெருவிற்கு அருகில் சி.எம்.பி. வாய்க்காலின் குறுக்கே பாலம் கட்ட தோராய மதிப்பீடு ரூ. 70,000 ஆகும். ஆற்றின் அகலம் சுமார் 2.50 மீ. ஆகும். நிதி ஒதுக்கீடு இல்லாததால் இவ்வேலையை எடுத்துச் செய்ய செயற்குறிப்பு ஏதும் இல்லை.

8—

ஆட்டையாம்பட்டி பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டுதல்

வினா எண் 4287—திரு. க. *அர்ச்சுனன்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆட்டையாம்பட்டி பேரூராட்சியில் பேருந்து நிலையத்திற்கு புதுக்கட்டிடம் கட்டுவதற்கான பேரூராட்சிக்கு சொந்தமான மைதானத்தை தனியார் ஆக்கிரமித்து வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) அவர்களை அப்புறப்படுத்தி அங்கு பேருந்து நிலையம் கட்டப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு.டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்பினை அகற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆக்கிரமிப்பை அகற்றியவுடன் பேருந்து நிலையம் கட்ட தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

9—

கீழக்கலங்கல் அருந்ததியர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 4645-திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்தில் கீழக்கலங்கல் கிராமத்திலுள்ள அருந்தியா மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்து செய்யப்பட வேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

10—

ஆண்டிக்காடு வடக்கில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 6483—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஆண்டிக்காடு வடக்கில் ஒரு மேல்நிலை நிர்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேதுபாவாசத்திரம்-ஆண்டிக்காடு கிராம குடிநீர்த் திட்டப் பணிகள் முடிந்து இயங்குவதற்கு தயாராக உள்ளது. இத்திட்டம் விரைவில் மக்களின் பயனுக்கு கொண்டுவரப்படும்.

11—

வீரக்குடியில் சாலைகளை மராமத்து செய்தல்

வினா எண் **6722**—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், மணக்காடு ஊராட்சி, வீரக்குடி ஆதிதிராவிடர் தெருவில் அமைக்கப்பட்ட மண்சாலைகளில் சிவப்புக் கப்பி அடித்து மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வீரக்குடி, மணக்காடு ஊராட்சியைச் சார்ந்தது. நடப்பு ஆண்டு ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் 1 கி.மீ. தூரத்திற்கு ரூபாய் 1,10,000 மதிப்பீட்டில் கருங்கல் ஜல்லி சாலை வேலை நடைபெறுகிறது. இவ்வேலையைத் தவிர வேறு வேலைகளைச் செய்திட நிதி ஒதுக்கீடு மற்றும் நிதி ஆதாரம் ஏதும் இல்லாததால் சாலை அமைத்தல் வேலையை செய்திட அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

12—

குருவிக்கரம்பை ஊராட்சியில் சாலை அமைத்தல்

வினா எண் **6741**—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக் கரம்பை ஊராட்சி, பெரியக்கள்ளங்காடு—பரம்பாடிக்குளம் வரை சாலை அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பெரியக்கள்ளங்காடு–பரம்பாடிக்குளம் சாலையின் நீளம் 1.6 கி.மீ. இது வண்டிப்பாதையாகவுள்ளது. பாதையின் இருபுறமும் பட்டா நிலமாகவுள்ளது. வண்டிப்பாதையை சாலையாக மாற்றி அகலப்படுத்த இயலாது. எனவே சாலை அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

13—

கஞ்சங்காட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 6748-திரு.ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சி, கஞ்சங்காட்டில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியில் மோட்டார் இல்லாததால் புதிய மோட்டார் வைத்து 30,000 காலன் கொள்ளளவு கொண்ட தொட்டியை விரிவுபடுத்திக் கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. தற்போதுள்ள தொட்டி துருப்பிடித்தும் கிணற்று நீர் அசுத்தமாகவும் உள்ளதால் குடிநீர் விநியோகம் இல்லை. நடப்பு நிதியாண்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு ஓ.எச்.டி.யுடன் கூடிய குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டு கட்டுமானப் பணிகள் முடிந்து திட்டம் விரைவில் பயனுக்கு வர உள்ளது. மேலும் பழைய தொட்டியை புதுப்பிக்கவோ பழைய மோட்டாரை புதுப்பிக்கவோ தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய விதிமுறையில் இடமில்லை.

14—

தமிழ்நாட்டிலுள்ள உள்ளாட்சி மன்றங்கள் விவரம்

வினா எண் 6861-திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொத்தம் உள்ளாட்சி மன்றங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) எத்தனை உள்ளாட்சி மன்றங்களுக்கு கட்டிடங்கள் உள்ளன?

(இ) கட்டிடம் இல்லாதவைகளுக்கும் கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஈ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் உள்ள மொத்த ஊராட்சிகள் 12,612.

(ஆ) சொந்தக் கட்டிடம் உள்ளவை 8522.

(இ) மற்றும் (ஈ): எஞ்சியுள்ள 4,090 ஊராட்சிகளுக்கும் நடப்பு 1993-94 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சொந்தக் கட்டிடம் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்ய வழிவகைகள் தெரிவிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

15—

வாலியக்காட்டில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 6963-திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், துறையூரைச் சேர்ந்த வாலியக்காட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தனியாக அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வாலியக்காடு கிராமம், துறையூர் குடியிருப்பின் ஒரு பகுதி ஆகும். வாலியக்காட்டில் தனியாக ஒரு மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி அமைப்பதற்கு செயற் குறிப்பு இல்லை. ஆனால் துறையூர் கிராமத்தில் தற்போது கட்டி முடிக்கப்பட்டுள்ள புதிய நீர்தேக்கத் தொட்டியில் இருந்து வாலியக்காட்டிற்கு குழாய் இணைப்பு மூலம் குடிநீர்வசதி அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

16—

பேராவூரணியில் குடிநீர் திட்டம் செயல்படுத்தல்

வினா எண் 7054—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி நகரத்தில் தொடங்கப்பட்ட குடிநீர் திட்ட வேலைகளை விரைவில் முடித்து தண்ணீர் சப்ளை செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி பேரூராட்சிக்கு ரூபாய் 86.36 இலட்சங்கள் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டம் நான்கு பகுதிகளாகப் பிரித்து, செயலாக்கப்பட்டு தற்போது குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

17—

கோட்டைக்காட்டில் கப்பிச்சாலை அமைத்தல்

வினா எண் 7122—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கோட்டைக்காடு ஆதிதிராவிடர் தெருவிற்குள் செல்லும் சாலையை மராமத்து செய்து கப்பிச் சாலையாக மாற்றிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், கோட்டைக்காடு ஆதிதிராவிடர் தெருவிற்கு செல்லும் சாலை கங்காதரபுரம் ஊராட்சியைச் சார்ந்தது. இதன் நீளம் 1 கி.மீ. இதில் 0.3 கி.மீ. சிகப்பு கப்பிச் சாலையாகவுள்ளது. மீதமுள்ள சாலையை சிகப்பு கப்பிச் சாலையாக மாற்ற ரூ. 66,000 தேவை. இங்குள்ள ஆதிதிராவிட மக்களுக்கு 1991-92-ம் ஆண்டில் 14 தொகுப்பு வீடுகள் ரூபாய் 2.33 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. ஒன்றியத்தில் போதிய நிதி வசதியில்லாத காரணத்தால் தற்போது கப்பிச் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

18—

வலச்சேரிக்காட்டில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 7189—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி, வலச்சேரிக்காட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சி, வலச்சேரிக்காட்டில் குடி நீர்த் திட்டப் பணிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டு பராமரிப்பிற்காக ஊராட்சி ஒன்றியத்திடம் 9/93ல் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

19—

ஈச்சன் விடுதியில் போர்வெல் அமைத்தல்

வினா எண் 7217—திரு.ஆர்.சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செருவா விடுதி வடக்குச் சேர்ந்த ஈச்சன் விடுதி தெற்கில் வாழும் முத்தரையர் மக்களுக்கு ஒரு போர்வெல் போட்டு கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

செருவாவிடுதி (வடக்கு) ஊராட்சியிலுள்ள ஈச்சல் விடுதி குடிநீர்த் திட்டப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்படும் தருவாயிலுள்ளது.

20—

பொக்கன்விடுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்.

வினா எண் 7243—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், பொக்கன்விடுதி வடக்கில் ஒரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பொக்கன்விடுதி வடக்கில் தற்போது 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. மற்ற பணிகளும் முடிவடைந்து விட்டன. விரைவில் மின் இணைப்பு பெற்று திட்டம் பயனுக்கு கொண்டு வரப்படும்.

21—

கீழக்காட்டில் சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 7253—திரு. *ஆர்.சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், மாவடுக்குறிச்சி ஊராட்சி, கீழக்காட்டில் சி.எம்.பி. வாய்க்காலிலிருந்து பட்டுக்கோட்டை மெயின் சானல் வரை உள்ள சாலையை செப்பனிட்டு கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

மாவடுக்குறிச்சி ஊராட்சி, கீழக்காட்டில் சி.எம்.பி. வாய்க்காலில் இருந்து பட்டுக்கோட்டை மெயின் சானல் வரையுள்ள சாலையை கப்பிச் சாலையாக மாற்றித்தரும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது ஏதுமில்லை.

22—

ஆணைக்காட்டில் போர்வெல் அமைத்தல்

வினா எண் 7260—திரு. *ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒனறியம், காலகம் ஊராட்சி, ஆணைக்காடு ஆதிதிராவிடர் தெருவில் ஒரு போர் வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

காலகம் ஊராட்சி, ஆணைக்காடு ஆதிதிராவிடர் தெருவில் சுமார் 100 மக்கட் தொகை உள்ளது. ஆணைக்காடு குடி நீர்த் திட்டம் மூலம் ஆணைக்காடு ஆதிதிராவிடர் தெருவிற்கும் குடிநீர் வழங்க ஆவன செய்யப்பட்டுள்ளது.

23—

கொன்றைக்காட்டில் போர்வெல் அமைத்தல்

வினா எண் 7285—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், கொன்றைக்காடு மேல குடியிருப்புக்கு ஒரு போர்வெல் போட்டு கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

24—

புக்கரம்பைக்கு ஊராட்சிமன்றக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 7350—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புக்கரம்பைக்கு ஊராட்சி மன்றக் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், புக்கரம்பை ஊராட்சிக்கு 1993-94 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் ரூபாய் 87,000 மதிப்பீட்டில் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் அனுமதிக்கப்பட்டு கட்டிட வேலை நடைபெற்று வருகிறது.

25—

சின்னக்கழனி வாசலுக்கு மயான வசதி

வினா எண் 7413—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சின்னக் கழனி வாசலுக்கு மயான சாலையை பராமரித்தும் மயானத்திற்கு தகரக் கொட்டகை அமைத்தும் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கழனிவாசல் ஊராட்சி, சின்னக்கழனி வாசல் மயானச் சாலை 0.6 கி.மீ. நீளமுடையது. சிகப்பு கப்பிச் சாலை அமைக்க ரூ.66,000-ம் தகரக் கொட்டகை அமைக்க ரூ.14,000-ம் தேவை. மேற்படி ஊராட்சியின் சிறப்புத் தன்னிறைவு திட்டத்தில் ரூ.9.00 இலட்சத்திற்கு தார்ச்சாலையும், ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் ரூ.0.13 இலட்சமும், பயணிகள் நிழற்கொடை ரூ.7,000-ம் சிறுபாலம் ரூ.6,712-லும் அமைக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியத்தில் வேறு நிதி ஆதாரமில்லாததால் இச்சாலை மற்றும் மயானக் கொட்டகை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

26—

ராதா விளாகம் கிராமச்சாலையை செப்பனிடுதல்

வினா எண் 7672- செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி ராதாவிளாகம் கிராமச் சாலையை செப்பனிட்டு தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை வசதி செய்ய நிதி வசதி இல்லை.

27—

கொள்ளிடத்தில் பஸ் ஸ்டாப் அமைத்தல்

வினா எண் 8401—*திரு. து. மூர்த்தி:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் பெருநகர் கொள்ளிடத்தில் அரசு பஸ்கள் நின்று செல்லுகின்ற வகையில் கொள்ளிடத்தில் பஸ் ஸ்டாப் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

28—

சீவல சமுத்திரத்தில் காலனி வீடு கட்டுதல்

வினா எண் 8581—*திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் ஒன்றியம், சீவலசமுத்திரம் கிராமத்தில் உள்ள ஆதிதிராவிட பொதுமக்களுக்கு இலவச காலனி வீடு கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

1995 மார்ச் 14]

29—

துப்புரவுத் தொழிலாளர்கள் மற்றும் வாகன வசதிகளை அதிகரித்தல்

வினா எண் 8641—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மற்றும் நகராட்சிகளில் பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப துப்புரவுத் தொழிலாளர்கள் எண்ணிக்கை மற்றும் துப்புரவு வாகன வசதிகளை அதிகரித்தல் ஆகியவை குறித்து அரசு ஆய்வு நடத்தி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆய்வு நடத்தப்படவில்லை.

(ஆ) இருந்தாலும், சென்னை மாநகராட்சியில் பெருகிவரும் மக்கட் தொகைக்கேற்ப நவீன துப்புரவு வாகனங்கள் வாங்கப்பட்டுள்ளன. நகராட்சிகளில் துப்புரவு தொழிலாளர்கள் மற்றும் துப்புரவு வாகன வசதிகளை அதிகரிக்க பிரேரணை வந்தால், அதன் தேவை, நிதிநிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் பரிசீலித்து உத்தரவுகள் வழங்கப்படுகின்றன.

30—

அமுதாபுரத்தில் பள்ளிக்கூடத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 8659—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் ஒன்றியம் அமுதாபுரத்தில் உள்ள பள்ளிக் கூடமானது வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் கட்டிடம் கட்டிக் கொடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : ஆம். 1993-94ஆம் ஆண்டுக்கு அமுதாபுரம் கிராமத்தில் புதிதாகப் பள்ளிக் கட்டிடம் கட்ட ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

31—

தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்தல்

வினா எண் 8868—திரு. ஆ. கு. சீனிவாசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் 64 ஊராட்சிகளை உள்ளடக்கிய தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்தை நிர்வாக வசதிக்காகப் பிரிக்க வேண்டும் என்று 1986, 1989 ஆம் ஆண்டுகளில் மக்கள் மன்ற ஒன்றியக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அரசின் கவனத்திற்கு வந்ததா?

(ஆ) ஆம் எனில், பிரிக்கப்படும் பகுதி ஊராட்சி ஒன்றியம் தேசூரை மையமாக வைத்து அமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம்.செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிப்பது தொடர்பாக செயற்குறிப்பு பெறப்பட்டு அரசு ஆய்வு செய்தது. தற்பொழுது தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் திருத்தியமைக்கப்படும் வரை ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்க தடையாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) எனவே, தெள்ளார் ஊராட்சி ஒன்றியத்தைப் பிரிப்பது பற்றி தற்போது நடவடிக்கை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது.

32—

புதுக்கோட்டை தொகுதியில் சாலைகள் மேம்பாடு செய்தல்

வினா எண் 9811—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

(அ) புதுகை தொகுதியில் உள்ள சுந்தர்வக்கோட்டை அம்புகோவில் சாலையில் காட்டு நாவல் விளக்கில் இருந்து கணபதிபுரம், தொண்டமான் ஊரணி, மீனம்பட்டி வழியாக மோலுடையான்பட்டி விலக்கு வரை சாலை மேம்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : சட்டமன்ற வினாவில் கேட்கப்பட்ட கணபதிபுரம்-பெரிச்சி வன்னியம்பட்டி சாலை, வண்ணாரப் பட்டி வடக்கு, தொண்டமான் ஊரணி சாலை, அண்ணா நகர் சாலைகள் வேலை முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள வேலைகள் நிதி நிலைக்கேற்ப வரும் ஆண்டுகளில் எடுத்துக் கொள்ளப்படும்.

33—

குன்றாண்டார் கோயில் ஒன்றியத்தில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்

வினா எண் 10217—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குன்றாண்டார் கோயில் ஒன்றியத்தில் கோண்டாம்பட்டி கங்கம்பட்டி, புதுப்பட்டி, பெரம்பூர் போன்ற கிராமங்களுக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைத்து குடிநீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம்.செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

புதுப்பட்டி பெரம்பூர், கோண்டாம்பட்டி ஆகிய கிராமங்களில் முழு அளவு குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது. கங்கம்பட்டி கிராமத்திற்கு வரும் நிதியாண்டுகளில் நிதிநிலைமைக் கேற்ப முன்னுரிமை அடிப்படையில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க ஆவன செய்யப்படும்.

[1995 மார்ச் 14

34—

புரசை தொகுதியிலுள்ள பள்ளிகளில் காலிப் பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் **10396—**திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புரசை தொகுதியிலுள்ள மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள பணியிடங்களின் விவரம் என்ன?

(ஆ) காலியாக உள்ள பணியிடங்களைப் பூர்த்தி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) சென்னை மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேல் நிலைப்பள்ளிகள். (1)	காலி பணியிடங்கள் விவரம். (2)
1. மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி, பந்தர் தோட்டம்.	காலி பணியிடங்கள் இல்லை.
2. மாநகராட்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளி, நெ.53, மார்க்கெட் தெரு, பெரம்பூர், சென்னை-11.	பட்டதாரி ஆசிரியர் வரலாறு-1 இளநிலை ஆசிரியர்-4.
3. மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி, நம்மாழ்வார்ப் பேட்டை, சென்னை.	தமிழாசிரியர்-1 தெலுங்கு மொழி ஆசிரியர் -1 இடைநிலை ஆசிரியர் -1
4. மாநகராட்சி ஆண்கள் மேல் நிலைப்பள்ளி, கெங்காதீஸ்வரர் கோவில் தெரு, புரசைவாக்கம்.	முதுகலை தமிழ் ஆசிரியர்-1
5. மாநகராட்சி பெண்கள் மேல் நிலைப்பள்ளி, அமைந்தகரை, சென்னை-29.	தமிழ் ஆசிரியர் -3 இடை நிலை ஆசிரியர் -6 உடற் பயிற்சி ஆசிரியர் -1 தையற்கலை ஆசிரியர் -1 உதவியாளர் -1

1995 மார்ச் 14]

அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள். (1)	காலி பணியிடங்கள் விவரம். (2)
1. ஊ.பு.அ. சௌந்தர பாண்டியன் மேல்நிலைப் பள்ளி, அயனாவரம், சென்னை-23.	இடைநிலையாசிரியர் பணியிடம்-2
2. பனந்தோப்பு இரயில்வே காலனி மேல்நிலைப் பள்ளி, சென்னை-23.	உடற் கல்வியாசிரியர் பணி யிடம்-1
3. இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை மேல்நிலைப்பள்ளி, சென்னை-38.	பி.டி. ஆசிரியர் பணியிடம் -2 இடைநிலையாசிரியர் பணி யிடம்-4.
4. கோட்டி எம். அப்பு செட்டியார் உயர்நிலைப் பள்ளி, கொன்னூர் நெடுஞ்சாலை, சென்னை-11.	உடற் கல்வியாசிரியர் பணி யிடம்-1 அலுவலக உதவியாளர் பணி யிடம்.-1 காவலர் பணியிடம்-1

(ஆ) இந்த காலியான இடங்களைப் பூர்த்தி செய்ய சென்னை மாநகராட்சி ஆணையரும், பள்ளி கல்வி இயக்குநரும் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

35—

கழனிவாசலில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 10441—திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், குத்தாலம் ஒன்றியம், கழனி வாசலில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்துத்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கழனிவாசல் கிராமத்திற்கு 1992-93 ஆம் நிதியாண்டில் மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டு தற்போது ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பிலுள்ளது.

36—

திருமுல்லைவாசல் நகரப் பஞ்சாயத்தைப் பிரித்தல்

வினா எண் 10541—திரு. து. மூர்த்தி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமுல்லைவாசல் நகர பஞ்சாயத்தை பிரிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) திருமுல்லைவாசல், ராதாநல்லூர், வழுதலைகுடி என இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : இல்லை

(இ) வினா எழாது.

37—

சாத்தப்பாடி காலனியில் சமுதாயக்கூடம் அமைத்தல்

வினா எண் 10783-செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள சாத்தப்பாடி காலனியில் சமுதாயக் கூடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

38—

சேலம் மாவட்டத்தை ஒருங்கிணைந்த வறட்சி நிவாரணப் பணிகள் திட்டத்தில் சேர்த்தல்

வினா எண் 11053—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

(அ) எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் 'ஒருங்கிணைந்த வறட்சி நிவாரணப்பணிகள் (Intergrated Drought Management)' என்ற திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டமும் சேர்க்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை *அமைச்சர்:*

(அ) எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் 'ஒருங்கிணைந்த வறட்சி நிவாரணப் பணிகள்' என்ற தலைப்பின் கீழ் சேலம் மாவட்டம் சேர்க்கப்படவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

39—

குன்றாண்டார் கோவில் ஒன்றியத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 11181—*திரு. சி. சுவாமிநாதன் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்றாண்டார் கோவில் ஒன்றியத்திலுள்ள குன்றாண்டார் கோவில், கிள்ளனூர், கோண்டாம்பட்டி போன்ற கிராமங்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை *அமைச்சர்:*

(அ) ஆம்.

(ஆ) குன்றாண்டார் கோவில் கிராமத்திற்கு திட்டம் அமைக்கும் பொருட்டு நீராதாரம் 1993-94-இல் தேர்வு செய்யப்பட்டு தற்போது அதற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தை 1994-95-ஆம் ஆண்டிற்குள் நிறைவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. கிள்ளனூர் கிராமத்தில் குடிநீர்த் திட்டப் பணிகள்

நடப்பிலுள்ளது. 1994 இறுதிக்குள் மக்களின் பயனுக்கு கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கோண்டாம்பட்டி முழு அளவு குடிநீர் வசதி பெற்ற கிராமமாகும்.

40—

குன்றாண்டார் கோவில் ஒன்றியத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

வினா எண் 11291—*திரு. சி. சுவாமிநாதன் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குண்றாண்டார் கோவில் ஒன்றியத்தில் மில்லத்துப்பட்டி, வந்தானகக்கோட்டை, பாலாபட்டி போன்ற இடங்களுக்கு ஆழ்குழாய் கிணறு அமைத்து குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை, மேற்படி கிராமங்கள் முழு அளவு குடிநீர் வசதி பெற்றவையாகும்.

41—

குன்றாண்டார் கோவில் ஒன்றியத்தில் குடிநீர் வழங்க திட்டம்

வினா எண் 11292—*திரு. சி. சுவாமிநாதன் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குண்றாண்டார் கோவில் ஒன்றியம் கொப்பம்பட்டி, தெம்மாவூர், மின்னாத்தூர் போன்ற இடங்களில் ஆழ்குழாய் கிணறு அமைத்து குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை, மேற்படி கிராமங்கள் குடிநீர் முழு அளவு வசதி பெற்றவை என்பதால் புதிய குடிநீர் திட்டம் தேவையில்லை.

1995 மார்ச் 14]

42—

அதிராம்பட்டினம்-மகிழன்கோட்டை சாலையில் கல்வெர்ட் அமைத்தல்

வினா எண் 11449—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி பட்டுக்கோட்டை ஒன்றியம் அதிராம்பட்டினம்-மகிழன்கோட்டை சாலையில் 1992-93-ல் கல்வெர்ட் அமைத்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

அதிராம்பட்டினம்-மகிழன்கோட்டை சாலையில் 1991-92-ம் ஆண்டில் ரூ.10,000 செலவில் கல்வெர்ட் கட்டி முடிக்கப் பட்டுவிட்டது. இந்நிலையில் இக்கேள்விக்கு இடமில்லை.

43—

கரம்பயம்-வேப்பன்காடு சாலையைப் பராமரிக்கத் திட்டம்

வினா எண் 11464—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி பட்டுக்கோட்டை ஒன்றியம், கரம்பயம்—வேப்பன்காடு சாலையை 1992-93-ல் தார்சாலையாக மாற்றிப் பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கரம்பயம்-வேப்பங்காடு சாலை ஒன்றிய சாலையாகும். இதன் நீளம் 5.0 கி.மீ. ஆகும். இதில் 2.2 கி.மீ. நீளம் ஏற்கனவே தார்ச்சாலையாக மாற்றப்பட்டுள்ளது. மீதியுள்ள 2.8 கி.மீ. நீளம் சாலையை கிராம சாலை கோட்டம் மூலம் தார்ச்சாலையாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

44—

பண்ணவயல்-கழுகுப்புளிக்காடு சாலையைப் பராமரிக்கத் திட்டம்

வினா எண் 11479—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி பட்டுக்கோட்டை ஒன்றியம் பண்ணவயல்-கழுகுப்புளிக்காடு சாலையை 1992-93ல் தார்ச் சாலையாக மாற்றிப் பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பண்ணைவயல்-கழுகுப்புளிக்காடு சாலையின் நீளம் 2.2 கி.மீ இது ஒரு இனம் பிரிக்கப்படாத சாலை. இதில் 1.2 கி.மீ. ரூ.1.50 இலட்சம் செலவில் தார்ச் சாலையாக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள சாலையை தார்ச்சாலையாக மாற்ற பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் தார்சாலையாக்கும் செயற்குறிப்பு அரசிடம் தற்போது இல்லை.

45—

திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தில் சாலையில் கல்வெர்ட் அமைத்தல்

வினா எண் 11598—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஊராட்சி ஒன்றியம் காயாவூர்-அதம்பை, காயாவூர்-பாதரங்கோட்டை-வெங்கரை சாலையில் 1992-93ல் கல்வெர்ட் அமைத்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

காயாவூர்-அதம்பை, காயாவூர்-பாதரங்கோட்டை-வெங்கரை சாலையில் 1992-93-ல் கல்வெர்ட் அமைத்து கொடுக்க திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தில் நிதி வசதி இல்லாததால் கல்வெர்ட் அமைத்து கொடுக்கும் குறிப்பு அரசிடம் இல்லை.

1995 மார்ச் 14]

46—

காயாவூர் அதம்பை ஊராட்சிக்கு மன்றக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 11604—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஊராட்சி ஒன்றியம், காயாவூர் மற்றும் அதம்பை ஊராட்சிக்கு 1992-93-ல் ஊராட்சி மன்றக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஊராட்சி ஒன்றியம், அதம்பை ஊராட்சிக்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் 1992-93 ஆம் ஆண்டில் அலுவலகக் கட்டிடம் கட்டும் பணி நடந்து வருகிறது. காயாவூர் ஊராட்சிக்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் 1993-94 ஆம் ஆண்டு கூடுதல் திட்ட ஒதுக்கீட்டில் அலுவலகக் கட்டிடம் கட்டும் பணி அனுமதிக்கப்பட்டு உள்ளது.

47—

சஞ்சய் கொள்ளை-சூரன்காடு சாலையைக் கப்பிச் சாலையாக மாற்றுதல்

வினா எண் 11637—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், சஞ்சய் கொள்ளை -சூரன்காடு சாலையை 1992-93-ல் செம்மண் கப்பிச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சஞ்சய் கொள்ளை-சூரன்காடு சாலையின் நீளம் 0.8 கி.மீ. ஆகும். அச்சாலை தற்போது செம்மண் கப்பிச் சாலையாக உள்ளது. அச்சாலையில் சிற்சில இடங்களில் சில குழிகள் உள்ளன. அது சீர்செய்யப்பட்டு வருகிறது.

48—

கழுகுப்புளிக்காடு—துவரமடை சாலையைக் கப்பிச் சாலையாக மாற்றுதல்

வினா எண் 11640—**திரு. ஆர். சிங்காரம்** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், கழுகுப்புளிக்காடு-துவரமடை சாலையில் 1992-93-ல் செம்மண் கப்பிச் சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கழுகுப்புளிக்காடு-துவரமடை சாலையின் நீளம் 0.6 கி.மீ. இது ஏற்கனவே செம்மண் கப்பிச் சாலையாக உள்ளது. எனவே இவ்வினாவுக்கு இடமில்லை.

49—

ஏரிப்புறக்கரைச் சாலையைக் கப்பிச் சாலையாக்குதல்

வினா எண் 11644-**திரு. ஆர். சிங்காரம்** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம் ஏரிப்புறக்கரை கிராமச் சாலையை 1992-93-ல் செம்மண் கப்பிச் சாலையாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஏரிப்புறக்கரை கிராமச் சாலை முத்துப்பேட்டை — மீமிசல் நெடுஞ்சாலையில் பிரிந்து செல்கிறது. இது ஒரு இனம் பிரிக்கப்படாத சாலை. இதன் நீளம் 1.2 கி.மீ. இதல் 0.8 கி.மீ. செம்மண் கப்பிச் சாலையாகவுள்ளது. மீதமுள்ள சாலையை கப்பிச் சாலையாக மாற்ற பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதிவசதியில்லை யாதலால் கப்பிச் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடமில்லை.

1995 மார்ச் 14]

50—

கும்மங்குளத்தில் குடிநீர்த் தொட்டி கட்டுதல்.

வினா எண் 11833—*திரு. எஸ். சண்முகநாதன் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஒன்றியம், கும்மங்குளம் கிராமத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள குடிநீர்த் தொட்டியை விரைவில் திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஒன்றியம், கும்மங்குளம் கிராமத்திற்கான குடிநீர்த் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டு குடிநீர் விநியோகிக்க ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

51—

சொர்ணக்காட்டில் பாலம் கட்டுதல்

வினா எண் 11909—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், சொர்ணக்காடு ஆதிதிராவிடர் தெருவில் சி.எம்.பி. வாய்க்காலில் 1992-93-ல் ஒரு பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் கட்ட 1992-93-ம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் ரூ. 32,000 மதிப்பீட்டில் பாலம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் கல்லணை கால்வாய் கோட்ட செயற்பொறியாளரின் அனுமதியுடன் பாலம் கட்டப்படவுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[1995 மார்ச் 14

52—

காட்டாத்தியில் சாலையை மராமத்து செய்தல்

வினா எண் 11982- திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காட்டாத்தியிலிருந்து கா. உஞ்சிய விடுதி ஆதிதிராவிடர் தெருவிற்குச் செல்லும் கிராம குறுக்குச் சாலையை 1992-93-ல் மராமத்து செய்து கப்பிச் சாலையாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த உஞ்சிய விடுதி ஆதிதிராவிடர் தெருவிற்கும் காட்டாத்தி ஆதிதிராவிடர் குடியிருப்பிற்கும் இடையில் 100 மீட்டர் நீளம் தனியாருக்கு உரிமமாகி பட்டா நிலமாக உள்ளதால், இடையிலுள்ள 100 மீட்டர் நீளத்தில் சாலை அமைக்க இயலாத நிலையுள்ளது.

53—

சேதுபாவாசத்திரத்தில் கப்பிச்சாலை அமைத்தல்

வினா எண் 12061—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் குருவிக் கரம்பை (வ) கடைவீதியிலிருந்து மாரியம்மன் திருக்கோவிலுக்குச் செல்லும் மண்சாலையை 1992-93-ம் ஆண்டில் செப்பனிட்டு சீரமைத்துத்தரவும், அதை கப்பிச் சாலையாக மாற்றித் தரவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை 0.4 கி.மீ. நீளமுள்ள சிகப்பு கப்பிச் சாலையாகும். மேலும் சிகப்பு கப்பிப் போட ஊராட்சியில் நிதிவசதி இல்லாததால் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

1995 மார்ச் 14]

54—

படப்பனார் வயலில் சாலையைக் கப்பிச்சாலையாக மாற்றுதல்

வினா எண் 12063—**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், படப்பானர்வயல் ஊருக்குள் செல்லும் சாலையை கப்பிச்சாலையாக மாற்றித்தர 1992-93-ம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலைப் பணியை மேற்கொள்ள பேராவூரணி ஊராட்சியில் போதிய நிதிவசதி இல்லாததால் அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

55—

அதம்பையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 12067—**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை (தெ) ஆதிதிராவிடர்களுக்கு 1992-93-ல் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

56—

நரியங்காடு கிராமத்தில் போர்வெல் அமைத்தல்

வினா எண் 12068—**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், திருச்சி சிற்றம்பலம் ஊராட்சி நரியங்காடு இடையர் தெருவில் வடக்குப் பகுதியில் ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் 1992-93-ல் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை, இடையர் தெரு நரியங்காடு கிராமத்தைச் சேர்ந்தது. இக்கிராமத்திற்கு குடிநீர் வழங்கும் பொருட்டு நரியங்காடு குடிநீர்த் திட்டத்திலிருந்து 4 பொது நீர் ஊற்று மேடை அமைக்கப்பட்டுள்ளது. இதுவே போதுமானதாகும்.

57—

பள்ளி ஓடை வயலில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 12227—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், எஸ்.ஆர். பட்டினத்தைச் சேர்ந்த பள்ளி ஓடை வயலில் 1992-93-ல் ஒரு மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

58—

வெட்டன்விடுதியில் தெற்குக் காட்டுக்கு பாதை அமைத்தல்

வினா எண் 12305—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதியில் தெற்குக் காட்டுக்கு பாதை அமைத்துக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சட்ட மன்றக் கேள்வியில் கேட்கப்பட்ட பாதை அமைக்க நிதி வசதி இல்லை. அதனால் இப்பொழுது சாலை அமைக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

1995 மார்ச் 14]

59—

பெருமகளூர் பேரூராட்சியில் ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைத்தல்

வினா எண் **12343—**திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் பேரூராட்சி, ஆர். கே. நகர் சாலை ஓரத்தில் குடியிருப்பவர்களுக்கு 1992-93-ல் ஒரு ஆழ்துளைக் குழாய்க் கிணறு போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

60—

திருப்பந்துரை ஊராட்சியில் மேல்நிலைத்தொட்டி அமைத்தல்

வினா எண் **12663—**திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், திருப்பந்துரை ஊராட்சியில் மேல்நிலைத் தொட்டி அமைத்துத் தர 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இதற்கான திட்டம் 1992-93-ல் ரூ. 4.70 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. திட்டத்திற்குத் தேவாயான நீர் ஆதாரம் (Source) உருவாக்கப்பட்டுள்ளது. நீர்த்தேக்கத் தொட்டி, நீரேற்று நிலையம், குழாய் பதிக்கும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்டு விரைவில் களப்பணிகள் துவக்கப்படவுள்ளன.

61—

பைங்கால் தொடக்கப்பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 12921—**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பைங்கால் தொடக்கப்பள்ளிக்கு 1992-93-ல் கூடுதல் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், பைங்கால் தொடக்கப் பள்ளிக்கு 1992-93-ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் ரூ. 1,31,000 மதிப்பீட்டில் ஒரு கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

62—

இடையாத்தியில் நிழற்குடை அமைத்தல்

வினா எண். 13038—**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (கி) அருகில் ஆதிதிராவிடர் தெரு கொடிமரம் அருகில் ஒரு போக்குவரத்து நிழற்குடை அமைத்துக் கொடுக்க 1992-93-ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், இடையாத்தி (கிழக்கு) கொடிமரம் அருகில் நிழற்குடை அமைத்தல் குறித்து நடப்பு ஆண்டில் திட்டம் எதுவும் இல்லை. பரிசீலனை செய்து, வரும் ஆண்டுகளில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நிழற்குடை அமைத்துக் கொடுக்கப்படும். நிழற்குடை அமைக்க மதிப்பீடு தொகை ரூ. 30,000 ஆகும்.

1995 மார்ச் 14]

63—

கீழக்குறிச்சியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

வினா எண் 13442—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, மதுக்கூர் ஒன்றியம், கீழக்குறிச்சி (வடக்கு) தெருவிற்கு ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

64—

பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்.

வினா எண் 13413—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உள்ளூர் பிள்ளையார் கோயில் தெருவில் 1992-93-ல் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

65—

கா.உஞ்சி விடுதியில் மேல்நிலைத்தொட்டி அமைத்தல்

வினா எண் 13436—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம் கா. உஞ்சி விடுதியில் 1992-93-ல் மேல்நிலைத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், கா.உஞ்சி விடுதிக்கு குடிநீர் வழங்கும் பொருட்டு எடுத்துக் கொள்ளப்பட்ட மின்விசைத் திட்டத்தின் அனைத்து கட்டுமானப் பணிகளும் நிறைவுற்றன. மின்இணைப்பு பெறப்பட்டவுடன் திட்டம் விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

66—

பெருமகளூர் பேரூராட்சியில் கையிறைப்பான் அமைத்தல்

வினா எண் 14020—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணித் தொகுதி, பெருமகளூர் பேரூராட்சி, வள்ளுவர் நகரில் கையிறைப்பான் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

67—

மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி வடகாட்டில் அமைத்தல்

வினா எண் 14030—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், வடகாடு ஆதி திராவிடர் தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து கொடுக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நடப்பு நிதியாண்டில் வடகாடு ஆதிதிராவிடர் தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்கும் திட்டம் ஏதுமில்லை. வடகாடு ஆதி திராவிடர் தெருவிலுள்ள கையிறைப்பான் ஊராட்சி ஒன்றியப் பராமரிப்பில் இருப்பதால் அப்பழுதை நிவர்த்தி செய்து கொடுக்க ஆணையர், ஊராட்சி ஒன்றியம், திருவரங்குளம் அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

68—

பின்னவாசல் ஊராட்சியைப் பிரித்தல்

வினா எண் 14034—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பின்ன வாசல் ஊராட்சியைச் சேர்ந்த சித்தாதிக்காட்டை தனி ஊராட்சியாகப் பிரிக்க 1992-93-ம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

69—

எட்டாம்குளத்திற்கு நீர்த்தேக்க மேல்நிலைத் தொட்டி கட்டுதல்

வினா எண் 14055—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, எட்டாங்குளம் கிராமத்திற்கு நீர்த்தேக்க மேல்நிலைத் தொட்டி கட்டித்தர 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை.—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆலங்குளம் தொகுதி, எட்டாங்குளம் கிராமத்திற்கு குடிநீர்த் திட்டம் அமைக்க இரண்டு ஆழ்துளைக் கிணறுகளை நீராதாரமாகக் கொண்டு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட 1992-93-ஆம் நிதியாண்டில் திட்டமிடப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் நீர் உந்து நிலையம், நீர் உந்து குழாய் மற்றும் பகிர்மானக் குழாய் பதித்தல் முதலிய வேலைகள் அனைத்தும் 1993-94-ஆம் நிதியாண்டில் செய்து முடிக்கப்பட்டது. ஒரு ஆழ்துளைக் கிணற்றில் மின்விசை மோட்டார் பொருத்தப்பட்டு திட்டம் மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இரண்டாவது ஆழ்குழாய்க் கிணற்றில் மின் மோட்டார் பொருத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

70—

பாலகிருஷ்ணாபுரத்திற்குத் தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 14056—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி ஒன்றியம் பாலகிருஷ்ணாபுரத்திற்கு தார்ச்சாலை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை.—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஆயின்குடி தெற்கிலிருந்து மாத்தூர் ராமசாமிபுரம்வரை தார்ச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மாத்தூர் இராமசாமிபுரத்திலிருந்து பாலகிருஷ்ணாபுரம்வரை தார்ச்சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படவில்லை.

71—

சின்னரெட்டவயல் மெயின் சாலையில் நிழற்குடை அமைத்தல்

வினா எண் 14303—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம் சின்னரெட்டவயல் மெயின் சாலையில் 1992-93-ல் நிழற்குடை ஒன்று அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

72—

சாந்தாம்பேட்டையில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

வினா எண் 14311—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவசத்திரம் ஒன்றியம், சாந்தாம் பேட்டையில் தென்பாதியில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

சாந்தாம் பேட்டையில் நிறுவப்பட்டுள்ள குடிநீர்த்திட்டத்தின் மூலம் சாந்தாம்பேட்டை தென் பகுதிக்கும் குடிநீர் வழங்க ஆவன செய்யப்பட்டுள்ளதால், இப்பகுதிக்கு தனியாக ஆழ்க்குழாய்க் கிணறு அமைக்கத் தேவையில்லை.

73—

காயாவூர் ஊராட்சியைப் பேராவூரணி ஒன்றியத்துடன் இணைத்தல்

வினா எண் 14323—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், காயாவூர் ஊராட்சியைப் பிரித்து 1992-93-ல் பேராவூரணி ஒன்றியத்தில் இணைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

74—

நாடியம் கிராமத்தில் கைப்பம்பு அமைத்தல்

வினா எண் 14343—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, நாடியம் கிராமத்தில் 1-வது வார்டில் குளக்கரை அருகில் கைப்பம்பு அமைக்க 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நாடியம் ஊராட்சி, நாடியம் கிராமம் 1-வது வார்டு குளக்கரையின் அருகில் 100 மக்கட் தொகை உள்ளது. இப்பகுதியில் நாடியம் குடிநீர் திட்டத்திலிருந்து ஒரு குடிநீர் மேடை அமைக்கப்பெற்று குடிநீர் விநியோகமாகிறது. இதுவே போதுமானதாகும்.

75—

பேராவூரணி ஒன்றியத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 14793-திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா?

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆத்தூரில், 1992-93-இல் பெரிய அளவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

76—

திருவிடைமருதூர் ஒன்றியத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 14800—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம், திருப்பந்துரை, மாத்தூர், பெரப்படி ஆகிய ஊராட்சிகளில் 1992-93-இல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம், திருப்பந்துரை மற்றும் பெரப்படி ஆகிய இரு குடிநீர் திட்டங்களும் 1994-ஆம் ஆண்டு இறுதிக்குள்ளும், மாத்தூர் குடி நீர் திட்டம் 1995-ஆம் ஆண்டு இறுதிக்குள்ளும் முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

77—

செங்கிப்பட்டியில் குடிதண்ணீர் வழங்கத் திட்டம்

வினா எண் 15045—திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூதலூர் ஒன்றியத்தில் செங்கிப்பட்டியில் உள்ள ஆதி திராவிடர் காலனிகளுக்கு குடிதண்ணீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): செங்கிப்பட்டி குடியிருப்புக்கு எல்.ஐ.சி. மூலம் ரூ. 7.40 இலட்சத்திற்கு குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

1,00,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி நடைபெற்று வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் காலனியில் 750 மீட்டர் நிலத்திற்கு பகிர்மானக் குழாய் பதித்தும், 5 எண்ணிக்கை பொதுக் குழாய்கள் அமைத்தும் குடிநீர் வசதி தரப்பட உள்ளது.

78—

சாதயம்பட்டியில் குடி தண்ணீர் வழங்கும் திட்டம்

வினா எண் 15046—திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூதலூர் ஒன்றியம், ஆவாரம்பட்டி ஊராட்சி சாதயம் பட்டியில் உள்ள ஆதிதிராவிடர் காலனிக்கு குடிதண்ணீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

79—

பூதலூர் ஒன்றியத்தில் குடிநீர் வழங்கத் திட்டம்

வினா எண் 15048-திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(ஆ) பூதலூர் ஒன்றியம், ஆதிதிராவிடர் காலனிக்கு குடி தண்ணீர் வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : பூதலூர் குடியிருப்புக்கு 1992-93-இல் எல்.ஐ.சி. திட்டத்தின் கீழ் ரூ. 6.64 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் செயலுக்கு

வினா எண் 35042—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், தும்பிவாடி கிராமம் புரவிப்பாளையத்தில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

91—

க. பரமத்தி ஊராட்சியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் **35043**—*திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், நடந்தை கீழ்பாகம் கிராமம், குப்பம்பாளையம் ஆதிதிராவிடர் குடியிருப்புக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

92—

வெட்டிக்காரன்பட்டியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் **35044**—*திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாந்தோணி ஊராட்சி ஒன்றியம், பாகநத்தம் கிராமம், வெட்டிக்காரன்பட்டியில் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

93—

பெரியமஞ்சுவளி கிராமத்தில் வீடுகள் கட்டுதல்

வினா எண் 35045—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், பெரியமஞ்சுவளி கிராமம், நந்தால்நாயக்கனூரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

94—

அரவக்குறிச்சியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 35047—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி ஒன்றியம், அம்மாபட்டி கிராமம், கஸ்பா அம்மாப்பட்டியில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

95—

சின்னவளைய பாளையத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் **35048—***திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், சின்னவளையபாளையம், ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

96—

பெத்தாட்சி நகரில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் **35051—***திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், எருமார்பட்டி கிராமம், பெத்தாட்சி நகர் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

97—

கோடிக்காடு பகுதியில் தொகுப்பு வீடுகள்

வினா எண் 36267—திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதி, கோடிக்காடு பகுதியில் வசிக்கும் ஆதிவாசிகளுக்கு சிறப்புத் திட்ட வாயிலாக தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், திட்ட விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படுகிறது. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

98—

தூத்துக்குடி தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 36466—திரு. வி. பி. ஆர். ரமேஷ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி தொகுதி, பெரியநாயகிபுரம் சோர்டிஸ்புரம், முத்தையாபுரம், தூத்துக்குடி வடக்கு பகுதி, வீரநாயக்கன் தட்டு ஆகிய பகுதிகளில் வாழும் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

99—

செருவண்டூரில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 36735—திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், நெடுஞ்சேரி ஊராட்சி, செருவண்டூர் கீழ்த் தெருவில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச்

செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

100—

திருநெல்வேலி தொகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 37579—திரு. டி. வேலையா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி, சீதபற்பநல்லூர் ஊராட்சி மற்றும் வெள்ளாளங்குளம் ஊராட்சி, வெட்டுவான்குளம் ஆகிய இடங்களில் ஆதிதிராவிடர் பகுதியில் தொகுப்பு வீடுகள் கட்டித் தர நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

நான்காம் பட்டியல்

1—

வேலாக்குடியில் குடிமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 6429—திரு.ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம் புலிக்காடு ஊராட்சி, வேலாக்குடியிலுள்ள நீண்டநாள் குடியிருந்து வரும் மக்களுக்குக் குடிமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

இல்லை. ஏனெனில், அம்மக்கள் குடியிருந்துவரும் நிலம் தனி நபர்களுக்குச் சொந்தமானதாகும்.

2—

புதுப்பட்டினத்தில் குடிமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 6610—திரு.ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், புதுப்பட்டினத்திலுள்ள சர்க்கார் புறம்போக்கு நிலமற்ற ஏழைகளுக்குக் குடிமனைப்பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

தஞ்சை மாவட்டம், புதுப்பட்டினத்திலுள்ள புல எண் 19-பி2, 20-1, 21-2 ஆகிய புஞ்சை தரிசு நிலங்களை வீட்டு மனையாக்கி தற்போது கடற்கரை ஓரமாக குடியிருந்துவரும் மீனவர் குடும்பங்களுக்கு ஒப்படை வழங்க மாவட்ட வருவாய்த் துறையினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3—

முடச்சிக்காடு ஊராட்சியில் குடிமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 6641—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முடச்சிக்காடு ஊராட்சி, புதுக்குடியிருப்பில் குடியிருக்கும் வசதியற்றோருக்குக் குடிமனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், சேதுபாவா சத்திரம் ஒன்றியம், முடச்சிக்காடு ஊராட்சியைச் சேர்ந்த புதுக்குடியிருப்பில் வசித்து வருபவர்களுக்குப் பட்டா வழங்க நிலங்கள் தேர்தெடுக்கப்பட்டு, "புஞ்சை தரிசு" என வகைப்பாடு கொண்டுள்ள அந்நிலங்களை "நத்தம் புறம்போக்கு" என வகைமாற்றம் செய்ய மாவட்ட வருவாய்த் துறையால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

4—

சேதுபாவாசத்திரம் கிராம சத்திரக் கட்டிடத்தைப் பழுதுபார்த்தல்

வினா எண் 12900—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேதுபாவா சத்திரம் கிராம சத்திரக் கட்டிடத்தைப் பழுது பார்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

அரசுக்குச் சொந்தமாக சேதுபாவாசத்திரம் கிராமத்தில் கிராம சத்திரக் கட்டிடம் ஏதும் இல்லை.

5—

பூதலூர் ஒன்றியத்தில் பட்டா வழங்குதல்

வினா எண் 15172—திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூதலூர் ஒன்றியம் 10 கடம்பக்குடி உள்ளாட்சி, இந்திரா நகரில் வசிக்கும் கூட்டுக் குடியிருப்புவாசிகளுக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு.எஸ்.டி.சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள சங்கிலி ஆண்டபுரம், புதுத்தெரு என்ற மாற்றுப் பெயர்கள் உள்ள கடம்பக்குடி இந்திரா நகரில் குடியிருப்பவர்களுக்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்பே வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. தற்போது நத்தம் சர்வேயில் தனிப் பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது.

6—

கொடுமுடி ஒன்றியத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 19204—*திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம் பாசூர் கிராமத்திலுள்ள 30 குடும்பங்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், ஈரோடு வட்டம், மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், பாசூர் கிராமத்தில் வீட்டுமனை வழங்குவதற்கு புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லை.

7—

சாலைப் புறம்போக்கு குடிசைகளுக்குப் பட்டா வழங்குதல்

வினா எண் 19274-ஏ-*திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாலைப் புறம்போக்கு குடிசைகளையும் பட்டா செய்ய தகுதியான நிலமாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

பொதுவாக, சாலைப் புறம்போக்கு ஆக்கிரமிப்புகள் போக்குவரத்துக்கு இடையூறு என்பதால் மேற்படி ஆக்கிரமிப்புகள் வரன்முறைப் படுத்தப்படவில்லை. ஒரு சில ஆக்கிரமிப்புகள் சாலைக்கோ அல்லது சாலையின் விரிவாக்கத்திற்கோ தேவையில்லை என்று தெரியவந்தால் தொடர்புடைய துறையிடம் கருத்தைப் பெற்று, ஆக்கிரமிப்பாளர்களின் சமூக பொருளாதார நிலைமைக்கேற்ப நடைமுறைகளில் உள்ள விதிகளின்படி ஒப்படை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

8—

பாசூர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 19459-ஏ-திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், பாசூர் கிராமத்தில் பஞ்சாயத்து அலுவலக வீதியில் உள்ள 50 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், ஈரோடு வட்டம், கொடுமுடி ஒன்றியம், பாசூர் கிராமம் பஞ்சாயத்து அலுவலகப் பகுதியில் உள்ள வீடுகளில் சில சாலை புறம்போக்கில் அமைந்துள்ளதால் அவற்றை வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப்பட்டா வழங்க இயலாது. மேலும் இப்பகுதியில் கலம் மற்றும் சந்தை இருப்பதோடு நத்தமாக மாற்ற சாலைப் புறம்போக்கில் போதுமான இடம் இல்லையென்பதாலும் பஞ்சாயத்து அலுவலகப் பகுதியில் உள்ள குடும்பங்களுக்கு வீட்டுமனை வழங்க இயலாது.

9—

பேராவூரணி வருவாய்த் துறை அலுவலகங்களுக்கு வீட்டுவசதி அளித்தல்

வினா எண் 21015—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி வருவாய்த் துறை அலுவலர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டத்தில் பணியாற்றும் வருவாய்த் துறை ஊழியர்கள், தங்கள் வீட்டு வசதிக்காக மேற்படி வட்டம், ஆத்தாளூர் கிராமத்தில் அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோவிலுக்குச் சொந்தமான நிலங்களைத் தங்கள் குடும்ப நல சங்கத்தின் மூலம் விலைக்கு வாங்க முயற்சி எடுத்துள்ளனர். இதுகுறித்து அரசிடம் வேறு செயற்குறிப்புகள் இல்லை.

10—

ஆலங்குடி தொகுதியில் கால்நடை பவுண்டு கட்டிடம் கட்டுதல்

வினா எண் 23001—*திரு. எஸ். சண்முகநாதன்:* மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி வெட்டன்விடுதி, பெரியவாடி, வாணக்கன்காடு, கருக்காகுறிச்சி போன்ற கிராமங்களில் கால்நடை பவுண்டு கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பழுதடைந்த கால் நடைப்பட்டிகளைப் பழுதுபார்க்கவும்/புதிதாக அமைக்கவும் ஒட்டுமொத்த கருத்துரு அனுப்ப முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இக்கருத்து பெறப்பட்டவுடன் நிதிநிலையை அனுசரித்து படிப்படியாக கால்நடைப்பட்டிகளைப் பழுது பார்க்கவும்/கால்நடைப்பட்டிகள் இல்லாத இடங்களில் புதிதாக அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11—

செங்கம் நகரில் நரிக்குறவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 23520—*டாக்டர் பெ. வீரபாண்டியன்:* மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கம் நகர், திருவள்ளுவர் நகரிலுள்ள நரிக்குறவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

இல்லை. ஏனெனில், செங்கம் வட்டம், திருவள்ளுவர் நகரிலுள்ள நரிக்குறவர்கள் குடும்பங்கள் ஆக்ரமனம் செய்துள்ள புல எண் 238/2 நிலம், குளப் புறம்போக்காகும். குளப் புறம்போக்கு போன்ற நீர் நிலைப் புறம்போக்கு நிலத்தை வீட்டுமனையாக வழங்க தடை உள்ளதால், அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

12—

கரூர் வட்டத்தில் வீட்டுமனைப்பட்டா வழங்குதல்

வினா எண் 23628—திருமதி கே. *மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் வட்டம், நடந்தை வடபாகம் கிராமம், மஜரா பூமகவுண்டன் வலசில் உள்ள குடும்பங்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

கரூர் வட்டம், நடந்தை வடபாகம் கிராமம், பூமகவுண்டன் வலசில் உள்ள புலம், ஒப்படைச் செய்யத் தடை செய்யப்பட்டுள்ள 'ஓடை புறம்போக்கு' ஆகும். எனவே, அங்கு ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்போருக்கு பட்டா வழங்க இயலாது.

13—

கல்வராயன்மலை கிராம நிர்வாக அலுவலர்களுக்கு குடியிருப்புக் கட்டுதல்

வினா எண் 24934—திரு. சி. *இராமசுவாமி:* மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் கல்வராயன்மலையில் இருக்கும் கிராம நிர்வாக அலுவலர்களுக்குக் குடியிருப்புக் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : தமிழகத்தில் உள்ள அனைத்து கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் படிப்படியாக அலுவலகம் சேர்ந்த குடியிருப்புகள் கட்டித்தரவும், முதலில் மலைப்பகுதிகளில் கட்டவும் அரசு ஏற்கெனவே திட்டமிட்டு முடிவெடுத்துள்ளது. அதன்படி 1993-94 பகுதி இரண்டு திட்டத்தில் 25 குடியிருப்புகள், குடியிருப்பு ஒன்றுக்கு ரூ. 2.00 இலட்சம் வீதம் ரூ. 50 இலட்சம் செலவில் பின்வரும் மாவட்டங்களில் உள்ள மலைப்பகுதிகளில் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

நீலகிரி மாவட்டம்	10
சேலம் மாவட்டம்	5
திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்	10

இவ்வருடம் (1994-95) பகுதி இரண்டு திட்டத்திலும் 25 கிராம நிர்வாக அலுவலர் குடியிருப்புகள் கட்டித்தர ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பின்வரும் மாவட்டங்களில் உள்ள மலைப்பகுதிகளில் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது:

திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்	5
நீலகிரி மாவட்டம்	5
சேலம் மாவட்டம்	5
தர்மபுரி	10

இதுவரை சங்கராபுரம் கல்வராயன்மலை இதில் இடம் பெறவில்லை. இனிவரும் ஆண்டுகளில் சங்கராபுரம் கல்வராயன்மலை மற்றும் அனைத்து மலைப்பகுதிகளில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் நிதிநிலைக்கேற்ப ஆய்வு செய்து குடியிருப்புகள் கட்டித்தரப்படும்.

14—

தாம்சன்பேட்டையில் பட்டா வழங்குதல்

வினா எண் **25052—***திரு. கா.பூ. முனுசாமி:* மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டணம் பேரூராட்சி, தாம்சன்பேட்டை மக்களுக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டணம் கிராமம், தாம்சன்பேட்டை புல எண் 40/2, 42/, 43/2, 44/ஏ2. பி1ஏ மற்றும் 49/2 (நத்தம் புறம்போக்கு) நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்குரிய செயற்குறிப்பு பெறப்பட்டு, அரசின் ஆய்விலுள்ளது.

15—

தாலூக்கா-அலுவலகப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டுதல்

வினா எண் 27986—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாலூக்கா அலுவலகப் பணியாளர்களுக்கு தாலுக்கா அலுவலகம் அருகிலேயே வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

இல்லை.

16—

வெட்டன் விடுதியில் கிராம நிர்வாக அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 30205—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி, தொகுதி, வெட்டன்விடுதியில் கிராம நிர்வாக அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

ஆலங்குடி தொகுதி வெட்டன்விடுதியில் கிராம நிர்வாக அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்ட செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

17—

ஆலங்குடி தாலுக்காவில் வீட்டுமனைப்பட்டா வழங்குதல்

வினா எண் 30208—திரு. எஸ். சண்முகநாதன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தாலுக்காவில் எத்தனை நபர்களுக்கு 1993 ஆம் ஆண்டு வரை இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது?

விடை —

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

ஆலங்குடி வட்டத்தில் 1993 ஆம் ஆண்டு முடிய 30,695 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

18—

திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 35175—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் தற்போது அரசுக்குச் சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வருகிறது. புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவது குறித்து தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

19—

மண்ணெண்ணெய் விற்பனையாளர்களின் முறைகேடுகளைத் தடுக்க நடவடிக்கை

வினா எண் 24716—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

மண்ணெண்ணெய் வழங்கும் விற்பனையாளர்களின் தில்லு முல்லுகளைக் கண்டுபிடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

மண்ணெண்ணெய் விற்பனையாளர்களின் முறைக்கேடுகளைக் கண்டுபிடிக்கவும், களையவும் அரசு தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

1993 ஆம் ஆண்டு வர்த்தக ஒழுங்குமுறை ஆணை விதிகளை மீறியவர்களின் உரிமம் ரத்து செய்யப்பட்ட மொத்தம், வணிகர்கள் 3 மற்றும் கைவண்டி வணிகர்கள் 4 ஆகும். அபராதம் விதிக்கப்பட்டு காப்புத் தொகை பிறிப்பழக்கம் செய்யப்பட்ட மொத்த வணிகர்களின் எண்ணிக்கை 34. சில்லரை வணிகர்களின் எண்ணிக்கை 160. கைவண்டி வணிகர்களின் எண்ணிக்கை 188 ஆகும். மேலும் வெளிச்சந்தைக்கு மண்ணெண்ணெய் திருப்பி விடுவதைத் தடுக்கும் பொருட்டு இன்றியமையா பண்டங்கள் சட்டத்தின்கீழ் குடிமைப் பொருள் வழங்கல் அலுவலர்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் பயனாக கைப்பற்றப்பட்ட மண்ணெண்ணெய் அளவு 1,21,716 லிட்டர்; காவல் துறை குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட மண்ணெண்ணெய் அளவு 91,244 லிட்டர் ஆகும்.

20—

வெங்கம்பூர் பகுதியில் மஞ்சள் சேமிப்புக் கிடங்கு கட்டுதல்

வினா எண் 26457—*திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெங்கம்பூர் மற்றும் அதன் சுற்றுப் புறங்களில் அதிக அளவில் விளையும் மஞ்சளைச் சேமித்து வைக்க ஒரு கிடங்கு கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

பெரியார் மாவட்டத்திலுள்ள வெங்கம்பூர் கிராமத்தில் மஞ்சள் அதிக அளவில் பயிரிடப்படாலும், அவை விற்பனைக்காக 37 கிமீ. தூரத்திலுள்ள ஈரோடு மற்றும் 6 கிமீ. தூரத்திலுள்ள கொடுமுடி ஆகிய நகரங்களுக்கு அனுப்பப்படுகின்றன. மேலும் மஞ்சளை, வெங்கம்பூரிலிருந்து 35 கி.மீ.

தூரத்திலுள்ள கரூரில் அமைந்துள்ள தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனக் கிடங்கிலும், ஈரோடு நகரில் இயங்கும் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனக் கிடங்கிலும் சேமிப்புக்காக வைக்க இயலும். கரூரில் இயங்கும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனக் கிடங்கில் மஞ்சளை மட்டும் சேமித்து வைக்க 200 மெ. டன் கொள்ளளவு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், வெங்கம்பூரில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் ஒரு கிடங்கு கட்ட, வணிக ஆய்வு நடத்தியதில், அக்கிராமத்தில் விளையும் மஞ்சள் உட்பட வேளாண்மைப் பொருட்கள் அனைத்தும், விற்பனைக்காக கரூர் மற்றும் ஈரோடு நகர்களுக்கு அனுப்பப்பட்டு விடுகின்றன என்று தெரியவந்துள்ளது. மேலும் ஈரோடு மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனக் கிடங்கில் மஞ்சள் மிகச் சொற்ப அளவே சேமிப்புக்காக வைக்கப்படுகிறது என்றும் தெரிகிறது. மேலே கூறியவாறு மிகக் குறைந்த அளவு வணிக வாய்ப்புகள் இருப்பதன் காரணத்தினால் வெங்கம்பூரில் மஞ்சளை மட்டும் சேமித்து வைக்க, கிடங்கு கட்டும் திட்டம் எதுவும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் வசம் இல்லை.

21—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் சேமிப்புக் கிடங்குக் கட்டுதல்

வினா எண் **36448—டாக்டர் க. கோபால்:** மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்திற்கென தனியாக சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்திற்கென இதுவரை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் கீழ்க்கண்ட இடங்களில் செயல்முறை கிடங்குகள் கட்டப்பட்டு இயங்கி வருகின்றன:—

		மெ. டன்கள்
(1) மன்னார்குடி	..	800
(2) திருவாரூர்	..	16,400
(3) திருத்துறைப்பூண்டி	..	4,000

1995 மார்ச் 14]

மேலும் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் தற்போது தமிழ்நாடு சேமிப்புக் கிடங்குகள் நிறுவனம் கீழ்க்கண்ட தாலுக்காக்களில் சேமிப்புக் கிடங்குகளை நடத்தி வருகிறது:

		மெ. டன்கள்
(1) கொடவாசல்(திருவாரூர்)	..	9,000
(2) மயிலாடுதுறை	..	17,400
(3) பட்டுக்கோட்டை	..	2,427 (வாடகை கிடங்கு)
(4) நாகப்பட்டினம்	..	18,000

இவை தவிர தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் கீழ்க்கண்ட தாலுக்காக்களில் செயல் முறைக் கிடங்குகள் கட்ட திட்டமிடப்பட்டு மாநில ஒருங்கிணைப்புக் குழுவின் ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது:

(1) வேதாரண்யம்

(2) தரங்கம்பாடி

(3) சீர்காழி

(4) நன்னிலம்

இவ்வாண்டு (1994-95)-ல் நன்னிலம் தாலுக்காவில் அச்சுத மங்கலம் கிராமத்தில், 1,000 மெ. டன்கள் கொள்ளளவில் செயல் முறைக் கிடங்கு கட்ட திட்டமிடப்பட்டு 9-8-1994 ஆம் தேதி குறிப்பிட்டு ஒப்பந்த அறிக்கை விடப்பட்டுள்ளது. மற்ற 3 தாலுக்காக்களில் 1,500 மெ. டன்கள் கொள்ளளவில் செயல் முறை கிடங்குகள் கட்ட நிலங்கள் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலங்கள் தேர்வு செய்யப்பட்ட பின், இனி வரும் ஆண்டுகளில் செயல் முறை கிடங்குகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

22—

பிறமாநிலங்களுக்கு அரிசி கடத்தல் விவரம்

வினா எண் 36970—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற மாநிலங்களுக்கு அரிசி கடத்தியதற்தாக கடந்த ஓராண்டு காலத்தில் (1-1-1993 முதல் 31-12-1993 முடிய) எத்தனை நபர்கள் கைது செய்யப்பட்டார்கள்?

(ஆ) அவர்களிடமிருந்து எவ்வளவு அரிசி கைப்பற்றப்பட்டது?

விடை—

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவு அமைச்சர்:

(அ) 93 நபர்கள் கைது செய்யப்பட்டார்கள்

(ஆ) 4225.56 குவிண்டால் அரிசி கைப்பற்றப்பட்டது.

23—

தொழுநோய் குணமடைந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு

வினா எண் 21513—*திரு. செ.து. வரதராஜன்:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழு நோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்கள் வேலை வாய்ப்பு அலுவலகம் நீங்கலாக அரசு ஆணை மூலமாக நேரடியாக அரசு அலுவலகங்களில் பணியில் சேர ஆணையிடல் தொடர்பாக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : தொழுநோய் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அலுவலகம் நீங்கலாக அரசு அலுவலகங்களில் கீழ்க்கண்ட பதவிகளில் பணியமர்த்திட அரசு ஆணை நடைமுறையில் உள்ளது.

(1) துப்புரவாளர்
(2) தோட்டக்காரர்
(3) ஆய்வுக்கூட நுட்பனர்
(4) காவலர்
(5) செவிலி உதவியாளர்
(6) பதிவு எழுத்தர்
(7) முடநீக்கு ஆய்வாளர்
(8) தொழுநோய் ஆய்வாளர்
(9) அலுவலக உதவியாளர்
(10) மருத்துவமனை பணியாளர்
(11) மருத்துவமனை உதவியாளர்
(12) இளநிலை உதவியாளர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1995 மார்ச் 14]

மேலும் தொழுநோய் பாதிக்கப்பட்டு பின்னர் குணம் அடைந்தவர்கள் அரசுப் பணியில் சேர, அரசு ஆணை நிலை எண்.1499, நாள் 14-8-1994க்கு கீழ்க்காணும் விதிகளை ஏற்படுத்தி அரசு திருத்தம் வெளியிட்டுள்ளது:

(1) தொழுநோய் குணம் அடைந்த, நோயாளி பணியாளர்களின் பாதம் அல்லது கை தொழு நோயால் பாதிக்கப்பட்டு மிதமான ஊனம் அடைந்திருக்க வேண்டும். மற்றும், அவ்வாறான ஊனம் அவர்கள் பணிக்கு இடையூறு அமையா வண்ணம் இருக்க வேண்டும்.

(2) தொழுநோய் மூலமாக ஊனம் அடைந்ததற்கான சான்றிதழை அரசு தலைமை மருத்துவமனையில் பணிபுரியும் சிவில் சர்ஜன் பதவிக்கு இணையான எலும்புமுறிவு சிகிச்சை மருத்துவ அதிகாரி அல்லது அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ அதிகாரியிடமிருந்தோ தொழுநோய் குணம் அடைந்த பணியாளர்கள் பெறலாம்.

(3) தொழுநோய் குணம் அடைந்த பணியாளர்கள், தொழுநோய் மூலமாக ஊனம் அடைந்ததற்கான சான்றிதழ் மாவட்ட தொழுநோய் மருத்துவ அதிகாரியாலும் வழங்கப்படலாம்.

24—

திருமலைராயபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 33855—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோவில் ஒன்றியம், வித்திரைகுறிச்சி ஊராட்சி, திருமலைராயபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோவில் ஒன்றியம், வித்திரைகுறிச்சி ஊராட்சி, திருமலை ராயபுரத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் தற்சமயம் இல்லை.

25—

செம்புனிச்சாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் பெண் மருத்துவர் நியமனம்

வினா எண் **34362**—*திரு. வி. ரவிச்சந்திரன்;* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உப்பிலியாபுரம் தொகுதி, செம்புளிச்சாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு பெண் மருத்துவரை நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருச்சி மாவட்டம், உப்பிலியாபுரம் தொகுதி, செம்புளிச் சாம்பட்டியில் அரசு மருத்தகம் ஒன்று மட்டுமே உள்ளது. ஆரம்ப சுகாதார நிலையம் ஏதும் இல்லை. இங்கு அரசு ஒப்பளிக்கப்பட்ட பணியிடம் ஒன்று. இதில் ஓர் ஆண் மருத்துவர் பணிபுரிந்து வருகிறார்.

26—

மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் நியமனம்

வினா எண் 36035—*திருமதி செ. சுந்தராம்பாள்:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூரில் அரசு மருத்துவமனையில் பல் மருத்துவர், எலும்பியல் மருத்துவர், மற்றும் அறுவை நிபுணர் இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இவர்களை உடனடியாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் அரசு மருத்துவமனையில் பல் மருத்துவர், எலும்பியல் மருத்துவர், அறுவை சிகிச்சை நிபுணர் மற்றும்

இதர சிறப்பு மருத்துவர் உள்ளிட்ட பதினைந்து மருத்துவர்கள் தற்போது பணிபுரிந்து வருகிறார்கள்.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

27—

மருத்துவமனைகளில் தொலைபேசி வசதி

வினா எண் 38285—**டாக்டர் பெ. வீரபாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரும்பாலான தாலுக்கா மருத்துவமனைகளில் தொலைபேசி வசதி இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) அதை நிவர்த்தி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): இம் மாநிலத்தில் மருத்துவத்துறையை பொறுத்தமட்டில் 136 வட்ட மருத்துவமனைகளில் 93 வட்ட மருத்துவமனைகளில் ஏற்கனவே படிப்படியாக தொலைப்பேசி வசதி செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 43 தாலுக்கா மருத்துவமனைகளில், தொலைபேசி தேவை குறித்து, தொலைபேசி தேவையினை ஆராய்ந்தும் நிதி நிலைமைக்கேற்பவும் முடிவு மேற்கொள்ளப்படும்.

28—

சாலை விபத்துக்களைத் தடுக்க நடவடிக்கை

வினா எண் 22277—**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாலை போக்குவரத்து விபத்துக்களைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

சாலை போக்குவரத்து விபத்துக்களைத் தடுக்க அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

(1) வாகனம் ஓட்டுவதற்கு உரிமம் வழங்கும்போதும், வாகனங்களுக்கு தகுதிச் சான்றளிக்கும் போதும் அதற்கான விதிகள் கடுமையாகவும், கண்டிப்பாகவும் கடைபிடிக்கப்படுகிறது. இதனால் விபத்துகள் தடுக்கப்படுகின்றன.

(2) போக்குவரத்துத் துறையைச் சார்ந்த களப் பணியாளர்கள் சாலைகளில் போக்குவரத்து வாகனங்களை சோதனை செய்து சாலை விதிகள் மற்றும் மோட்டார் வாகனச் சட்டம் விதிகளின்படி கடை பிடிக்காத வாகனங்களை கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கிறார்கள். சாலைகளில் போக்குவரத்து விபத்துகள் தவிர்க்க சரக்கு வாகனங்களில் ரிப்ளக்டர் கொண்டு செல்லப்பட வேண்டுமென்றும் வாகன உரிமையாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

(3) சாலை பாதுகாப்புக் குழு அடிக்கடி கூட்டங்கள் நடத்தி சாலை விபத்துக்களைத் தவிர்க்க பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

(4) பொது மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்த தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலமாகவும் சாலை விதிகள் மற்றும் சாலை விபத்துக்களிலிருந்து பாதுகாக்க விதிமுறைகள் தெரிவிக்கப்படுகின்றன.

(5)அடிக்கடி விபத்து நடக்கும் இடங்களில் விபத்து எச்சரிக்கை பலகைகள் வைக்கப்படுவதோடு, அவ்விடங்களில் கூடுதல் காவலர்கள் போக்குவரத்தை சீர் செய்ய நியமிக்கப்படுகிறார்கள்.

(6) போக்குவரத்து மேம்பாட்டிற்காகவும், விபத்துக்களை குறைக்கவும் தானியங்கி சைகைகள், நடை பாதை தடுப்புகள் சாலையின் நடுவில் தடுப்புகள் ஆகியவைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

(7) நவீனக் கருவிகள் மூலம் குடித்துவிட்டு வண்டி ஓட்டு பவர்களையும் அதி வேகமாக வண்டி ஓட்டுபவர்களையும் கண்டு பிடித்து தண்டனை வழங்கப்படுகிறது.

(8) முக்கியமான சந்திப்புகள், சாலையில், சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

(9) போக்குவரத்துக்கு இடையூராக உள்ள சாலை ஓர வியாபாரிகளை சைக்கிள் ஓட்டுனர்கள், பேருந்துப்படிகளில் பயணம் செய்பவர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(10) சாலைகளில் திரியும் கால்நடை மற்றும் தன்னை மறந்து நடப்பவர்களைப் பிடித்து வழக்குகள் .போடப்பட்டுள்ளன.

(11) கல்லூரி மாணவர்களையும், ரோட்டரி சங்கங்களின் அங்கத்தினர்களையும் கொண்டு "புல்ஸ்-ஐ" ஓட்டுவான்கள் வாகன விளக்குகளில் ஒடப்பட்டுள்ளன.

(12) துண்டு பிரசுரங்களும், செய்தி அட்டைகளும், பொது மக்களுக்கும், வாகன ஓட்டுநர்களுக்கும் விநியோகிக்கப்பட்டது.

(13) போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருக்கின்ற வாகனங்கள் 'ரெக்கர்கள்' மூலம் அப்புறப்படுத்தப்படுகின்றன.

29—

பட்டுக்கோட்டை பாண்டிச்சேரிக்கு சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்குதல்

வினா எண் 24406—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையிலிருந்து பாண்டிச்சேரிக்கு சோழன் போக்குவரத்துக்கழகப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டையிலிருந்து பாண்டிச்சேரிக்கு சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது. தமிழ்நாடு, பாண்டிச்சேரி மாநிலங்களுக்கு இடையிலான தட ஒப்பந்த படிவத்தில் மேற்கண்ட தடமும் சேர்க்கப்பட உள்ளது.

30—

கடையநல்லூர் ஒன்றியத்தில் பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 26972—திரு. ஆர். சிங்காரம்: மண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியம், ஆனைகுளம் கிராமம், தென்காசி ஒன்றியம், தட்டான்குளம், சிந்தாமணி ஆகிய கிராமங்களுக்குப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

கடையநல்லூர் ஊராட்சிக்கு உட்பட்ட ஆனைகுளம் கிராமத்திற்கு ஏற்கனவே 4 நகரப் பேருந்துகள் மூலம் 30 சுற்றுக்கள் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. தற்போதுள்ள பயணிகள் விகிதாச்சாரத்திற்கு இப்பேருந்துகள் போதுமானதாகும். மேலும் 14-3-1994 முதல் திருநெல்வேலி ஜங்ஷன் முதல் புளியங்குடி வரை இயக்கப்படும் தடம் எண். 205 புறநகர் பேருந்து வாயிலாக தட்டான் குளம், சிந்தாமணி ஆகிய கிராமங்களுக்கு 4 சுற்றுக்கள் பேருந்து வசதி செய்யப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது.

31—

சங்கரன் கோவில் ஒன்றியத்தில் கூடுதல் பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 26994—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோவில் ஒன்றியம், வடநத்தம்பட்டிக்குக் கூடுதல் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு.கே. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

வீரசிகாமணி-பாம்பு கோவில் சந்தை பிரதான சாலையிலிருந்து பிரிந்து சுமார் 0.5 கி.மீ. தூரத்தில் உட்புறமாக அமைந்துள்ள வடநத்தம்பட்டி கிராமம் வழியாக 1 நகரப் பேருந்து 12 சுற்றுக்களும் ஒரு புறநகர் பேருந்து 2 சுற்றுக்களும் தற்போது இயங்கி வருகின்றன. மேலும் 0.5 கிமீ. தூரத்தில் உள்ள வடநத்தம்பட்டி விலக்கு வழியாக 2 நகரப் பேருந்துகள் 24 சுற்றுக்களும், 1 புறநகர் பேருந்து 4 சுற்றுக்களும் இயக்கப்பட்டு வருகின்றன. வடநத்தம்பட்டி கிராம மக்கள் இப்பேருந்துகளையும் பயன்படுத்தி வருகிறார்கள். எனவே, கூடுதல் பேருந்து இயக்க அவசியம் எழவில்லை எனக் கருதப்படுகிறது.

1995 மார்ச் 14]

32—

வீரசிகாமணிக்குக் கூடுதல் பேருந்துகள் இயக்குதல்

வினா எண் 27006—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் ஒன்றியம், கே. ஆலங்குளம், குமட்டிகுளம் வழியாக வீரசிகாமணிக்கு கூடுதல் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

தற்போழுது கட்டமொம்மன் போக்குவரத்துக் கழக நகர வழித்தடம் எண் 9சி சங்கரன் கோயில், புளியங்குடி (வழி) பொய்கை, கே. ஆலங்குளம், குமட்டிகுளம், வழித் தடத்தில் முழு நேரப் பேருந்து தினசரி 12 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இது தவிர தனியார் புறநகர் பேருந்து ஒன்று கே. ஆலங்குளம் குமட்டிக்குளம் வீரசிகாமணி வழியாக சங்கரன் கோவில்-தென்காசி தடத்தில் தினசரி 4 சுற்றுக்கள் இயக்கப் பட்டு வருகின்றன. கே. ஆலங்குளம், குமட்டிகுளம், ஆகிய இந்த கிராமங்களுக்கு தற்போதுள்ள பயணிகள் விகிதாச்சாரத்திற்கு இந்த 16 சுற்றுக்களே போதுமானதாக கருதப்படுகிறது. கூடுதல் பேருந்து இயக்க அவசியமில்லை எனக் கருதப்படுகிறது.

33—

வால்பாறை-திருச்சி-சேலம் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்குதல்

வினா எண் 27010—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையிலிருந்து திருச்சி, சேலம் வரை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மூலம் பேருந்துகள் இயக்க நடப்பாண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

இல்லை.

34—

குருவிகுளம் ஒன்றியத்தில் பேருந்து இயக்குதல்

வினா எண் 27011—திரு.ஆர்.சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், குருவிகுளம், ஒன்றியம், மகேந்திரவாடி கிராமத்திற்கும் அன்னபூரணபுரத்திற்கும் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

நாலுவாசல்கோட்டை-மருதங்கிணறு பிரதான சாலையில் அமைந்துள்ள மகேந்திரவாடி என்ற இக்கிராமத்திற்கு தற்போது கட்டபொம்மன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து எண் 17 (சங்கரன் கோவில்-மருதங்கிணறு) மகேந்திரவாடி வாயிலாக தினசரி 12 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகிறது. அன்னபூரணபுரம் என்ற சிறிய கிராமம் நாலுவாசல்கோட்டை-மருதங்கிணறு பிரதான சாலையிலிருந்து பிரிந்து சுமார் 0.2. கி.மீ. தொலைவிலேயே அமைந்துள்ளது. இக்கிராம மக்கள் தொகை சுமார் 100 ஆகும். தற்போது ஒரு நகரப் பேருந்து தினசரி 4 சுற்றுக்கள் இயங்கி வருகிறது. எனவே, தற்போதைய அரசு விதிகளின்படி அன்னபூரணபுரம் மற்றும் மகேந்திரவாடி கிராமம் இரண்டும் பேருந்து வசதி பெற்றதாகவே கருதப்படுகிறது.

35—

பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் பனவடலி சத்திரத்தில் நின்று செல்லுதல்

வினா எண் 27017—திரு. ஆர்.சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், நெல்லையிலிருந்து, ராஜபாளையம் செல்லும் பாண்டியன் போக்குவத்துக் கழகப் பேருந்துகள் பனவடலி சத்திரத்தில் நின்று செல்ல நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

பாண்டியன் போக்குவரத்து கழகம் மூலம் தேனி-திருநெல்வேலிக்கு இயக்கப்படும் இரண்டு பேருந்துகளும் பனவடலி சத்திரம் நிறுத்தத்தில் நிறுத்தி, பயணிகளை ஏற்றியும், இறக்கியும் வருகிறது. இராஜபாளையம் - திருநெல்வேலி வழித்தடத்தில் இயக்கும் அனைத்து பேருந்துகளும் சகோதர போக்குவரத்துக் கழகமான கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்ததாகும்.

36—

பட்டுக்கோட்டை நகரப் பேருந்தை கூடுதல் நடைகள் இயக்குதல்

வினா எண் 33756—திரு. ஆர்.சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணியிலிருந்து காலகம், ஓமவயல், பாலச்சேரிக்காடு வழியாக பட்டுக்கோட்டை செல்லும் நகரப் பேருந்தை நடப்பாண்டில் 8 தடவைகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

பேராவூரணியிலிருந்து காலகம், ஓமவயல், பாலச்சேரிக்காடு வழியாக பட்டுக்கோட்டை நகரப் பேருந்து தடம் எண் 12, 6 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இப்பேருந்து பல வழித்தடத்தில் இயக்கப்படுவதால், மேற்கொண்டு இரண்டு நடைகள் இயக்க இயலாது.

37—

புதுக்கோட்டை கீரமங்கலம் நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 33767—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையிலிருந்து கொத்தமங்கலம் வழியாக வடகாடுக்கு இயக்கப்படும் நகரப் பேருந்தை கீரமங்கலம் வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் :

புதுக்கோட்டையிலிருந்து கொத்தமங்கலம் வழியாக வடகாடுக்கு மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் நகரப் பேருந்து எதுவும் இயங்கவில்லை. புதுக்கோட்டையிலிருந்து ஆலங்குடி, வடகாடு தெற்குப்பெட்டி, கொத்தமங்கலம் நகரம் வழியாக கீரமங்கலம் வழித்தடத்தில் நீளம் 42.7 கி.மீ. ஆகும். அரசு ஆணையின்படி மேற்படி வழித்தடத்தின் நீளம் பேருந்து செல்லாத பகுதியையும் சேர்த்து நகரப் பேருந்து இயக்கிட அனுமதிக்கப்பட்டுள்ள 35.0 கி.மீ யைக் காட்டிலும் அதிகமாக இருப்பதால் இவ்வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்கிட இயலாது.

38—

பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் புதிய பேருந்துகள் இயக்குதல்

வினா எண் **35178**—*திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் :* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக பணிமனைப் பேருந்துகள் பழையதாக உள்ளதை மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் :

திருப்பத்தூர் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழக் பணிமனையில் மொத்தம் 99 தடப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் 70 புறநகர் பேருந்துகளும் 29 நகரப் பேருந்துகளும் அடங்கும். அனைத்து பேருந்துகளும் அரசு கடைப்பிடித்து வரும் கொள்கைப்படி 6 முதல் 7 ஆண்டுகள் வரை இயக்கப்பட வேண்டும். நிதி நிலைக்குத்

TRUTH ALONE TRIUMPHS

தக்கப்படி பயணிகள் அதிகம் பயணம் செய்யும் தடங்களில் உள்ள பழைய பேருந்துகளுக்கு பதிலாக புதிய பேருந்துகள் மாற்றப்பட்டு வருகிறது.

39—

வந்தனக்கோட்டை நகரப் பேருந்தை கூடுதல் நடைகள் இயக்குதல்

வினா எண் 35466—**திரு. சி. சுவாமிநாதன் :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையிலிருந்து பெரம்பூர், அண்டக்குளம் வழியாக வந்தனக்கோட்டைக்கு இயக்கப்படும் நகரப் பேருந்தை கூடுதலாக நான்கு தடவை இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், **போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் :**

தற்பொழுது மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் ஒரு நகரப் பேருந்து பல்முனை வழித்தடத்தில் புதுகோட்டை-வந்தனக்கோட்டை (வழி) அண்டக்குளம், தொடுதல், பெரம்பூர் வழித்தடத்தில் 2 நடைகளும் புதுக்கோட்டை-வந்தனக்கோட்டை (வழி) அண்டக்குளம், பெரம்பூர் விலக்கு வழித்தடத்தில் 6 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இத்தடங்களில் பயணம் செய்யும் பயணிகளின் விகிதாச்சாரம் 55 சதவீதம் மட்டுமே உள்ளது. எனவே. இத்தடத்தில் கூடுதலாக பேருந்துகள் இயக்க வேண்டிய அவசியம் இல்லை எனக் கருதப்படுகிறது.

40—

செய்யாலூருக்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் 35513—**டாக்டர் எஸ். சுந்தரராஜ் :** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரத்திலிருந்து செய்யாலூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யும் ?

(ஆ) ஆம் எனில், எப்போது இயக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) செய்யாலூர் கிராமம், இராமநாதபுரம்-பரமக்குடி பிரதான சாலையில் இருந்து பிரிந்து 1.6 கி.மீ. தூரத்தில் உள்ளது. அந்த கிராமத்தின் மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 775 ஆகும். தற்சமயம் 1,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பேருந்து வசதி செய்யப்பட்டு வருகிறது. செய்யாலூர் கிராமம், 1,000-க்கு குறைவான மக்கள் தொகை உள்ள கிராமமாக இருப்பதால் முன்னுரிமை அடிப்படையில் செய்யாலூர் கிராமத்திற்கு தற்சமயம் உடனடியாக பேருந்து வசதி செய்வதற்குரிய சாத்தியக்கூறுகள் இல்லை.

41—

ஜாப்ராப் பேட்டைக்கு பேருந்து இயக்குதல்

வினா எண் 35869—திருமதி கே.எம். கலைச்செல்வி : மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்பாடித் தொகுதி திருமணி, வேலூர் வழியாக இயக்கப்படும் பேருந்தை ஜாப்ராப்பேட்டை வரை நீட்டித்து இயக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் :

தற்போது நகரத் தடம் 16 (கட்) மூலம் வேலூர்-லத்தேரி ரயில்வே கேட் என 4 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இந்த நடைகளை ஜாப்ராப்பேட்டை சென்று வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் கோரிக்கைப்படி இயக்கப்படும்.

42—

ஊரந்தாங்கல் ஊராட்சிக்கு கூடுதல் பேருந்து வசதி

வினா எண் 35874—திருமதி கே.எம். கலைச்செல்வி : மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்பாடித் தொகுதி, ஊரந்தாங்கல் ஊராட்சிக்கு இயக்கப்படும் 10 பி பேருந்தினை மேலும் 4 நடைகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

நகரத்தடம் 10 பி வேலூர்-குப்பிரெட்டித்தாங்கல் (வழி) ஏரந்தாங்கல் என 4 நடைகள், வேலூர்-குப்பிரெட்டித்தாங்கல் (வழி) இராமநாதபுரம் என 4 நடைகளும், வேலூர்-குப்பிரெட்டித் தாங்கல் (வழி) திருவலம், பூட்டுதாக்கு என 2 நடைகளும், வேலூர்-குப்பிரெட்டித்தாங்கல் (வழி) காட்பாடி சர்க்கரை ஆலை என 2 நடைகளும் என பல முனை தடங்களாக பல கிராம மக்கள் பயன்படும்படி இயக்கப்பட்டு வருகிறது. மேற்படி கோரிக்கைப் படி தற்போது ஏரந்தாங்கல் வழியாக இயக்கப்படும் நடைகளில் பயணம் செய்யும் பயணிகள் விகிதாச்சாரம் (or) 60 சதவீதம் மட்டுமே உள்ளது. வருவாயும் மிகக் குறைவாகவே உள்ளது மேற்படி மொத்த நடைகளுக்குரிய (or) பயணிகள் விகிதாச்சாரம் 73 சதவிதம் இபிகேஎம் (வருவாய்) 6.28 சதவீதமும் உள்ளது. இந்நிலையில் கோரிக்கைப்படி இயக்கப்பட்டால் மேற்படி அனைத்து கிராம மக்களும் பாதிக்கப்படுவதோடு வருவாயும் குறைந்துவிடும் என்பதால் மேலும் 4 நடைகள் இயக்குவது சாத்தியமில்லை.

43—

திருநெல்வேலி அல்வன்தான்குளம் இடையே நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 35887—திரு.எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் மாண்பு ஒன்றியம், அலவன்தான்குளம் கிராமத்திற்கு திருநெல்வேலியிலிருந்து இரவு 8 மணிக்கு சென்று கொண்டிருந்த தடம் எண் 34 டி என்ற பேருந்து நிறுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன். போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ):பயணிகள் விகிதாச்சாரம் மிகக் குறைவாக இருந்த காரணத்தினால் தடம் எண் 34 இ நகரப் பேருந்து மூலம் இரவு 8-30 மணிக்கு திருநெல்வேலியிருந்து அலவன்தான் குளத்திற்கு இயக்கப்பட்ட சுற்று நிறுத்தப்பட்டது. தற்போது இக்கிராமத்திற்கு திருநெல்வேலியிருந்து 4 நகரப் பேருந்துகள் மூலம் 38 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகிறது. இதில் ஒரு சுற்று இரவு 9-15 மணிக்கு திருநெல்வேலியிலிருந்து அலவன் தான்குளம் வழியாக தெற்கு செழியநல்லூருக்கு இயக்கப்பட்டு வருகிறது. எனவே இரவு 8.30 மணிக்கு இயக்கப்பட்ட பேருந்தை மீண்டும் இயக்கும் தேவை எழவில்லை எனக் கருதலாம்.

44—

ஆலங்குளம்-கீழப்பட்டமுடையார் இடையே புதிய வழித்தடம் வழியாக நகரப்பேருந்து இயக்குதல்

வினா எண் **35893**—திரு.எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் ஆலங்குளம் ஒன்றியம் கீழ்ப்பட்டமுடையார் புரத்திற்கும் நல்லூர் வழியாக ஆலங்குளத்திற்கும் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

சுமார் 500க்கு குறைவான மக்கள் தொகை கொண்ட கீழ்ப்பட்டமுடையார் என்ற இச்சிறிய கிராமம் ஆலங்குளம், நெட்டூர் பிரதான சாலையிலிருந்து பிரிந்து 0.5. கி.மீ. தொலைவில் நடந்து செல்லும் தூரத்திலேயே அமைந்துள்ளது. இந்தப் பிரதான சாலையில் 6 புறநகர் பேருந்துகள் 37 சுற்றுக்களும், 5 நகரப் பேருந்துகள் 40 சுற்றுக்களும் இயக்கப்படுகின்றன. எனவே இக்கிராம மக்கள் பிரதான சாலைக்கு வந்து மேற் சொன்ன பேருந்துகளைப் பயன்படுத்தி ஆலங்குளம் செல்வதற்கு போதுமான வசதிகள் உள்ளன. தவிர நல்லூர் வழியாக ஆலங்குளம்

செல்வதற்கு தற்போது 5 நகரப் பேருந்துகளால் 26 சுற்றுக்கள் உள்ளன. கீழப்பட்டமுடையார் புரத்திலிருந்து நல்லூர் செல்வதற்கு பேருந்து இயக்கத்தக்க அளவில் சாலை வசதி இல்லை யாதலால் இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

45—

பரமகுடி செய்யாலூருக்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் 36216—*டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியிலிருந்து செய்யாலூருக்கு பேருந்து இயக்க அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் பேருந்து இயக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு கே. ஏ. செங்கோட்டையன் போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : செய்யாலூர் கிராமம் இராமநாதபுரம் பரமக்குடி பிரதான சாலையிலிருந்து பிரிந்து 1.6. கி.மீ. தூரத்தில் உள்ளது. அக்கிராமத்தின் மக்கள் தொகை 775 ஆகும். தற்சமயம் 1000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பேருந்து வசதி செய்யப்பட்டு வருகிறது. செய்யாலூர் கிராம மக்கள் தொகை 1000 க்கு குறைவாக இருப்பதால் முன்னுரிமை அடிப்படையில் தற்சமயம் பேருந்து இயக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

46—

பெரம்பூர் அய்யனார் ஆலயத்திற்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் 38235—*திரு. சி. சுவாமிநாதன் :* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் குன்றாண்டார் கோவில் ஒன்றியம் பெரம்பூர் அய்யனார் ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்காக பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : தற்போது மருது பாண்டியர் போக்குவரத்து கழக ஒரு நகரப் பேருந்து பல்முறை வழித்தடத்தில் புதுக்கோட்டை வந்தனா கோட்டை சென்று வரும் 2 நடைகளில் பெரம்பூரை தொட்டு இயங்கி வருகின்றது. இரண்டு நடைகளிலும் பயணம் செய்யும் பயணிகளின் விகிதாச்சாரம் 50 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது. மேலும் புதுக்கோட்டையிலிருந்து பெரம்பூர் விலக்கு வழியாக மருது பாண்டியர் போக்குவரத்து கழக நகரப் பேருந்துகள் 26 நடைகளும் தனியார் புறநகர் பேருந்துகள் 14 நடைகளும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. புதுக்கோட்டை பெரம்பூர் வரை தனியாக நகரப் பேருந்து இயக்குமளவிற்கு பயணிகள் நெரிசல் கிடையாது. எனவே புதுக்கோட்டையிலிருந்து பெரம்பூர் வரை நகரப் பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதுமில்லை.

47—

நத்தம் தொகுதியில் புதிய அணைகள் கட்டுதல்

வினா எண் 3738—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதியில் பாசனவசதி பெருகிட பஞ்சந்தாங்கி அணை, சங்குசக்கரபாறை அணை, பெத்தாங்குனி அணை, ஐயனார் அருவி அணை, பாலாறு அணை ஆகியவற்றைக் கட்ட அரசு பரிசீலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் திட்டம் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : பஞ்சந்தாங்கி மற்றும் அய்யனார் அருவி நீர்த்தேக்கத் திட்டங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது. பெத்தாங்கினி அணை மற்றும் பாலாறு நீர்த்தேக்கத் திட்டங்கள் சிக்கனமற்றது என்பதால்

அரசால் கைவிடப்பட்டன. சங்குச் சக்கரபாறை அணை தொடர்பாக எவ்வித திட்டமும் அரசின் பரிசீலனையில் இல்லை.

48—

பரம்பிக்குளம் ஆழியாறு கால்வாய்களில் தண்ணீர் விடுதல்

வினா எண் 5431—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டத்தின் கீழ் உள்ள ஆயக்கட்டு விஸ்தரிப்புக்காக வாய்க்கால்கள் வெட்டப்பட்டும் அவற்றில் பாசனத்திற்காக தண்ணீர் விடப்படாமல் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அரசு இனியேனும் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டத்தில் தற்பொழுது உள்ள மண்டலப் பாசன முறையை மாற்றி புதிய ஆயக்கட்டு விரிவாக்கப் பகுதிகளையும் சேர்த்து நான்கு மண்டல முறை ஏற்படுத்த சட்டம் எண் 20/93 இயற்றப்பட்டுள்ளது. இந்த நான்கு மண்டல முறையை அமுல்படுத்தும் செயற் குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையிலுள்ளது.

49—

திருமலைராஜன் ஆற்றில் தடுப்புச்சுவர் கட்டுதல்

வினா எண் 22280—திரு. எஸ். ஆசைமணி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி குடவாசல் ஒன்றியம் பிரதாபராமபுரம், வட்டம் “பூவாம்பூர் வாய்க்கால் தலைப்பில்” திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே தடுப்புச் சுவர் கட்டித்

தந்து அப்பகுதிக்கு முறையாக தண்ணீர் பாய்வதற்காக உதவிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

பூவாம்பூர் வாய்க்கால் தலைப்பின் கீழ் மைல் 650–1 இல் கூகூர் ரெகுலேட்டர் அமைந்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் பூவாம்பூர் வாக்காலில் தண்ணீர் நல்ல முறையில் பாய்ந்து பாசனம் நடைபெற்றுள்ளது. ஆகவே, பூவாம்பூர் வாய்க்கால் தலைப்பில் திருமலைராசன் ஆற்றின் குறுக்கே தடுப்புச் சுவர் சுட்டும் அவசியம் எழவில்லை.

50—

வேம்பனூரில் பாசனத் தலைப்பு வாய்க்காலாகச் செப்பனிடுதல்

வினா எண். 23262—திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், வேம்பனூர் கிராமத்தில் உள்ள பாசன தலைப்பு வாய்க்காலைத் தூர் வாரி செப்பனிட அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

புதுக்கோட்டையில் கழிவுநீரை அகற்றும் திட்டம்

வினா எண் 4633—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் யூனியன் அலுவலகத்துக்கு முன்பாக உள்ள காட்டுப் புதுக்குளத்தில் புதுக்கோட்டை நகரின் கழிவுநீர் அனைத்தும் தேங்கி விடுவதால் மக்களுக்கு சுற்றுப்புறத் தூய்மை கெடுவது குறித்து அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், கழிவுநீரை நிரந்தரமாக அகற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) புதுக்கோட்டை நகரின் கழிவுநீர் அனைத்தும் காட்டுப் புதுக்குளத்தில் தேங்குவதில்லை. 3 மற்றும் 4-ம் வீதி பகுதியில் உள்ள தோரண வாய்க்கால் வழியாக வரும் தண்ணீர் மட்டும் காட்டுப் புதுக்குளத்தின் வழியாக செல்கிறது.

(ஆ) நகராட்சியில் கழிவுநீரை அகற்ற திட்டம் ஏதுமில்லை. இருப்பினும் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான ஆய்வுகள் தமிழ்நாடு குடிநீர் வாரியத்தில் முடிக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டவுடன் இதற்கான நிரந்தர தீர்வு காண இயலும் என புதுக்கோட்டை நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

87—

புதுக்கோட்டையில் குளத்தை மராமத்து செய்தல்

வினா எண் 16272—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகராட்சி சேர்வைக்காரன்குளத்தைத் தூர் எடுத்து மற்ற மூன்று பக்கங்களிலும் குளத்திற்கு தடுப்புச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை நகராட்சி, திருக்கோகர்ணம் பகுதியில் உள்ள சேர்வராயன் குளத்திற்கு கிழக்குக் கரையில் 1990-91-ம் ஆண்டில் நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தடுப்புச்சுவர் கட்டப்பட்டது. நகராட்சி பொதுநிதிப் பற்றாக்குறையின் காரணமாக மற்ற மூன்று பக்கங்களிலும் தடுப்புச் சுவர் கட்ட நடவடிக்கை தொடர இயலவில்லை. வரும் நிதியாண்டில் அரசு வழங்கும், திட்டப்பணியின் கீழ் மேற்கொண்டு குளத்தைத் தூர் எடுத்து, அதன் மூன்று கரைகளிலும் தடுப்புச் சுவர் எழுப்புவதற்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

88—

புதுக்கோட்டை மாவட்டத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் 25437—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் எத்தனை இடங்களில் பாதுகாக்கப்பட்ட மேல்நிலைத் நீர்த் தேக்கத் தொட்டி உள்ளது.?

(ஆ) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இல்லாத இடங்கள் எத்தனை?

(இ) அவற்றிற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் பாதுகாக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மொத்தம் 1020.

(ஆ) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இல்லாத இடங்கள் 2834 ஆகும்.

(இ) இவற்றில் 96 எண்ணிக்கை கொண்ட தொட்டிகள் தற்போது 1994-95-ல் அமைப்பதற்கு ரூ. 254.00 இலட்சம் செலவில் நடவடிக்கைகள் உள்ளன. எஞ்சியுள்ள குக்கிராமங்களில் 500-க்கும் குறைவான மக்கள்தொகை உள்ள குக்கிராமங்களை ஒன்றாக இணைத்து 990 மட்டும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

89—

புதுக்கோட்டை தொகுதியில் கையிறைப்பான்களைப் பழுது நீக்குதல்

வினா எண் 25528—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி. ஆத்தாங்கரை பஞ்சாயத்து தெற்குவாண்டவன் விடுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், கொத்தம்பட்டி ஆகிய இடங்களில் கையிறைப்பான்கள் பழுதடைந்து இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவைகளைப் பழுது நீக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தெற்கு வாண்டான் விடுதியில் ஒரு விசையிறைப்பான் நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. கொத்தம்பட்டியிலுள்ள கையிறைப்பான் பழுது சீர்செய்யப்பட்டு தற்போது நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இப்பகுதி மக்களுக்கு போதுமான குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

1995 மார்ச் 14]

90—

புதுக்கோட்டை தொகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைப் பழுது நீக்குதல்

வினா எண் 25530—*திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, பழைய கந்தர்வக்கோட்டை, பெரியகோட்டை ஊராட்சி, ஊராப்பூர் ஊராட்சி, வெளச்சேரிப்பட்டி, கொத்தம்பட்டி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், அரியானிபட்டி ஆகிய இடங்களிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் பழுதடைந்து இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் பழுது பார்க்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): பழைய கந்தர்வக்கோட்டையில் 3 கையிறைப் பான்களும், ஒரு விசையிறைப்பானும் உள்ளன. பழுதுற்ற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 1992-93-ம் ஆண்டிற்கான வெள்ள நிவாரணத் திட்டத்தின்கீழ் சீர்செய்யப்பட்டு தற்போது நன்கு இயங்கி வருகின்றன. பெரிய கோட்டையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இல்லை. மூன்று கையிறைப்பான்கள் மட்டுமே உள்ளன. இவையும் நல்ல நிலையில்தான் உள்ளன. வெளச்சேரிப்பட்டியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இல்லை. ஒரு கையிறைப்பான் மட்டுமே உள்ளது. இங்குள்ள (150) ஜனத்தொகைக்கு இது போதுமான குடிநீராகும். பெரியகோட்டை ஊராட்சியில் உள்ள கொத்தகப்பட்டி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை பழுதுகள் பார்க்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது. வாராப்பூர் ஊராட்சி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 13-4-1994-ல் சீர் செய்யப்பட்டு தற்போது நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

91—

வடவாளத்தில் குடிநீர் மோட்டாரைப் பழுது பார்த்தல்

வினா எண் 25534—*திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், வடவாளம் கிராமத்தில் உள்ள குடிநீர் மோட்டார் பழுதடைந்து இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் பழுது பார்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வடவாளம் கிராமத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மோட்டாரில் ஏற்பட்டுள்ள பழுது 13-4-1994 அன்று சீர் செய்யப்பட்டு தற்போது நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

92—

வெள்ளாள விடுதி ஊராட்சியில் நீர்முழ்கி மோட்டார் அமைத்தல்

வினா எண். 25535—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, வெள்ளாள விடுதி ஊராட்சியில் இயங்கி கொண்டு இருக்கும் மின் மோட்டாரை மாற்றி நீர்மூழ்கி மோட்டார் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

புதுக்கோட்டை தொகுதியில் வெள்ளாள விடுதியில் இயங்கிக் கொண்டிருந்த சாதாரண மின்மோட்டாரை மாற்றி நீர்மூழ்கி மோட்டார் பொருத்தப்பட்டு 6 மாத காலங்களாக நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

93—

வெட்டன்விடுதியில் குடிதண்ணீர் குழாய்களைப் பழுது நீக்குதல்

வினா எண் 25536—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதியில் இருக்கும் வெட்டன்விடுதி ஆதிதிராவிடர் நல குடியிருப்புகளுக்கு செல்லும் குடிதண்ணீர் குழாய்கள் பழுதடைந்து இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் பழுது பார்க்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): ஆலங்குடி தொகுதி வெட்டன்விடுதியில் உள்ள ஆதிதிராவிடர் நலக் குடியிருப்புகட்கு செல்லும் குடிதண்ணீர் குழாய்கள் தற்போது சீர்செய்யப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

94—

அந்தியூர் ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 37643—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, அந்தியூர் ஒன்றியம், பர்கூர் ஊராட்சி, ஒசூர் மலைவாழ் மக்களுக்கு அரசு தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

95—

அம்மாபேட்டை ஒன்றியத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 37649—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, அம்மாபேட்டை ஒன்றியம், வெள்ளிதிருப்பூர் ஆதிதிராவிடர் காலனிக்கு தொகுப்பு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

96—

அந்தியூர் ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 37668—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, அந்தியூர் ஒன்றியம், எண்ணமங்கலம் ஊராட்சி, செல்லம்பாளையம் ஆதிதிராவிடர் காலனிக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

97—

கீழ்வள்ளியூர் ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 38238—திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோயில் வட்டம், கீழ்வள்ளியூர் கிராமத்தில் ஆதிதிராவிடர்களுக்கு இலவசத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆமெனில், எப்போது கட்டித்தரப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

98—

குமராண்டன்வலசில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 38336—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், குமராண்டன் வலசில் தொகுப்பு வீடு கிடைக்காத ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

99—

தாட்கோ வழங்கிய கடன் விவரம்

வினா எண் 15688—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் 1991-92ல் ஆதிதிராவிடர்களுக்கு தனியார் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் தாட்கோ மூலம் வழங்கிய கடன் தொகை எவ்வளவு?

(ஆ) அத்திட்டத்தால் பயன்பெற்றோர் எத்தனை பேர்?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் 1991-92-ல் ஆதிதிராவிடர்களுக்கு தனியார் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் தாட்கோ மூலம் ரூ.5.85 இலட்சம் மான்யமும் மற்றும் ரூ.11.89 இலட்சம் விளிம்புத் தொகையும் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) 39 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

100—

தாட்கோவின் புதிய திட்டங்கள்

வினா எண் 16897—*டாக்டர் வெ. சரோஜா:* மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதிக்காக தாட்கோ மூலம் (1992-93 ஆம் ஆண்டு) நடப்பாண்டுக்கான புதிய திட்டங்கள் அரசின் பரிசீனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சங்ககிரி தொகுதிக்காக தனியாக புதிய திட்டங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள், ஆதிதிராவிடர் மக்கள் தொகை அடிப்படையில் மாவட்ட வாரியாக வரையறுக்கப் படுகின்றனவேயன்றி தொகுதிவாரியாக அல்ல.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1995 மார்ச் 14]

1–

ஐந்தாம் பட்டியல்

கோயமுத்தூர் செல்வபுரம் பகுதி குடிசைகளுக்கு பட்டா வழங்குதல்

வினா எண் 5017—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் செல்வபுரம் பகுதியில் உள்ள குடிசைகளுக்கு பட்டா கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கொடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்.

(அ) மற்றும் (ஆ): கோவை மாவட்டம், கோவை தெற்கு வட்டம், செல்வபுரம் பகுதியில் செல்வ சிந்தாமணி குளத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருந்த 3,200 குடிசைகள் காலி செய்யப்பட்டு 1,800 நபர்களுக்கு மதுக்கரை கிராமத்தில் மாற்று இடம் அளிக்கப்பட்டு உள்ளது. எனவே அவர்களுக்கு செல்வபுரம் பகுதியிலே பட்டா கொடுக்கும் கேள்வி எழாது.

2—

ஏரிப்புறக்கரையிலுள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்துதல்

வினா எண் 13384-திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரையில் ச.எண் 266-ல் உள்ள பூங்காவிலுள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ஏரிப்புறக்கரை கிராமத்தில் உள்ள புல எண் 266 என்பது பழைய உப்பளச் சாலை என கிராம கணக்குகளில் பதிவாகியுள்ளது. பூங்கா என்றோ ஆர்.வி.பூங்கா என்றோ குறிப்பிடப்படவில்லை. இதில் 10 நபர்கள் கடைகள் கட்டியும் வீடுகள் கட்டியும் ஆக்கிரமணம் செய்துள்ளனர். மேற்படி 10 ஆக்கிரமணங்களில் இருவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து தடை

ஆணை பெற்றுள்ளனர். இதன் காரணமாக ஆக்கிரமணங்களை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. நீதிமன்றங்களுக்கு செல்லாத நபர்களின் ஆக்கிரமணங்களை காலிசெய்ய மாவட்ட வருவாய் அலுவலர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

3—

சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தில் குடிமனைப்பட்டா வழங்குதல்

வினா எண் 13422—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பெருமகளூர் நகரம், ஆர்.கே. நகரில் பல வருடங்களாக பஞ்சாயத்து புறம்போக்கில் குடியிருக்கும் மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு சர்வே எண் 29 ஏ.இல் 3.00 ஏக்கர் 4 செண்ட் இடத்தை 1992-93-இல் குடிமனைப்பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

பேராவூரணி வட்டத்தில் நில ஒப்படை மற்றும் வீட்டுமனை ஒப்படை வழங்க தடையாணை உள்ளதால் 1992-93-இல் மனைப்பட்டா வழங்கப்படவில்லை.

4—

பரமக்குடி தாலுக்காவில் புயலால் ஏற்பட்ட சேதம் பற்றிய விவரம்

வினா எண் 16717—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 12-11-1992-ஆம் ஆண்டு தேதிய புயலால் பரமக்குடி தாலுக்காவில் ஏற்பட்ட சேதங்கள் எவ்வளவு?

(ஆ) அரசு வழங்கிய உதவித் தொகை விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) 12-11-1992 அன்று புயல் வீசவில்லை. 14-11-1992 அன்று வீசிய புயலில் 20 குடிசைகள் முழுவதுமாகவும், 139 குடிசைகள் பகுதியாகவும் பாதிக்கப்பட்டன.

1995 மார்ச் 14]

விளைநிலம் பயிருடன் சேதமடைந்த ஊர்கள்.		பரப்பளவு.
1. இலட்சுமண குடியிருப்பு, உரப்புலி கிராமம்.	..	15 எக்டேர்-நிலக்கடலை பயிர்
2. பகைவேண்டரி	..	70 எக்டேர்-நிலக்கடலை பயிர் மற்றும் மிளகாய்ப் பயிர்கள்.
3. கல்லியபியண்டாள்	..	25 எக்டேர்-நெல் மற்றும் மிளகாய்ப் பயிர்கள்.
4. அக்கிரமேசி	..	75 எக்டேர்-நெல் மற்றும் மிளகாய்ப் பயிர்கள்.
5. கல்லிக்கொட்டை	..	80 எக்டேர்-நெல் மற்றும் நிலக்கடலைப் பயிர்கள்.
6. மென்னந்தி	..	10 எக்டேர்-நெல் மற்றும் மிளகாய்ப் பயிர்கள்.
7. நகச்சி	..	30 எக்டேர்-மிளகாய்ப் பயிர்.
8. சேவூர்	..	80 எக்டேர்-மிளகாய் மற்றும் நெற்பயிர்கள்.
9. திருத்தியநந்தல்	..	60 எக்டேர்-மிளகாய் மற்றும் நெற்பயிர்கள்.
10. தோத்தங்கள்	..	60 எக்டேர்-மிளகாய் மற்றும் நெற்பயிர்கள்

(ஆ) சேதமடைந்த வீடுகளுக்காக வழங்கப்பட்ட உதவித்தொகை ரூ. 44,750

அரிசி	795 கிலோ
மண்ணெண்ணெய்	159 லிட்டர்
துணி	159 சேலைகள்
	159 வேட்டிகள்

5—

நிலவரி, தலவரியின் மீதான ஜப்தி நடவடிக்கையை மாற்றுதல்

வினா எண் 19200—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலவரி, நிலமேல்வரி, தலவரி, தலமேல்வரியின் (2 மடங்கு)) வசூலின் நிலையை ஜப்தி நடவடிக்கையின்றி தவணை முறையில் மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

நிலவரி, நிலமேல்வரி, தலவரி, தலமேல்வரி, இதர அரசு கடன் நிலுவைத் தொகையை வசூல் செய்வதில் ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்று 1988-ல் வெளியிட்ட ஆணையை வலியுறுத்தி, அரசு மீண்டும் 16-6-1993-ல் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் ஜப்தி நடவடிக்கை எடுக்கக் கூடாது என ஆணை பிறப்பித்துள்ளது.

6—

ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான சட்டத்தைத் திருத்துதல்

வினா எண் 21553—*டாக்டர் அ. ஸ்ரீதரன்:* மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான சட்டத்தைத் திருத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கான சட்டத்தைத் திருத்த அரசிடம் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது. விவரம் கீழ் வருமாறு:

(1) தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம், 1905 (1905-ஆம் ஆண்டில் சட்டம் 3)-இன் பிரிவுகள் 4, 10, 10ஏ, 10பி மற்றும் 14 ஆகியவற்றைத் திருத்துவதற்கான சட்டமுன் வடிவு 1993-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28-ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டு 29-10-1993 அன்று சட்டமன்றப் பேரவையில் ஒப்புதலைப் பெற்று, தற்போது குடியரசு தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

(2) மேலும், மேற்படி சட்டத்தின் பிரிவுகள் 2(3), 6(2) 10 மற்றும் 10ஏ ஆகியவற்றைத் திருத்துவதற்காக செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

1995 மார்ச் 14]

7—

வால்பாறை தேயிலைத் தோட்டங்களுக்கு வசூலிக்கப்படும் நிலவரி விவரம்

வினா எண் 21693—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தேயிலைத் தோட்டத்திலுள்ள நிலங்களுக்கு அரசாங்கம் வசூலிக்கும் நிலவரி எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

கோவை மாவட்டம், வால்பாறை தேயிலைத் தோட்ட நிலங்களுக்கு ஒவ்வொரு பசலி ஆண்டும் வசூலிக்கும் நிலவரி ரூ.4,88,983 ஆகும்.

8—

வேதாரண்யம் வட்டாட்சியர் அலுவலகத்தை விரிவுபடுத்தல்

வினா எண் 22770—திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் வட்டாட்சியர் அலுவலகத்தை விரிவுபடுத்தவும், வட்ட அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பிக்கவும், செயல் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) வேதாரண்யம் வட்ட ஆட்சியர் அலுவலகத்தை விரிவுபடுத்தவும், வட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடத்தை புதுப்பிக்கவும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) வேதாரண்யம் வட்டத்தில் புது வட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடம் உட்பட ஒவ்வொரு வட்ட ஆட்சியர் அலுவலக கட்டிடத்திற்கும் ரூ.60.50 இலட்சம் வீதம் 16 வட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடங்கள்

கட்ட ரூ. 968.00 இலட்சத்திற்கு செயல்முறை விளக்கங்கள் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. அவை அரசின் ஆய்வில் உள்ளன.

9—

கொடுமுடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணம் எழுதுவோர் சாவடி அமைத்தல்

வினா எண் **26846—திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடுமுடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணம் எழுதுவோர் சாவடியில்லாமல் பொதுமக்கள் சிரமப்படுவதால் அங்கு ஆவணம் எழுதும் சாவடியை அமைத்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

கொடுமுடி சார்பதிவகத்தில் ஆவணம் எழுதும் சாவடியை அமைப்பதற்கு போதிய இடவசதி இல்லை என்ற நிலையில் பொதுமக்களின் நலன் கருதி அலுவலர் வராண்டாவைத் தடுத்து ஆவணம் எழுதுவதற்காக போதிய இட வசதிக்கு தேவையான நடவடிக்கை எடுக்க மாவட்டப் பதிவாளர் கோரப்பட்டுள்ளார்.

10—

புயலால் பாதிக்கப்பட்ட ஆத்தூர் தொகுதிக்கு அளிக்கப்பட்ட நிவாரணம் பற்றிய விவரம்

வினா எண் 36681-திரு. வெ. தமிழரசு: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சமீபத்தில் புயலால் பாதிக்கப்பட்டுள்ள ஆத்தூர் தொகுதிக்கு எவ்வளவு நிவாரணம் அளிக்கப்பட்டது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் :

கடந்த 1-4-1993 முதல் 31-3-1994 உடன் முடிவடைந்த நிதியாண்டில் ஆத்தூர் தொகுதியில் புயல், மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட

நபர்களுக்கு நிவாரண உதவித் தொகையாக ரூ.23,00,750 வழங்கப்பட்டுள்ளது. தவிர, புயல், மழை மற்றும் வெள்ளத்தால் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு ரூ.90,000 நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

11—

உப்பிலியாபுரம் பத்திரப்பதிவு அலுவலகத்தின் வருவாய் விவரம்

வினா எண் 37524—*டாக்டர் சு. மணிமேகலை:* மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உப்பிலியாபுரத்தில் இயங்கிவரும் பத்திரப்பதிவு அலுவலகத்தின் மூலம் 1993-94-ம் வருடத்தில் கிடைத்த வருமானம் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

உப்பிலியாபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 1993-94-ம் ஆண்டு அரசுக்கு கிடைத்த வருமானம் ரூ.52,68,720 ஆகும். பதிவு செய்த ஆவணங்கள் 1,522.

12—

துயர் துடைப்புப் பணி மூலம் நிவாரணம்

வினா எண் 40581—*டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுக்காவில் 1993-94-இல் துயர் துடைப்புப் பணி மூலம் நிவாரணம் பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) நிலுவையில் உள்ள மனுக்கள் எத்தனை?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுக்காவில் 1993-94-இல் துயர் துடைப்புப் பணி மூலம் நிவாரணம் பெற்றவர்கள்-142.

(ஆ) நிலுவையில் உள்ள மனுக்கள்-83.

13—

பேராவூரணியிலிருந்து திருச்சிக்கும், இராமேஸ்வரத்திற்கும் பேருந்து இயக்குதல்

வினா எண் 24363—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணியிலிருந்து திருச்சிக்கும், இராமேஸ்வரத்திற்கும் பேருந்து இயக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

சோழன் போக்குவரத்துக் கழகத்தினால் பேராவூரணியிலிருந்து திருச்சிக்கு 11-3-1994 முதல் ஒரு பேருந்து இயக்கப்படுகிறது. பேராவூரணியிலிருந்து இராமேஸ்வரத்திற்கு பேருந்து இயக்க செயற்குறிப்பு இல்லை.

14—

பட்டுக்கோட்டை-கீரமங்கலத்திற்குக் கூடுதல் பேருந்து இயக்குதல்

வினா எண் 24438-திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டையிலிருந்து கீரமங்கலம் செல்லும் 29-ஆம் எண் நகரப் பேருந்துடன் மேலும் ஒரு கூடுதல் நகரப்பேருந்து இயக்க 1994-95-ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை-கீரமங்கலம் தடத்தில் கூடுதலாக ஓர் நகரப் பேருந்து இந்நிதியாண்டில் இயக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

15—

சென்னை-கறம்பக்குடிக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்குதல்

வினா எண் 26040—திரு.சி. சுவாமிநாதன்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

சென்னையிலிருந்து கறம்பக்குடிக்கு இயக்கப்பட்ட திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிறுத்தப்பட்டதை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

சென்னை-கறம்பக்குடி வழித்தடம் 6-10-1989 முதல் இயக்கப்பட்டு வந்தது. இந்த வழித்தடத்தில் பயணிகள் விகிதாச்சாரம் மிகவும் குறைவாகவே இருந்ததால் இவ்வழித்தடம் 26-10-1990 முதல் நிறுத்தப்பட்டுள்ளது. சராசரி பயணிகள் விகிதம் 61 சதவீதம் ஆகும். இந்த வழித்தடத்தை மிகவும் குறைந்த அளவு பயணிகளே பயன்படுத்துவதால் மீண்டும் இயக்குவது சாத்தியமில்லை.

16—

எல்லையூரில் இடுகாடு வசதி செய்தல்

வினா எண் 26617—*திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி எல்லையூரில் வனத்துறையிடம் உள்ள இடத்தைப் பெற்று இடுகாடு வசதி செய்து தர ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, எல்லையூர் கிராமத்திற்கு இடுகாடு வசதி செய்துத்தர ஈரோடு வனச்சரகத்தைச் சார்ந்த வெங்கம்பூர் காவேரி ஆற்றுப்படுகை என்ற காப்புக் காட்டின் ஒரு பகுதி வருவாய்த்துறையால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஈரோடு வட்டாட்சியரால் வனச்சட்டம் பிரிவு 6-ன்கீழ் மாவட்ட அரசிதழில் காப்புக் காட்டுப் பகுதியாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

இந்த இடம் அறிவிக்கை செய்யப்படுவதற்கு முன்பிருந்தே இடுகாடாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாக இதனை ஈரோடு வன

நிர்ணய அலுவலர் ஆய்வு செய்த பின் வனச்சட்டம், பிரிவு 10-ன்கீழ் அறிவிக்கை செய்யும்போது, இந்த இடத்திற்கு "விலக்கு அளித்து" அனுமதி வழங்க வாய்ப்புள்ளது.

17—

திரு.வி.க.நகர்-திருவான்மியூர் நகரப் பேருந்து இயக்குதல்

வினா எண் 26989—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை திரு.வி.க. நகரிலிருந்து திருவான்மியூர் வரை விரைவுப் பேருந்து இயக்குவதற்கு நடப்பாண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

தற்பொழுது டாக்டர் அம்பேத்கார் போக்குவரத்துக் கழகத்தால் பெரம்பூரிலிருந்து திருவான்மியூருக்கு வழித்தடம் 29-ஜெ-ல் 3 பேருந்துகளும், பெரியார் நகரிலிருந்து திருவான்மியூருக்கு வழித்தடம் 29 ஆர்-ல் 3 பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, டாக்டர் அம்பேத்கார் போக்குவரத்துக் கழகம் திரு.வி.க. நகரிலிருந்து திருவான்மியூருக்கு விரைவுப் பேருந்து இயக்குவதற்கு நடப்பாண்டில் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது இல்லை.

18—

திசையன்விளைக்கு நகரப்பேருந்து இயக்குதல்

வினா எண் 33747—*திரு. ஆர். சிங்காரம்:* மான்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதி சாத்தான்குளத்திலிருந்து விஜயராமபுரம் சாமிதோப்பு நடுவக்குறிச்சி வழியாக திசையன்விளைக்கு புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்:

சாத்தான்குளத்திலிருந்து விஜயராமபுரம், சிறப்பூர், சாமிதோப்பு, அடப்புவிளை, தட்டார்மடம், நடுவக்குறிச்சி வழியாக திசையன்விளைக்கு

1995 மார்ச் 14]

1 நகரப்பேருந்து மூலம் 4 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகிறது. மேலும் சாத்தான்குளத்திலிருந்து விஜயராமபுரம், சிறப்பூர், சாமிதோப்பு, அடப்புவிளை, தட்டார்மடம், நடுவக்குறிச்சி வழியாக உவரிவரை ஒரு புறநகர்ப்பேருந்து 4 சுற்றுக்கள் இயக்கப்பட்டு வருகிறது. நடுவக்குறிச்சியிலிருந்து ஏராளமான நகர மற்றும் புறநகர் பேருந்துகள் திசையன்விளைக்குச் செல்ல உள்ளன. ஆகவே, இதே வழியில் புதிதாக நகரப்பேருந்து இயக்கத் தேவையில்லை.

19—

புதுக்கோட்டை மாவட்டத்தில் சமூகநலக் காடுகள் வளர்த்தல்

வினா எண் 33808—*திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் சமூக நலக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் எத்தனை குளங்கள் எடுக்கப்பட்டு மரங்கன்றுகள் பயிரிடப்பட்டுள்ளன?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

புதுக்கோட்டை மாவட்டத்தில் 1993-94 வரை 1121 குளங்களில் சமூக வனத்திட்டத்தின்கீழ் சமூகக்காடுகள் தோட்டங்கள் எழுப்பப்பட்டு பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

20—

பச்சைமலை சமூகக்காடுகளின் மூலம் கிடைத்த வருவாய் விவரம்

வினா எண் 34104—*திரு. வி. ரவிச்சந்திரன்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், பச்சைமலை சமூகக்காடுகளில் உற்பத்திப் பொருள்களின் மூலம் 1993-94-ஆம் ஆண்டில் அரசுக்கு கிடைத்த வருவாய் எவ்வளவு ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

சமூகக்காடுகள் திட்டத்தின்கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டம், பச்சை மலைப்பகுதிகளில் வனப்பொருட்கள் ஏதும் உற்பத்தி செய்யப்படவில்லை. எனவே உற்பத்தி பொருள்கள் விற்பனை மூலம் அரசுக்கு வருவாய் கிடைப்பது தொடர்பான வினா எழவில்லை.

21—

பச்சைமலையில் சமூகக்காடுகள் வளர்த்தல்

வினா எண் 34106—*திரு. வி. ரவிச்சந்திரன்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, பச்சைமலையில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் சமூக மர வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மரங்கள் வளர்க்க அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : உப்பிலியாபுரம் தொகுதி பச்சைமலையில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் சமூகக்காடுகள் திட்டத்தின்கீழ் மரம் வளர்க்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. இருப்பினும் இம்மலைப்பகுதியில் உள்ள வனத்துறை சம்பந்தப்பட்ட நிலங்களில் மட்டும் பல்வேறு திட்டங்களின்கீழ் தீவனத் தோட்டம் சந்தனத் தோட்டம் எழுப்புதல், மண்வளப் பாதுகாப்புப் பணிகள், மரங்களை வளர்த்தல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

22—

புதுக்கோட்டை குண்ணன்டார் கோவிலுக்குப் பேருந்து இயக்குதல்

வினா எண் 35463—*திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ் காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையிலிருந்து குண்ணன்டார்கோயில்வரை அண்டக்குளம் வழியாக கூடுதலாகப் பேருந்து இயக்க, அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

புதுக்கோட்டை— குண்ணன்டார்கோயில் (வழி) - அண்டக்குளம் வழித்தடத்தின் நீளம் 28.2 கி.மீ. ஆகும். இவ்வழித் தடத்தில் பேருந்து செல்லாத பகுதியே கிடையாது. தற்போது மருதுப்பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் ஒரு நகரப் பேருந்து பல்முனை வழித்தடத்

திட்டத்தில் புதுக்கோட்டை-குண்ணண்டார்கோயில் (வழி) - அண்டக்குளம் வழித்தடத்தில் 6 நடைகளும், புதுக்கோட்டை-உடையாளிப்பட்டி (வழி) - அண்டக்குளம் மற்றும் குண்ணண்டார்கோயில் வழித்தடத்தில் 6 நடைகளும் இயங்கி வருகின்றன. இத்தடங்களில் பயணம் செய்யும் பயணிகளின் விகிதாச்சாரம் 65 சதவிகிதத்திற்குக் குறைவாக உள்ளது. தற்போது, பேருந்து செல்லாத கிராமங்களுக்குப் பேருந்து இயக்கிட முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. எனவே, புதுக்கோட்டை-குண்ணண்டார் கோயில் (வழி) - அண்டக்குளம் வழித்தடத்தில் கூடுதலாகப் பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

23—

கீரனூரிலிருந்து புதிய வழித்தடங்களில் பேருந்து இயக்குதல்

வினா எண் 35465– திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீரனூரிலிருந்து வைத்தூர் வரை உப்பிலிக்குடி சீமனூர் செனையகுடி வழியாக பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

கோரிக்கை வழித்தடத்தின் நீளம் 22.7 கி.மீ. ஆகும். இதில் வடுகபட்டியிலிருந்து சீமானூர், பிரண்டையயாபட்டி, செனையக்குடி வழியாக அண்டைக்குளம் செல்லும் பிராதான சாலை வரையிலான 8.8 கி.மீ. பேருந்து செல்லாத பகுதியாகும். சீமானூருக்கும் பிரண்டையாப்-பட்டிக்கும் இடையே பாலம் இல்லாத இரண்டு சிறிய ஓடைகள் உள்ளன. அவற்றின் வழியாக பேருந்து இயக்கிட இயலாது. எனவே, கீரனூரிலிருந்து உப்பிலிக்குடி, சீமானூர் செனையக்குடி வழியாக வைத்தூர் வரையிலான வழித்தடத்தில் பேருந்து இயக்கிட செயற்குறிப்பு ஏதுமில்லை.

24—

புதுப்பாளையம்-மேல்குப்பம் பேருந்து இயக்குதல்

வினா எண் 35842—டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கம் தொகுதி, புதுப்பாளையம் ஒன்றியம் புதுப்பாளையத்தில் இருந்து மேல்குப்பம் கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

கோரிக்கையில் காணும் வழித்தடத்தின் சாலை பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தால் நேரடி ஆய்வு செய்யப்பட்டதில் கி.மீ.கல் 1/2 அருகில் ஏரிக்கோடி தண்ணீர் சாலையை கடக்கும் இடத்தில் தரைப்பாலம் அமைக்கும் பணியும் கி.மீ.கல்2/2 அருகில் கோரை ஆற்றின் குறுக்கு தரைப்பாலம் அமைக்கும் பணியும் நடைபெற்றுக் கொண்டுள்ளன. மேற்படி பணிகள் முடிந்தபின் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

25—

முதுமலையில் போக்குவரத்து வசதி ஏற்படுத்துதல்

வினா எண் 36956—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுமலை அரசு யானைகள் வனச் சரணாலயத்தில் வசிக்கும் வனத்துறை ஊழியர்களின் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல போதிய போக்குவத்து வசதி இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : முதுமலை வன உயிரின சரணாலயத்தில் வசிக்கும் வனத்துறை ஊழியர்களின் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல டி.என்.43-4247 என்ற மினி பஸ் உள்ளது. மேற்படி மினி பஸ் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தினால் வழங்கப்பட்டது. 12-8-1994 முதல் இந்த மினி பஸ்சில் வனப் பணியாளர்களின் குழந்தைகள் பள்ளிக்குச் செல்ல உபயோகிக்கப்பட்டு வருகிறது.

26—

மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் தேக்குமரங்கள் வளர்க்கும் திட்டம்

வினா எண் 37681—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியான குருடிமலை அடிவாரத்தில் உள்ள பவுண்டு பகுதியில் தேக்கு நாற்றுகள் நட்டு தேக்கு மரங்கள் வளர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

கோயம்புத்தூர் மாவட்டத்தின் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியான குருடிமலை அடிவாரத்தில் உள்ள பவுண்டு பகுதியில் தேக்கு மரங்கள் வளர்க்கும் திட்டம் ஏதும் தனியாக இல்லை. மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் அந்தந்தப் பகுதிகளுக்கேற்றவாறு மரக்கன்றுகளும், சோலை மரக்கன்றுகளும் வளர்க்கப்பட்டு வருகின்றன.

27—

ஏரிகளை சமூகநலக்காடு வளர்ப்புப் பகுதிகளாக மாற்றுவதை நிறுத்துதல்

வினா எண் **38543**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏரிகளை சமூக நலக்காடு வளர்ப்புப் பகுதிகளாக மாற்றுவதைநிறுத்த நடப்பாண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

ஏரிகளை சமூக நலக்காடு வளர்ப்புப் பகுதிகளாக மாற்றுவதை நிறுத்த நடப்பாண்டில் அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

28—

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தை இலாபத்தில் இயக்க நடவடிக்கை

வினா எண் **38546**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல்லவன் போக்குவரத்துக் கழகம் இலாபத்தில் இயக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

பல்லவன் போக்குவத்துக் கழகம் இலாபத்தில் இயக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் வருமாறு-

(1) பொது நடவடிக்கைகள்:—

பல்லவன் போக்குவரத்துக் கழகம் அதன் வருவாயை அதிகரிக்கவும், செலவைக் குறைக்கவும் அதன் மொத்த செயல்பாட்டைச் சீரமைக்கும் பணியை மேற்கொள்வதன் மூலம் இழப்பைக் குறைக்க முற்பட்டுள்ளது. பேருந்துகள் தேவைக்கு அதிகமாக இயங்கும் இடங்களில் பேருந்துகளைக் குறைத்தும், தேவைப்பட்ட இடங்களில் அதிகப் பேருந்துகளை இயக்கியும் வருகிறது. இத்துடன் இக்கழகம் குறிப்பிட்ட இடங்களில் மட்டும் நிற்கும் பேருந்துகளை (எல்.எஸ்.எஸ்) மற்றும் பயணமுனை முதல் பயணமுனை வரை (பாயின்ட்-டு-பாயின்ட்) பேருந்துகள் போன்ற பல்வேறு வகையான பேருந்துப் பணிகளை பயணிகள் தேவைக்கேற்ப அறிமுகப்படுத்தியுள்ளது.

(2) பயணப் போக்குவரத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்:-

உரிய பயணச்சீட்டின்றி பயணம் செய்வோர்களைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பல்வேறு அலுவலர்களின் தலைமையின்கீழ் தனிப் பயணச்சீட்டு பரிசோதகப்படை அமைக்கப்பட்டு, பெருமளவில் பரிசோதனைகள் நடத்தப்படுகிறது. இதனால் பயணச் சீட்டின்றி பயணம் செய்வதால் அடையும் வருவாய் இழப்பு பெருமளவில் தவிர்க்கப்படுகிறது.

(3) தொழில் நுட்ப நடவடிக்கைகள்:-

பேருந்துகளின் பராமரிப்புப் பணிகளும், அதன் வழி முறைகளும் விரிவான முறையில் பரிசீலிக்கப்பட்டு, மேம்படுத்தப்பட்ட வழிமுறைகள் கையாளப்படுகின்றன. எதிர்பார்த்த முன்னேற்றம் இதன்மூலம் கிட்டியுள்ளதா என அறிய அவ்வப்போது கண்காணிக்கப்படுகிறது.

ஓட்டுநர் பயிற்சி, பராமரிப்பு நடவடிக்கைகள், கண்காணித்தல் போன்ற எரிசக்தி சிக்கன நடவடிக்கைகளைத் தொடர்ந்து உயர்த்துவதற்கு தனிப்பணிப்பிரிவு ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

(4) பணியாளர் நிருவாகம்:-

இப்போக்குவரத்துக் கழகம் பணிக்கூடத்திலும், வெளியிலும் கடைப்பிடிக்கத்தக்க நெறிமுறைகள் என்ற ஒரு பயிற்சி முகாமை இதன் 1730 பணியாளர்களுக்கு அளித்தது. இது தொழிலாளர்களின்

செயல்திறனை வளர்ப்பதோடல்லாமல் இக்கழகத்தின் உற்பத்தித் திறனைப் பெருக்க வழி வகுக்கும்.

(5) செயல்பாட்டுத் திறனில் அடைந்த முன்னேற்றங்கள்:-

தொடர்ச்சியாக எரிசக்தி சிக்கன நடவடிக்கைகள் மேற்கொண்டதின் பயனாக, 1993-94-ஆம் ஆண்டு இயந்திர எண்ணெய், லிட்டர் ஒன்றுக்கு ஓடிய கிலோ மீட்டர்கள் 402-ல் இருந்து 544 கிலோ மீட்டராக உயர்ந்துள்ளது. இக்கழகம் இதனால் ரூ.44.27 இலட்சம் சேமித்தது. பராமரிப்புத்திறனில் அடைந்த முன்னேற்றத்தினால் பழுதடைதலின் காரணமாக பேருந்துகள் இயங்கப்படாமலிருப்பது கணிசமாக குறைந்துள்ளது. 1993-94-ம் ஆண்டில் 10,000 கி.மீட்டர்களுக்கு பழுதடைந்து இயங்கா நிலையில் எண்ணிக்கை 359-ல் இருந்து 298-ஆக குறைந்துள்ளது.

பேருந்துகளின் ஒரு நாளைய பயன்பாட்டுச் சதவீதம் 230 கி.மீட்டரிலிருந்து 237 கி.மீட்டராக உயர்ந்ததன் மூலம் பேருந்துகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு இல்லாமலேயே 45.80 இலட்சம் கி.மீ. கூடுதலாக இயக்க முடிந்தது.

இயக்கத்திறமையை அதிகரிக்கவும் மாநகரப் போக்குவரத்தினைச் சிறப்பாக நிர்வகிக்கும் அளவில் வைத்திருக்கவும் பல்லவன் போக்குவரத்துக் கழகம் 19-1-1994 முதல் இரண்டாகப் பிரிக்கப்பட்டு 'டாக்டர் அம்பேத்கார் போக்குவரத்துக் கழகம்' என்ற பெயரில் ஒரு புதிய போக்குவரத்துக் கழகம் நிறுவப்பட்டது.

29—

பேரணாம்பட்டில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைத்தல்

வினா எண் 38627—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடை அளிப்பாரா—

பேரணாம்பட்டில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

பேரணாம்பட்டில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க, நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

30—

கொடுமுடியில் ஜீவா போக்குவரத்துக் கழகப் பணிமனை கட்டுதல்

வினா எண் 38651—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடுமுடியில் ஜீவா போக்குவரத்துக் கழகப் பணிமனைக்கான இடத்தின் மீது போடப்பட்டுள்ள வழக்கு முடிக்கப்பட்டுவிட்டதா?

(ஆ) ஆம் எனில், பணிமனை துவங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்:

(அ) ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் கொடுமுடி கிளைக்கான இடத்தின் மீது தற்சமயம் எந்தவிதமான வழக்கும் நிலுவையில் இல்லை.

(ஆ) கொடுமுடியில் புதிய பணிமனை கட்ட இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில் தொகை ஒதுக்கீடு ஏதுமில்லை. இதுகுறித்து அடுத்த நிதியாண்டில் நிதி நிலையைப் பொறுத்து வாரியத்தில் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

31—

பேராவூரணி பயணிகள் விடுதியில் குளிர்சாதன வசதி ஏற்படுத்துதல்

வினா எண் 12901—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி நெடுஞ்சாலைத் துறை பயணிகள் விடுதியில் குளிர்சாதன வசதி ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

பேராவூரணி பயணமாளிகை பேராவூரணி சேதுபாவா சத்திரம் சாலையில் கி.மீ. 0/4-ல் சாலையின் வலது புறத்தில் அமைந்துள்ளது. இப்பயண மாளிகைக்குக் குளிர்சாதன வசதி செய்வதற்கு தோராயமாக

ரூ. 75,000 செலவாகும். தற்போது நிதி நெருக்கடியின் காரணமாக இப்பணியை தற்போது மேற்கொள்ளும் வாய்ப்புகள் இல்லை.

32—

பொன்னன்திட்டில் வடிகால் அமைத்தல்

வினா எண் 16372—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிள்ளை பேரூராட்சியில் பொன்னன்திட்டு கிராமத்தில் தைக்காலுக்கும், ஐயங்காள்வெளிக்கும் இடையே வடிகால் ஒன்று அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) பொன்னன்திட்டு கிராமத்தில் தைக்காலுக்கும் ஐயங்காள் - வெளிக்கும் இடையே வடிகால் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

33—

சாலைகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை

வினா எண் 19607—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் (நீதிமன்றங்களில் உள்ள வழக்குகள் நீங்கலாக) அனைத்தும் அவ்வப்போது தொடர்ந்து அகற்றப்பட்டு வருகின்றன.

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் உள்ள மாநில நெடுஞ்சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாக 5 வழக்குகள் நீதி மன்றங்களில் பல்வேறு நிலைகளில் உள்ளன. மேற்கூறிய வழக்குகளில் தீர்வு காண்பதற்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தேசிய நெடுஞ்சாலை, வேலூர் கோட்டத்தைச் சேர்ந்த கீழ்க்காணும் இடங்களில் காணப்பட்ட ஆக்கிரமிப்புகள் யாவும் அகற்றப்பட்டுவிட்டன.

1. வாணியம்பாடி பஸ் நிலையம் அருகில்.
2. வேலூர் கிறிஸ்துவக் கல்லூரி மருத்துவமனை அருகில்.
3. புவனப்பள்ளி அருகில்.

மற்ற ஆக்கிரமிப்புகளை அகற்ற தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

34—

மின் இறவை பாசனத் திட்டங்களை வேதாரண்யம் தொகுதியில் செயல்படுத்துதல்

வினா எண் **22764—***திரு. பி.வி. இராஜேந்திரன்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேதாரண்யம் தொகுதி மானாவாரி பகுதியாக உள்ளதால் மின் இறவைப் பாசன திட்டங்களை அதிக அளவு செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

இது போன்ற திட்டம் எதுவும் ஆய்வில் இல்லை.

35—

துறையூர் சின்ன ஏரியைத் தூர் எடுத்தல்

வினா எண் **22952—***திரு. வி. ரவிச்சந்திரன்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, துறையூர், சின்ன ஏரியைத் தூர் எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ); துறையூர் சின்ன ஏரிக்கு சிறப்பு மராமத்துப் பணிகள் செய்தாலே போதுமான பலனளிக்க வாய்ப்புகள் உள்ளன. இந்த ஏரிக்கு 1993-94 ஆம் நிதி ஆண்டில் ரூ. 99,000-க்கு சிறப்பு மராமத்து பணிகள் செய்து முடிக்கப்பட்டு ஏரி சிறப்பாகச் செயல்படுகிறது.

36—

திருப்பத்தூரில் கண்காணிப்பு பொறியாளர் அலுவலகத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 23028—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் நகரில் கண்காணிப்பு பொறியாளர் அலுவலகத்திற்கு கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) திருப்பத்தூரில் பொதுப்பணித்துறையைச் சார்ந்த கண்காணிப்பு பொறியாளர் அலுவலகம் ஏதும் இல்லை. மேற்பார்வைப் பொறியாளர் திருப்பத்தூர் மின் பகிர்மான வட்ட அலுவலகக் கட்டிடம் திருப்பத்தூரில் கட்டுவதற்கான செயற்குறிப்பு உள்ளது.

(ஆ) மேற்பார்வைப் பொறியாளர், திருப்பத்தூர் மின் பகிர்மான வட்ட அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு ஏதுவாக 8.20 ஏக்கர் நிலம் நில எடுப்பு செய்வதற்காகச் செய்த குறிப்பு வருவாய்த்துறையின் பரிசீலனையில் உள்ளது.

37—

திருப்பத்தூர் பெரிய ஏரியை சீரமைத்தல்

வினா எண் 23175—*திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:* மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் பெரிய ஏரிக்கு தண்ணீர் விடும் கால்வாயில் ஆக்கிரமிப்புகளை அகற்றி கால்வாயை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

ஏரிகளிலும், கால்வாய்களிலும் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள் குறித்து வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை, விவசாயத்துறை, காவல் துறை மற்றும் நில அளவைப் பதிவேடுகள் துறை மூலம் கூட்டு நடவடிக்கை மேற்கொண்டு ஆக்கிரமிப்புகளை அகற்றி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. திருப்பத்தூர் பெரிய ஏரிக்கு வரும் வரத்துக் கால்வாயினை அகலப்படுத்தவும் ஆழப்படுத்தவும் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

38—

பத்ரபல்லிமலைச் சாலையைச் செப்பனிடுதல்

வினா எண் 23425—*டாக்டர் ஜெ. பரந்தாமன்:* மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், கே.வி.சாலையில் பழுது அடைந்துள்ள பத்ரபல்லிமலைச் சாலையைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், கே.வி.சாலையில் பழுது அடைந்துள்ள பத்ரபல்லிமலைச் சாலைப் பகுதியானது காட்பாடி வெங்கடகிரி கோட்டா சாலையில் கி.மீ. 50/0, 55/6 சாலைப் பகுதியாகும்.

1995 மார்ச் 14]

இதில் கி.மீ.50/0-52/0, 53/0-54/0 மற்றும் 55/0-55/6-ல் தனிப்பழுது பார்க்க ரூ.3.40 இலட்சத்திற்குள் மதிப்பீடு செய்யப்பட்டு 1994-ஆம் ஆண்டு மார்ச் மாதம் பழுது பார்க்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள சாலைப் பகுதி கி.மீ. 52/0, 53/0 மற்றும் கி.மீ. 54/0, 55/0 ஆகிய பகுதிகளுக்கு தனிப்பழுது பார்க்க ரூ.1.43 இலட்ச மதிப்பில் 1993-ஆம் ஆண்டு ஜூன் மாதம் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப் பணியினை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

39—

கிருஷ்ணகிரி அணையில் பார்வையாளர்களிடம் கட்டணம் வசூலிக்கும் விவரம்

வினா எண் 24493—திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி அணையில் பார்வையாளர்களுக்கு நபர் ஒன்றுக்கு எவ்வளவு கட்டணம் வசூலிக்கப்படுகிறது?

(ஆ) அது அணையின் பூங்கா அபிவிருத்திக்காக எந்த விதத்தில் செலவு செய்யப்படுகிறது?

(இ) 1992-93-ல் எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டுள்ளது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) அரசு ஆணை (நிலை) எண்.667, பொதுப்பணித்துறை, நாள் 18-4-1988-ல் பூங்கா நுழைவு கட்டணம் பெரியவர்/சிறுவர்களுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.0.50 வசூலிக்க ஆணையிடப்பட்டது. அதன்படி நுழைவு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்காணும் அரசு ஆணையின்படி கீழே குறிப்பிட்ட இனங்களுக்கும் நுழைவுக் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது.

		ரூ.
1.	நுழைவுக்கட்டணம் ..	0.50
2.	மிதிவண்டி நிறுத்த கட்டணம் ..	0.50

3.	மாட்டுவண்டி நிறுத்த கட்டணம்	..	0.50
4.	மோட்டார் சைக்கிள், மொபெட், ஸ்கூட்டர் நிறுத்த கட்டணம்	..	1.00
5.	மோட்டார் கார் நிறுத்தக் கட்டணம்	..	2.00
6.	டூரிஸ்ட் கார், லாரி மற்றும் பஸ் நிறுத்தக் கட்டணம்		5.00
7.	உல்லாசப்படகு (பெரியவர்)	..	2.00
8.	உல்லாசப்படகு (சிறியவர்)	..	1.00

(ஆ) அணை மற்றும் பூங்கா பராமரிப்பிற்கு மற்றும் அபிவிருத்திக்கு என குறியீட்டு அளவு (Prescribed norms) ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை. அணை மற்றும் பூங்கா பராமரிப்பிற்கு தனித்தனி மதிப்பீடுகள் தேவைக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டு ஒதுக்கீட்டிற்குத் தக்கபடி செலவினம் செய்யப்படுகிறது.

(இ) 1992-93-ஆம் ஆண்டில் கே.ஆர்.பி. அணை பூங்கா நுழைவுக் கட்டணம் ரூ. 1,35,036 வசூலிக்கப்பட்டுள்ளது. இதில் மிதிவண்டி, ஸ்கூட்டர், பஸ், லாரி கட்டண வசூலும் அடங்கும்.

40—

மதகேரியில் தரைப்பாலம் கட்டுதல்

வினா எண். 25058—*திரு. கா. பூ. முனுசாமி:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காவேரிப்பட்டணம் தொகுதி மதகேரி கிராமத்திற்குச் செல்லும் வழியிலுள்ள ஓடையின் மீது தரைப்பாலம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

காவேரிப்பட்டணம் தொகுதி மதகேரி கிராமத்திற்குச் செல்லும் வழியிலுள்ள ஓடை, காரிமங்களம் ஊராட்சிக்குட்பட்ட சாலையில் தப்பை பள்ளம் என்ற இடத்தில் உள்ளது. இவ்விடத்தில் குறுக்கிடும் ஓடையின் நீர் வழிப் பாதையின் அகலம் 10 மீட்டராகும். இவ்விடத்தில் ஒரு உயர்மட்டப் பாலம் கட்ட தோராயமாக ரூ. 15.00 இலட்சம் செலவாகும். எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நெடுஞ்சாலைத் துறை மூலம் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்பாடு செய்தல் மற்றும்

பாலங்கள் கட்டுவதற்கு வழி வகை செய்யப்படவில்லை. எனவே இப்பாலப் பணியினை நெடுஞ்சாலைத் துறையின் பகுதி-2 திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ள இயலாது.

41—

கவிநாடு பெரியகுளத்தை மராமத்து செய்தல்

வினா எண் 26020—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை-யூனியன், கவிநாடு மேலவட்டம் கவிநாடு பெரியகுளத்தை மராமத்து செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): கவிநாடு பெரியகுளம் பொதுப்பணித்துறை பராமரிப்பில் உள்ள பெரிய கண்மாய் ஆகும். இதன் கரையை எல்.எஸ். 1,900 மீ. முதல் 2700 மீ. வரை 800மீ. நீளத்திற்கு பலப்படுத்தி மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்படவுள்ளது. இதைத் தவிர மீதமுள்ள கரையின் நீளம் முழுமைக்கும் பலப்படுத்த வேண்டும். எனவே கவிநாடு பெரிய குளத்திற்குத் தேவையான மராமத்து பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு நிதி நிலைமைக் கேற்ப நடப்பாண்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

42—

திருநெல்வேலி மாவட்டம், கருப்பா நதியை சீரமைத்தல்

வினா எண் 27402—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியம், கருப்பாநதியை சீரமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியம், கருப்பா நதியை (அணையை) சீரமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

43—

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி பெரிய குளத்தை மராமத்து செய்தல்

வினா எண் 27525—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், வாசுதேவநல்லூர் ஒன்றியம், சிவகிரி பெரியகுளத்தை மராமத்து செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

இல்லை.

44—

திருநெல்வேலி மாவட்டம், சின்ன ஆவுடையப்பேரி குளத்தை செப்பனிடுதல்

வினா எண் 27528—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், வாசுதேவநல்லூர் ஒன்றியம் சிவகிரி சின்ன ஆவுடையப்பேரி குளத்தைச் செப்பனிட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

ஆம். சின்ன ஆவுடையப்பேரி குளத்தின் ஆயக்கட்டு 406.3 ஏக்கர். இக்குளத்தில் வெள்ளச் சேதாரங்களை நிரந்தரமாக மராமத்து செய்வதற்கு

உலக வங்கி நிதியுதவியுடன் பணிகள் மேற்கொள்ள ரூ. 2.00 இலட்சம் செலவில் மதிப்பீடு தயாரித்து பரிசீலனையில் உள்ளது.

45—

சிவகிரி ராஜிங்கபேரி குளத்தை மராமத்து செய்தல்

வினா எண் 27529—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், வாசுதேவநல்லூர் ஒன்றியம், சிவகிரி ராஜிங்கபேரி குளத்தை மராமத்து செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

ஆம். ராஜிங்கபேரி குளத்தின் ஆயக்கட்டு 1906.80 ஏக்கராகும். இக்குளத்தில் கலுங்கு மராமத்து செய்வதற்கும் ரூ. 2.00 இலட்சம் செலவில் மதிப்பீடு தயாரித்து மதிப்பீடுகள் பரிசீலனையில் உள்ளது. நடப்பு நிதியாண்டில், நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

46—

பட்டுக்கோட்டை தாலுக்காவில் அணைக்கட்டு கட்டுதல்

வினா எண் 28466—திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தாலுக்கா, பட்டுக்கோட்டை-அறந்தாங்கி சாலையில் குறுக்காக , வரும் நரியாற்று நீரை அணைக்கட்டி அதன் மூலம் கழுகுப்புளிக்காடு பைங்காட்டு வயல் ஏரிக்கு தண்ணீர் விட நடப்பு ஆண்டில் அரசின் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

பட்டுக்கோட்டை தாலுக்கா, பட்டுக்கோட்டை அறந்தாங்கி சாலையில் குறுக்காக வரும் நரியாற்று நீரை அணைக்கட்டி அதன் மூலம் கழுகுப்புளிக்காடு பைங்காட்டுவயல் ஏரிக்கு தண்ணீர் விட ரூ.24.50 இலட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அது தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

47—

நம்பியாறு அணைத் திட்டம் பற்றிய விவரம்

வினா எண் **33224—**திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நம்பியாறு அணைப் பணி முடிந்து விட்டதா?

(ஆ) ஆம் எனில் அதனால் பயன்பெறும் குளங்களில் இலங்கையாடி சுவிசேஷபுரம் குளங்கள் சேர்க்கப்பட்டுள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) இல்லை. 1995-ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) இல்லை. திட்டப் பணிகள் முடிவுற்று அணையின் செயல்பாடுகள் 5 வருட காலத்திற்கு கண்காணித்து திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள குளங்களுக்குத் தேவையான நீர் வழங்கியது போக கூடுதலாக நீர் இருக்கும் நிலை ஏற்பட்டால் அவ்வப்போது கூடுதலாக குளங்களை சேர்ப்பது குறித்து முடிவு எடுக்கப்படும்.

48—

திருப்பத்தூர் தொகுதியில் பாலம் கட்டுதல்

வினா எண் **35849—**திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, மடவளம் ஏரிக்கும் செலந்தம் பள்ளி ஏரிக்கும் மத்தியில் உள்ள பழைய பாலத்திற்குப் பதிலாகப் புதிய பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள பாலமானது அரசு முக்கிய மாவட்ட சாலையாக திருப்பத்தூர் ஆலங்காயம் சாலை கி.மீ.6/19-ல் அமைந்துள்ளது. மடவளம் ஏரியின் உபரி நீர் இச்சாலையில் கி.மீ.6/10-ல் கடந்து செலந்தம்பள்ளி ஏரிக்கும் செல்கிறது. மேற்படி உபரி நீர் கால்வாய் சாலையை கடக்கும் இடத்தில் 1.58 மீட்டர் அகலத்திற்கு 5 கண்கள் கொண்ட ஒரு பழைய பாலம் உள்ளது. இப்பாலத்தின் மேல் தளம் கருங்கல் மூடு பாறைகளால் ஆனது. இப்பாலம் வலுவிழந்தும் குறுகலாகவும் உள்ளது. மேற்படி சாலையானது இப்பகுதியில் உள்ள பல முக்கிய கிராமங்களை, அருகில் உள்ள ஒரே நகரமான திருப்பத்தூருடன் இணைப்பதால் இங்கு விளைவிக்கும் அனைத்து விளை பொருட்களும் இச்சாலை வழியாக மட்டுமே திருப்பத்தூர் சென்று விற்கப்பட்டு வருகின்றன. மேலும், திருப்பத்தூரில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைந்துள்ளதாலும், சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த காவலூர் வானிலை நிலையம் ஜலகாம்பாறை திருக்கோயில் ஆகியவற்றிற்கு சுற்றுலா பயணிகள் மற்றும் பக்தர்களும் இச்சாலை வழியாகத்தான் செல்ல வேண்டியிருப்பதாலும், இச்சாலையில் அமைந்துள்ள வலுவிழந்த பாலத்தை திரும்பக் கட்டுவது மிகவும் அவசியமாகிறது. அதற்குத் தோராயமாக ரூ. 5.00 இலட்சம் தேவைப்படும். ஆண்டுதோறும் திட்டப் பணிகளுக்கு குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு கிடைப்பதால் இப்பணியை அண்மைக் காலங்களில் எடுத்துச் செய்யும் சாத்தியக் கூறுகள் இல்லை.

49—

தமிழ்நாடு சிறு தொழில் கழகத்தைச் சீரமைத்தல்

வினா எண் 36966—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிறு தொழில் கழகம் (டான்சி) தற்போது நஷ்டத்தில் செயல்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் நிர்வாகத்தைச் சீரமைப்பது பற்றி பரிசீலிக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு.துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) நலிந்த தொழிற் கூடங்களை மூடி விடுதல் உபரியான தொழிலாளர்கள்/பணியாளர்கள் மற்றும் அதிகாரிகளை மாற்று தொழில்களில் அமரும் பொருட்டு தன்விருப்ப பணி விலகல் திட்டம் அமல்படுத்துதல், மூடிய தொழிற்கூடங்களின் சொத்துக்களை விற்பனை செய்தல், கடந்த கால கடன்களை மான்யமாக மாற்றுதல், அரசு கடன்கள் மீதான வட்டியை தள்ளுபடி செய்தல், விற்பனை வரி மான்யம் முதலிய பல திட்டங்களின் மூலம் டான்சியின் நிர்வாகம் சீரமைக்கப்பட்டு வருகிறது.

50—

சேந்தமங்கலம் தொகுதியில் தக்காளிச் சாறு பிழியும் தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 38085—திரு கே. சின்னசாமி: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, முள்ளுகுறிச்சி பகுதியில் தக்காளி அதிகமாக பயிரிடுவதால், தக்காளிச் சாறு பிழிந்தெடுக்கும் தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு.துரை ராமசாமி, ஊரகத் தொழில்துறை அமைச்சர்:

சேந்தமங்கலம் தொகுதி, முள்ளுகுறிச்சி பகுதியில் தக்காளிச்சாறு பிழிந்தெடுக்கும் தொழிற்சாலை அமைப்பது சம்பந்தமான செயற் குறிப்பு ஏதும் இல்லை. அரசு கொள்கை ரீதியாக, எந்த தொழிற்சாலையையும் இத்துறையின் மூலம் தொடங்குவதில்லை. இருப்பினும் தனியார் எவரேனும் இது சம்பந்தமான தொழிற்சாலை அமைக்க முன் வருவார்களேயானால் அவர்களுக்கு பலவிதமான ஊக்க உதவித் தொகைகளும், தக்க

ஆலோசனைகளையும் வழங்குகிறது. ஆர்வமுள்ள நபர்கள் மாவட்ட தொழில் மையங்களை அணுகி தக்க ஆலோசனைகளையும், உதவிகளையும் பெறலாம்.

51—

இராமநாதபுரம் மாவட்டத்தில் தரிசு நிலங்களை மேம்பாடு செய்தல்

வினா எண் **35503—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் நிலங்களை அபிவிருத்தி செய்ய அரசு நிதி ஒதுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இதில் மத்திய அரசு பங்கு பெறப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் நிலங்களை அபிவிருத்தி செய்தது குறித்தான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

ஆண்டு.	குறியீடு. (ஹெக்டரில்)		நிதி. (இலட்சத்தில்)	
	இலக்கு.	அடைவு.	இலக்கு.	அடைவு.
(1)	(2)	(3)	(4)	(5)
1991-92	250	250	3.75	3.75
1992-93	500	500	7.50	7.449
1993-94	500	500	7.50	7.50

(ஆ) இது சம்பந்தமாக மாநில அரசு மைய அரசிடம் நிதி வழங்குமாறு கோரியதும், தரிசு நில அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்துவதற்கான எந்த ஒரு திட்டமும் மைய அரசிடம் இல்லாததால்

இத்திட்டத்தின் கீழ் முந்தைய ஆண்டுகளில் செலவழிக்கப்பட்ட தொகைக்கு சமமான தொகையையும், 1994-95 ஆம் ஆண்டிற்குத் தேவைப்படுகின்ற தொகையையும் மாநில அரசுக்கு வழங்க இயலாது என்று மைய அரசு தெரிவித்து விட்டது. அதனால் 1994-95 ஆம் ஆண்டில் மாநிலத்தில் இத் திட்டத்தை செயல்படுத்த இயலாமல் போய்விட்டது.

52—

மதுராந்தகம் தொகுதியில் ஒழுங்கு முறை விற்பனைக்கூடம் அமைத்தல்

வினா எண் **38072**—*திரு. பி. சொக்கலிங்கம்:* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதி, லத்தூர் ஒன்றியம், கடலூர் ஊராட்சியில் ஓர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

மதுராந்தகம் தொகுதி, லத்தூர் ஒன்றியம், கடலூர் ஊராட்சி, செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்ட விற்பனைக் குழுவிற்கு உள்ளடங்கிய பகுதி ஆகும். ஏற்கனவே மதுராந்தகம் மற்றும் அச்சரப்பாக்கம் ஆகிய இடங்களில் (கடலூர் ஊராட்சியில் இருந்து சுமார் 15 கி.மீ. தொலைவில்) ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் அனைத்து வசதிகளுடன் இயங்கி வருகின்ற காரணத்தால், தனியாக கடலூர் ஊராட்சியில் ஓர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் ஏற்படுத்த வேண்டிய அவசியம் தற்பொழுது எழவில்லை.

53—

வெள்ளத்தினால் பரமக்குடி தொகுதியில் பாதிக்கப்பட்ட மிளகாய், மல்லியின் மதிப்பு

வினா எண் **38205**—*டாக்டர் ச. சுந்தரராஜ்:* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

(அ) பரமக்குடி தொகுதியில் நவம்பர் மற்றும் டிசம்பர் 1993-ல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மிளகாய், மல்லியின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) அவற்றிற்கு அரசு வழங்கிய மானியம் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

(அ) 1993-ல் நவம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய மாதங்களில் பரமக்குடி தொகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் மிளகாய் மற்றும் மல்லி பயிர்கள் 118 எக்டேர் அளவுக்கு பாதிக்கப்பட்டன.

(ஆ) பாதிக்கப்பட்ட 168 விவசாயிகளுக்கு ரூ. 3.540 இலட்சம் மான்யமாக வழங்கப்பட்டது.

54—

பரமக்குடி தொகுதியில் பயிர்ச் சேதங்கள் விவரம்

வினா எண் 38387—*டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1993-ஆம் ஆண்டு நவம்பர்-டிசம்பர் ஆகிய மாதங்களில் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதியில் ஏற்பட்ட பயிர்ச் சேதங்கள் எவ்வளவு?

(ஆ) இதற்கென அரசு வழங்கிய மானியம் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்:

(அ) 1993 ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் 118 எக்டேர் பரப்பளவு நிலத்தில் மிளகாய் பயிர் சேதமடைந்தது. நெல் முழு பாதிப்பு 302 எக்டேர், பகுதி பாதிப்பு 441 எக்டேர், நிலக்கடலை 50 எக்டேர் மற்றும் பருத்தி 210 எக்டேர் பரப்பளவில் பயிர்கள் சேதமடைந்துள்ளது.

(ஆ) சேதமடைந்த பயிர்களுக்கு கீழ்க்கண்டவாறு நிவாரணம் வழங்கப்பட்டது.

வரிசை எண் மற்றும் பயிர்கள்.	வழங்கப்பட்ட மானியத் தொகை. (ரூ.)	பயனடைந்த விவசாயிகள்.		
		சிறு.	குறு.	மொத்தம்.
1. நெல் (முழு பாதிப்பு)	2,70,294			
2. நெல் (பகுதி பாதிப்பு)	1,33,666			
3. நிலக்கடலை ..	1,09,728	393	98	491
4. பருத்தி ..	1,20,679			
5. மிளகாய் ..	3,54,000			168

55—

துறையூர் வட்டத்தில் பால் பதப்படுத்தும் நிலையம் அமைத்தல்

வினா எண் 35924—டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டத்தில் பாலைப் பதப்படுத்தும் நிலையம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்:

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் துறையூர் வட்டத்தில் பாலைப் பதப்படுத்தும் நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளது.

(ஆ) தற்போது திருச்சிராப்ள்ளி நகரில் புதிய நவீன வடிவில், வடிவமைக்கப்பட்டிருக்கும் பால் பண்ணை விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது. அப்படி ஆரம்பிக்கப்பட்டவுடன், தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் பால் பண்ணையிலிருக்கும் இயந்திரங்களைக் கொண்டு துறையூர் பகுதியில் ஓர் புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட உள்ளது.

56—

திருப்பத்தூர் தொகுதியில் பென்சிலின் மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 27793—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதியில் பென்சிலின் மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு மைய அரசினை வற்புறுத்துமா?

விடை—

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்:

அவசியமில்லை. விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டு உள்ளது.

விவர அறிக்கை

பூனாவிலுள்ள இந்துஸ்தான் அன்டிபயாடிக் லிமிடெட் மைய அரசு நிறுவனம் அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான பென்சிலின் மருந்துகளை இடையூறின்றி சப்ளை செய்து வருகின்றனர். மேலும் சப்ளை ஆர்டர்கள் கிடைக்கப் பெறுமா என்று காத்துக்கொண்டு இருக்கின்றனர். எனவே, பென்சிலின் மருந்து தயாரிப்பதற்கு தொழிற்சாலை ஒன்று திருப்பத்தூர் தொகுதியில் ஏற்படுத்த மைய அரசினை வற்புறுத்த வேண்டிய அவசியம் இல்லை.

மேலும், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் மற்றும் தொழில் முன்னேற்றக் கழகத்தின் உதவியுடன் பென்சிலின் ஜி. தயாரிக்கும் இரண்டு தொழிற்சாலைகளை கடலூரில் நிறுவ ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஜே. கே. பார்மாசெம் லிமிடெட் (J.K. Pharmachem Limited) ரூ. 210 கோடி முதலீட்டில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்துடன் இணைந்து இத்தொழிற்சாலை கடலூர் சிப்காட் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. 338 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கக் கூடிய இத் தொழிற்சாலை டிசம்பர் 1994-ல் உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்பிக் பார்மா லிமிடெட் (Spic Pharma Public Limited) ரூ. 180 கோடி முதலீட்டில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்துடன் இணைந்து கடலூர் சிப்காட் வளாகத்தில் இத் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. 275 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் இந் நிறுவனம் 1-11-1994 முதல் உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

.., +35 - 21

57—

தொடக்கக் கல்வி மாவட்ட அலுவலர் பணி ஏற்படுத்துதல்

வினா எண் 8123—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கல்வி மாவட்ட அளவில் தொடக்கக் கல்விக்கென தனியான தொடக்கக் கல்வி மாவட்ட அலுவலர் (D.E.E.O.) ஏற்படுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

அரசாணை எண் 588, க.தொ.அ., நாள் 15-7-1994-ல் ஒவ்வொரு மாவட்ட அளவில் ஒரு தொடக்கக் கல்வி அலுவலகம் தொடங்க அரசு ஆணையிட்டுள்ளது. இதை நடைமுறைப்படுத்த 31-10-1994 வரை அவகாசம் தரப்பட்டுள்ளது.

58—

வெட்டன்விடுதி அரசு உயர்நிலைப்பள்ளிக்குக் கூடுதலாக ஆசிரியர் நியமனம்

வினா எண் 25249—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, வெட்டன்விடுதி அரசு உயர்நிலைப்பள்ளிக்குக் கூடுதலாக ஆசிரியர்கள் நியமிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

ஒவ்வொரு ஆண்டும் அரசால் புதியதாக தோற்றுவிக்கும் ஆசிரியர் பணியிடங்கள், பள்ளிகளின் தேவையின் அடிப்படையில் முதன்மைக் கல்வி அலுவலர் மூலமாக சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. 1993-94 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட புதிய பணியிடங்கள் 1991-92 மற்றும் 1992-93 ஆம் ஆண்டில் புதியதாக திறக்கப்பட்ட பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1994-95 ஆம் ஆண்டிற்கு அரசால் கூடுதல் பணி இடங்கள் புதியதாக தோற்றுவிக்கப்படும்போது மேற்காண் பள்ளியின் தேவையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

59—

சா. அய்யம்பாளையம் தொடக்கப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்துதல்

வினா எண் 35957—திரு. எம். தங்கவேல்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி தொகுதி, மணச்சநல்லூர் ஒன்றியம், சா. அய்யம்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திக் கொடுக்க நடப்பு நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை.

60—

தென்னூர் காலனிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 2926—திரு. இரா. தங்கராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், தென்னூர் காலனிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. வரதராஜன்பேட்டை கிராமப் பேரூராட்சியில் உள்ள, தென்னூர் குடியிருப்பின் ஒரு பகுதியே தென்னூர் காலனி ஆகும். இங்கு 1,500 மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இப்பேரூராட்சிக்கு குடிநீர் வசதி அளிக்கும் பொருட்டு தென்னூர் காலனியில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு, பகிர்மானக் குழாய்கள் பதித்து பொதுக் குழாய்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தை மக்களின் பயனுக்கு கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

61—

வாலியக்காடு தென் பகுதியில் போர்வெல் அமைத்தல்

வினா எண் 3190—**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், துறையூரைச் சேர்ந்த வாலியக்காடு தென் பகுதியில் ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

துறையூர் கிராமத்திற்கு தற்பொழுது ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு, குழாய் பதிக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. எனவே, வாலியக்காடு தென் பகுதிக்கும் குழாய்கள் பதிக்கப்பட்டு விரைவில் குடிநீர் வழங்கப்படும்.

62—

கோரவயல்காட்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 7140—**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி கோரவயல் காட்டில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி கோரவயல்காடு கிராமத்தின் குடிநீர்த் திட்டப் பணிகள் அனைத்தும் முடிவுற்று திட்டம் பராமரிப்புக்காக ஊராட்சி ஒன்றியத்திடம் நவம்பர் 1993-ல் ஒப்படைக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது.

63—

செருவா விடுதியில் போர்வெல் அமைத்தல்

வினா எண் 7219—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செருவா விடுதி மேற்கு ஆதிதிராவிடர் தெருவிற்கு தனியாக ஒரு போர்வெல் போட்டுக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நடுத்தெரு என்கிற செருவாவிடுதி மேற்கு ஆதிதிராவிடர் தெருவில் நிறுவப்பட்டுள்ள கையிறைப்பான் வேலைகள் முடிக்கப்பட்டு தற்சமயம் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. எனவே, தனியாக போர்வெல் போட செயற்குறிப்பு இல்லை.

64—

சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தில் ஆழ்குழாய் கிணறுகள் அமைத்தல்

வினா எண் 7551—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், தில்லங்காடு கிழக்குப் பகுதியிலும், மத்திய பகுதியிலும் ஆழ்குழாய் கிணறு அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

இல்லை. சேதுபாவாசத்திரம் ஒன்றியம், தில்லங்காடு மத்திய பகுதியில் 15,000 லிட்டர் கொள்ளளவுள்ள மின் விசைத்திட்டம் உள்ளது. இத்திட்டத்திலிருந்து தில்லங்காடு மத்திய பகுதிக்கு 2 குடிநீர் மேடை மூலமாக குடிநீர் வழங்கப்படுகிறது.

65—

உலக வங்கி நகர்ப்புற வளர்ச்சிக்கு நிதியுதவி வழங்குதல்

வினா எண் 10361—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர்ப்புற வளர்ச்சிக்காக கடந்த 3 ஆண்டுகளில் எந்தெந்த நகராட்சிகளுக்கு எவ்வளவு நிதியுதவி (ஆண்டு வாரியாக) வழங்கப்பட்டன?

(ஆ) நகர்ப்புற வளர்ச்சிக்காக உலக வங்கியிடமிருந்து கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டுக்கு நிதியுதவி வழங்கப்பட்ட தொகை (ஆண்டு வாரியாக) எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மேற்கண்ட வினாக்களில் கேட்டுள்ள விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

இணைப்பு-1

நகர்ப்புற வளர்ச்சிக்காக நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும் ஆண்டு வாரியாக வழங்கப்படும் தொகை.

(தொகை ரூபாயில்)

வரிசை எண் மற்றும் நகராட்சி/மாநகராட்சி.	1989-90	1990-91	1991-92	1992-93 (பிப்ரவரி 1993 முடிய)	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1. ஆலந்தூர் ..	16,98,550	25,54,450	97,06,000	..	1,39,59,000
2. அம்பத்தூர் ..	5,65,493	44,03,507	44,34,000	..	94,03,000
3. ஆவடி ..	5,65,493	7,34,507	20,15,000	5,58,000	38,73,000
4. கத்திவாக்கம் ..	..	8,49,000	..	..	8,49,000
5. மாதவரம் ..	6,81,443	28,45,557	7,62,000	..	42,89,000

(தொகை ரூபாயில்)

வரிசை எண் மற்றும் நகராட்சி/மாநகராட்சி.	1989-90	1990-91	1991-92	1992-93 (பிப்ரவரி 1993 முடிய)	மொத்தம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
6. பல்லாவரம் ..	5,09,357	19,12,643	38,39,000	..	62,61,000
7. தாம்பரம் ..	5,65,493	36,79,507	22,63,000	..	65,08,000
8. திருவொற்றியூர் ..	5,33,298	49,25,702	8,16,000	..	62,75,000
9. கோயம்புத்தூர் மாநகராட்சி ..	14,75,416	..	32,20,844	19,04,000	66,00,660
10. ஈரோடு ..	..	98,75,000	80,84,000	41,00,000	2,20,59,000
11. கோல்டன் ராக் ..	..	..	15,12,600	1,87,400	17,00,000
12. சென்னை மாநகராட்சி	..	..	7,82,00,000	3,70,00,000	11,52,00,000
13. மதுரை மாநகராட்சி	..	75,05,569	50,00,000	1,37,25,000	2,62,30,569
14. மேல பாளையம்	2,26,611	45,73,389	..	..	48,00,000
15. நாகர்கோவில் ..	10,18,716	60,81,284	60,00,000	..	1,31,00,000
16. பாளையங்கோட்டை	9,62,580	68,87,420	..	..	78,50,000
17. ராஜபாளையம் ..	5,65,493	19,34,507	95,00,000	..	1,20,00,000
18. சேலம் ..	51,94,421	1,26,21,579	2,06,25,000	2,02,45,000	5,86,86,000
19. சங்கரன்கோவில்	4,53,223	30,16,777	15,00,000	..	49,70,000
20. சிவகாசி ..	5,09,357	77,90,643	10,00,000	..	93,00,000
21. ஸ்ரீரங்கம் ..	7,92,104	19,47,896	11,25,000	10,50,000	49,15,000
22. சூரமங்கலம் ..	6,79,834	18,77,969	23,67,197	55,60,000	1,04,85,000
23. தேனி ..	..	25,00,000	..	..	25,00,000
24. திருச்சி ..	9,06,446	1,93,39,194	50,54,360	..	2,53,00,000
25. திருநெல்வேலி	10,38,342	36,61,658	10,00,000	..	57,00,000
26. திருப்பூர்	18,10,819	71,50,000	76,89,181	20,00,000	1,86,50,000
27. தூத்துக்குடி	18,48,239	67,50,000	41,00,000	15,01,761	1,32,00,000
28. வேலூர்	..	44,30,000	74,10,000	..	1,18,40,000

(தொகை ரூபாயில்)

வரிசை எண் மற்றும் நகராட்சி/மாநகராட்சி.	1989-90	1990-91	1991-92	1992-93 (பிப்ரவரி 1993 முடிய)	மொத்தம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
29. விருதுநகர்	..	55,00,000	..	..	55,00,000
30. தர்மபுரி	..	..	22,49,586	61,43,414	83,93,000
31. கும்பகோணம்	..	..	51,27,146	65,50,000	1,16,77,146
32. சிவகங்கை	..	..	45,00,000	..	45,00,000
33. தஞ்சாவூர்	..	..	75,62,000	26,00,000	1,01,62,000
34. உதகமண்டலம்	..	..	98,65,000	19,40,000	1,08,05,000
35. கரூர்	..	..	33,30,960	79,19,040	1,12,50,000
36. நாமக்கல்	..	..	..	37,50,000	37,50,000
37. புதுக்கோட்டை	..	..	..	50,00,000	50,00,000
38. ராமநாதபுரம்	..	..	..	8,00,000	8,00,000
39. திருவண்ணாமலை	..	..	..	41,45,000	41,45,000
40. அரக்கோணம்	..	..	..	27,00,000	27,00,000
41. கடையநல்லூர்	..	..	..	27,60,000	27,60,000
42. செங்கோட்டை	..	..	..	14,15,000	14,15,000
மொத்தம்	2,16,00,728	13,53,47,758	21,98,57,874	13,35,54,015	51,03,60,375

66—

ஏரிப்புறக்கரையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

வினா எண் **13382—திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரை ஆதிதிராவிடர் 2-வது வார்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1995 மார்ச் 14]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

67—

முதல்சேரி கீழத்தெருவில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல்

வினா எண் 13390—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், முதல்சேரி கீழ்த்தெருவில் 1992-93-ல் ஆழ்குழாய்க்கிணறு (Bore well) ஒன்று அமைத்துத் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

68—

அண்ணா நகர் காலனிக்கு கையிறைப்பான் அமைத்தல்

வினா எண் 14019-திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணித் தொகுதி, பெருமகளூர் பேரூராட்சி, அண்ணா நகர் (இந்திரா நகர் புதிய காலனி) காலனிக்கு கையிறைப்பான் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை. இந்தப் பகுதியில் ஒரு இந்தியா மார்க்-2 கையிறைப்பான் பொருத்தப்பட்டு நல்ல முறையில் இயங்கி பயனில் இருந்து வருகிறது. இந்தப் பகுதிக்கு இந்தக் கையிறைப்பான் போதுமானதாகும்.

69—

வா.கொல்லைக்காட்டில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

வினா எண் **14332—***திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், வா.கொல்லைக்காட்டில் **1992-93-**ல் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

1992-93-ல் ஒரு ஆழ்குழாய்க் கிணறு வா. கொல்லைக்காட்டில் நிறுவப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகின்றது.

70—

புதிய தொழில்வரிச் சட்டத்தின் மூலம் பதிவுச் சான்றிதழ் பெறும் விவரம்

வினா எண் **16052—***திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புதிய தொழில்வரிச் சட்டத்தின்படி பதிவுச் சான்றிதழ் பெற தாமதிக்கும் ஒவ்வொரு நாளும் ரூ. **100** அபராதமென்று இருப்பதைக் குறைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு நுண்ணறிவுத் திறத் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள், பணித் தொழில்கள், சட்டம் பிரிவு **5(6)**-ன்படி பதிவு செய்யப்படாமலிருக்கும் ஒவ்வொரு நாளுக்கும் பணியிலமர்த்துவதற்கு ரூ. **100** அபராதமும், தனி நபர்களுக்கு ரூ. **20** அபராதமும் செலுத்தப்பட வேண்டும் என இருந்தது. **1994**-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம்-**9** மூலம் நிறுவனங்களுக்கு ரூ. **100** என இருந்த அபராதத் தொகை ரூ. **20** ஆகவும், தனி நபர்களுக்கு ரூ. **20** என இருந்த அபராதத் தொகை ரூ. **5** ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

71—

சேதுபாவாசத்திரம் ஒன்றியத்தில் போர்வெல் அமைத்தல்

வினா எண் 16206—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை ஊராட்சி குறிஞ்சிவனம் ரெட்டவயல் சொசைட்டிக்கு அருகில் ருத்திரசிந்தாமணி ஆகிய இடங்களில் 1992-93 இல் போர்வெல் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

72—

பரமக்குடி நகராட்சியில் இறைச்சி வெட்டும் கூடத்தில் தகுதியான ஆடுகளை வெட்டுதல்

வினா எண் 16402—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி நகராட்சியில் இறைச்சி வெட்டும் கூடத்தில் (Slaughter house) சீல் வைத்து ஆடுகளை வெட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பரமக்குடி நகராட்சி இறைச்சி வெட்டும் இடத்தில் பொது சுகாதார அதிகாரிகள் மேற்பார்வையில் தரமான ஆடுகளை அறுத்தபின் துப்புரவு ஆய்வர் இறைச்சியை பார்வையிட்டு மனித உணவு உபயோகத்திற்கு தகுதியானது என்று பரிசோதனை செய்த பின்பு மையினால் நகராட்சி முத்திரை இடப்பட்டு வெளியில் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

73—

கீழமருதாத்தநல்லூரில் குடிநீர் குழாயினைப் பழுதுபார்த்தல்

வினா எண் 16781—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மயிலாடுதுறை தொகுதி கீழமருதாத்தநல்லூர் கிராமத்தில் பழுதுபட்ட குடிநீர் குழாயினை பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

1992-93-ஆம் நிதி ஆண்டில் ரூ. 3.39 இலட்சம் மதிப்பீட்டில் புதிய திட்டம் அமைக்கப்பட்டு பணிகள் யாவும் முடிக்கப்பட்டுள்ளன. மின் இணைப்பு பெற்றவுடன் திட்டம் மக்கள் பயனுக்கு கொண்டு வரப்படும்.

74—

மருதாத்தாள்புரம் ஆதிதிராவிடர் காலனிக்கு ஆழ்குழாய் கிணறு அமைத்தல்

வினா எண் 20724—திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், மருதாத்தாள்புரம் ஆதிதிராவிடர் காலனிக்கு ஆழ்குழாய் கிணறு அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம், மருதாத்தாள்புரம் கிராமத்தில் மக்கள் தொகை 240 ஆகும். அங்கு மூன்று கையிறைப்பான்கள் உள்ளன. இவைகளிலிருந்து கிடைக்கும் நீர் இக்கிராமத்திற்கு போதுமானதாக இல்லை. இக்கிராமம் பகுதியளவு குடிநீர் வசதி பெற்ற கிராமமாகவே வகைப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு தற்பொழுது 10-லிருந்து 25 எல்.பி.சி.டி வரையான குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. எனவே வரும் ஆண்டுகளில் முன்னுரிமைப் படி திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் எடுக்கப்பட்டு, ஆழ்குழாய் கிணறு அமைக்கப்படும்.

75—

பேரநாயக்கன்புதூரில் ஆழ்குழாய் கிணறு மற்றும் குடிநீர்த் தொட்டி அமைத்தல்

வினா எண். 22457—டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி ஒன்றியம், பேரநாயக்கன்புதூரில் குடிநீர் தொட்டி கட்டி, பொது மக்களுக்கும் ஆதிதிராவிடர் காலனிக்கும் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைத்து குடிநீர் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

76—

திருப்பத்தூர் நகராட்சியின் பூங்காக்களை சீரமைத்தல்

வினா எண் 22687-திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் நகராட்சியில் அனைத்துப் பூங்காக்களையும் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

திருப்பத்தூர் நகராட்சியிலுள்ள பூங்காக்கள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பி. கோவிந்தசாமி, பி. முனுசாமி மனைப்பிரிவு பூங்கா மற்றும் நரசிங்கராவ் காலனி பூங்கா ஆகியவற்றில் சுற்றுச் சுவர் மற்றும் தொலைக்காட்சி அறை கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. சேர்மன் வீரபத்ரனார் பூங்காவில் விளையாட்டு பொருள்கள்,

வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி ஆகியவை வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. சேர்மன் துரைசாமியார் பூங்காவில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ளது. இப்பூங்காவினை கனரா வங்கியின் பராமரிப்பிற்கு விட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

77—

செங்கற்பட்டு நகரில் பாதாள சாக்கடை அமைத்தல்

வினா எண் 22857—திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு நகரில் பாதாள சாக்கடை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

78—

எரவாஞ்சேரியில் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 22918—திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மணவாளர் ஊராட்சிக்கு எரவாஞ்சேரியில் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டிடத்தைக் கட்டி முடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மணவாளர் ஊராட்சிக்கு எரவாஞ்சேரியில் ஊராட்சி மன்றக் கட்டிடம் 1993-94-ல் ஜவஹர் வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலம் கட்டப்பட்டு வேலை முடியும் தருவாயில் உள்ளது.

79—

பழையநல்லூரில் குடிநீர் மேல்நிலை தேக்கத் தொட்டி அமைத்தல்

வினா எண் 22938—திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, குமராட்சி ஒன்றியம், பழைய நல்லூர் கிராமத்தில் உள்ள குடிநீர் மேல்நிலை தேக்கத் தொட்டி பழுதடைந்து விட்டதால் புதிதாக ஒன்று அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) 1995-96-ஆம் ஆண்டில் செயற்படுத்தப்படும்.

80—

திருவிழந்தூர் கிட்டப்பா நகரில் கழிப்பிட வசதி அமைத்தல்

வினா எண் 23135—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை தொகுதி, திருவிழந்தூர் கிட்டப்பா நகர் 2-வது வார்டுக்கு கழிப்பிட வசதி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

மயிலாடுதுறை தொகுதி, திருவிழந்தூர் நகர் 2-வது வார்டுக்கு கழிப்பிட வசதி செய்ய நகராட்சிக்கு சொந்தமான இடம் இல்லாததால், கழிப்பிட வசதி செய்ய இயலாதுள்ளது.

81—

காட்டுமன்னார்கோயில், ஓமாம்புலியூர் சாலையில் மரங்கள் நடுதல்

வினா எண் 23786—திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோவிலிலிருந்து ஓமாம்புலியூர் வரை செல்லும் சாலைகளின் ஓரங்களில் மரங்கள் நடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

காட்டுமன்னார் கோவிலிலிருந்து ஓமாம்புலியூர் வரை செல்லும் சாலைகளின் ஓரங்களில் மரங்கள் நடவு செய்யும்படி காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி செயல் அலுவலருக்கு தென்னாற்காடு மாவட்ட பேரூராட்சி அலுவலரால் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

82—

காட்டுமன்னார்கோயில் எய்யனூர் சாலையில் மரங்கள் நடுதல்

வினா எண் 23787—திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோவிலிலிருந்து எய்யனூர் வரை செல்லும் சாலையின் ஓரங்களில் புதிதாக மரங்கள் நடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

காட்டுமன்னார்கோவிலிலிருந்து எய்யனூர் வரை செல்லும் சாலை ஓரங்களில் காட்டுமன்னார் கோவில் பேரூராட்சி மூலம் புதிதாக மரங்கள் நடும் திட்டம் ஏதுமில்லை.

83—

சிவபுரி சாலையில் மரங்கள் நடுதல்

வினா எண் 23806—*திரு. என். ஆர். ராஜேந்திரன்:* *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காட்டுமன்னார்கோயில் தொகுதி அண்ணாமலை நகரியத்தில் உள்ள சிவபுரி சாலை காவல் நிலையம் வழியாக செல்லக்கூடிய சாலை ஓரங்களில் மரங்கள் நடப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

காட்டுமன்னார்கோயில் தொகுதி அண்ணாமலை நகர், சிவபுரி சாலை காவல் நிலையம் வழியாக செல்லக்கூடிய, சாலை ஓரங்களில் அண்ணாமலை நகர் நகரியக் குழுவின் மூலம் மரங்கள் நடும் திட்டம் ஏதுமில்லை.

84—

அண்ணாமலை நகரியத்தில் சாலையில் மரங்கள் நடுதல்

வினா எண் 23809—*திரு. என். ஆர். ராஜேந்திரன்:* *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—*

காட்டுமன்னார்கோவில் தொகுதி, அண்ணாமலை நகரியம் வடக்கிருப்புத் தெருவிலிருந்து இழுக்காடு வரை செல்லும் பாதையின் இரு ஓரங்களிலும் மரங்கள் நடப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

காட்டுமன்னார்கோவில் தொகுதி, அண்ணாமலை நகர், வடக்கிருப்புத் தெருவிலிருந்து இழுக்காடு வரை செல்லும் பாதையில் இரு ஓரங்களிலும் அண்ணாமலை நகர் நகரியக் குழுவின் மூலம் மரங்கள் நடத் திட்டம் ஏதுமில்லை.

85—

சேலம் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை

வினா எண் 24409—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில் அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட்டுள்ள அநேக தடைகளை நீக்கி ஆயுள்காப்பீட்டுக்கழக நிதி உதவியுடன் விரைவில் இத்திட்டத்தை செயல்படுத்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

86—

ஆலங்குடி தொகுதியில் ஐ.ஆர்.டி.பி. மூலம் கடன் பெற்றோர் விவரம்

வினா எண் 25252—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதி, கணக்கன்காடு, பொன்னன் விடுதி வாணக்கானகாடு பஞ்சாயத்துகளில் எத்தனை நபர்களுக்கு சென்ற ஆண்டு ஐ.ஆர்.டி.பி. கடன் கொடுக்கப்பட்டது?

(ஆ) வரும் ஆண்டுகளில் எத்தனை நபர்களுக்கு ஐ.ஆர்.டி.பி. கடன் கொடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : ஆலங்குடி தொகுதியில் கணக்கன்காடு மற்றும் பொன்னன் விடுதி ஊராட்சிகளில் 1992-93-ஆம் ஆண்டில் முறையே 10 நபர்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் கொடுக்கப்பட்டது. வாணக்கான்காடு ஊராட்சியில் யாருக்கும் கடன்

வழங்கப்படவில்லை. 1993-94-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் கணக்கன் காட்டில் 22 பேருக்கும், பொன்னன் விடுதியில் 9 பேருக்கும் வாணக்கான் காட்டில் 20 நபர்களுக்கும் கடன் வழங்கப்பட்டது. இனி வரும் ஆண்டுகளில் இதைப்போலவே மத்திய அரசின் விதிமுறைகளுக்குட்பட்டு வறுமைகோட்டிற்கு கீழே உள்ள நபர்களுக்கு கடன் வழங்கப்படும்.

87—

வடகரையில் தொகுப்பு வீடுகள் கட்டுதல்

வினா எண் 35029—*திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

க. பரமத்தி ஊராட்சி ஒன்றியம், வடகரையில் தொகுப்பு வீடுகள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, **உள்ளாட்சித் துறை** *அமைச்சர்:*

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துக் செய்யப்படவேண்டிய பணிகளை தேர்ந்தெடுத்து செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்த ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து தனியாக அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

88—

இடையாத்தி (கி)யில் ஆதிதிராவிடர் நலப்பள்ளி தொடங்குதல்

வினா எண் 16171—*திரு. ஆர்.சிங்காரம்:* மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (கி) ஆதிதிராவிடர் தெருவில் 1992-93-இல் ஒரு ஆதிதிராவிடர் நலப்பள்ளி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

இல்லை.

89—

மட்டம்பட்டியில் தொடக்கப்பள்ளி அமைத்தல்

வினா எண் **22846**—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்ககிரி ஒன்றியம், மட்டம்பட்டியில் தொடக்கப்பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

இல்லை.

90—

பரமனந்தல் கிராமத்தில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்டுதல்

வினா எண் **23399**—டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் ஒன்றியம், பரமனந்தல் கிராமத்தில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

91—

தமிழகத்தில் கோவில் நிலங்களின் ஆக்கிரமிப்பு விவரம்

வினா எண் **290**—திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள பல கோவில் நிலங்களை தனியார் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நிலங்களை அரசு கையகப்படுத்தி கோவிலுக்குச் சொந்தமாக்கி பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): திருக்கோயில் நிலங்களைத் தனியார் ஆக்கிரமிப்புச் செய்வது அரசின் கவனத்தற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அவ்வாறான ஆக்கிரமிப்புக்களை வருவாய்த்துறையினர் மற்றும் காவல் துறையினர் உதவியுடன் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. ஆக்ரமணங்களை உடனடியாக அகற்ற இயலாத இடங்களில் சட்டப்படி நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொண்டு வெளியேற்றவும் அவ்வப்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

92—

தஞ்சாவூர் மாவட்டத் திருக்கோவில்களுக்குரிய தென்னை மரங்கள் பற்றிய விவரம்

வினா எண் 15792—*டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் திருக்கோவில்களுக்குச் சொந்தமான தென்னை மரங்கள் எத்தனை?

(ஆ) அதன் மூலம் கிடைக்கும் வருமானம் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் திருக்கோயில்களுக்குச் சொந்தமாக சுமார் 78,000 தென்னை மரங்கள் உள்ளன.

(ஆ) அவற்றின் மூலம் கிடைக்கும் வருமானம் சுமார் ரூ. 20 இலட்சம் ஆகும்.

93—

கன்னியாகுமரி மாவட்டத்தில் பழுதடைந்த கோயில்களைச் சீர் செய்தல்

வினா எண் 20965—*திரு. இரா. அப்புநடேசன்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் பழுதடைந்துள்ள இந்து கோயில்களை சீர் செய்து பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இப்பணி ஆரம்பிக்கப்படும்.?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : கன்னியாகுமரி மாவட்டத்தில் பழுதடைந்துள்ள இந்து கோயில்களை சீர் செய்து பராமரிக்க கிராமப்புற திருக்கோயில் திருப்பணி திட்டத்தின் கீழ் கீழ்க்கண்டவாறு நிதி உதவி செய்யப்பட்டுள்ளது:-

வருடம்	நிதி உதவி அளிக்கப் பட்ட திருக்கோயில்களின் எண்ணிக்கை	திருப்பணிக்காக அளிக்கப்பட்ட தொகை
1989-90	4	ரூ. 40,000
1991-92	3	ரூ. 75,000
1992-93	4	ரூ. 1,00,000

2. 1993-94-ம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 5 கோயில்களுக்கு கிராமப்புற நிதி உதவி திட்டத்தின் கீழ் தலா ரூ.25,000 நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

94—

உடையார்குடி அனந்தீஸ்வரர் ஆலயத்தில் பக்தர்களுக்கு வசதி செய்து தருதல்

வினா எண் 21807—திரு. என்.ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார்கோயில், உடையார்குடி அனந்தீஸ்வர் ஆலயத்திற்கு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை மூலம் பக்தர்களுக்கு நவீன கழிவறை கட்டிக் கொடுக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

போதுமான நிதிவசதி இல்லாமையாலும் திருக்கோயில் திருப்பணி வேலைகளுக்கே அரசு மான்யத்தை எதிர்பார்க்க வேண்டியுள்ளதாலும்,

காட்டுமன்னார்கோயில் உடையார்குடி அருள்மிகு அனந்தீஸ்வரர் ஆலயத்திற்கு நவீன கழிவறை கட்டிக் கொடுக்க தற்சமயம் இயலாது.

95—

தமிழக திருக்கோயில்களின் சிறுசேமிப்பு திட்டம் பற்றிய விவரம்

வினா எண் 22656—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதிலும் உள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து 1-4-1992-லிருந்து 31-3-1993 வரையான ஓராண்டு காலத்தில் சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

(ஆ) அதிகமான தொகையை முதலீடு செய்திருக்கும் திருக்கோயில்களுக்கு ஊக்கப்பரிசுகள் வழங்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து 1-4-1992 முதல் 31-3-1993 வரையிலான ஓராண்டு காலத்தில் சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்யட்பட்டுள்ள மொத்த தொகை ரூ. 8,93,22,861.

(ஆ) அதிகமான தொகை முதலீடு செய்திருக்கும் திருக்கோயில்களுக்கு ஊக்கத் தொகைகள் எதுவும் வழங்கப்படுவதில்லை.

96—

சமுதாயக் கோயில்களில் செயல் அலுவலர்களை நியமனம் செய்தல்

வினா எண் 26486—திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சமுதாயக் கோயில்கள் (Denomination temple) என்று அழைக்கப்படும் திருக்கோயில்களுக்கும், செயல் அலுவலர்கள் நியமனம் செய்வது குறித்து அரசு பரிசீலிக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டம் 22/1959 பிரிவு 45-ன் கீழ், யாதொரு அறநிலையத்துக்கும் செயல் அலுவலரை நியமனம் செய்யும் அதிகாரம் ஆணையருக்கு உள்ளது. மேலும் நிர்வாக சீர்கேடுகள் இருப்பது குறித்து, துறையின் கவனத்திற்கு கொண்டு வரப்படும் சமுதாய திருக்கோயில்களுக்கு (Denomination Temples) 45-ன் கீழ் செயல் அலுவலர் நியமனம் செய்யப்பட்டு வருகிறது.

97—

திருப்பூர் பேரூராட்சி கோவில்களுக்கு சொந்தமான நிலம் பற்றிய விவரம்

வினா எண் 26532—*திரு. வெ. பழனிசாமி:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர், நல்லூர் பேரூராட்சி விசுவேஸ்வரஸ்வாமி, விசாலாட்சி, சுப்பிரமணியசாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலம் எவ்வளவு ஏக்கர்?

(ஆ) இந்நிலங்கள் திருக்கோயில் கட்டுப்பாட்டில் உள்ளனவா?

(இ) இந்நிலம் மூலம் கோயிலுக்கு வரும் வருமானம் எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

(அ) திருப்பூர், நல்லூர் பேரூராட்சி விஸ்வேஸ்வரஸ்வாமி விசாலாட்சி, சுப்பிரமணியசாமி திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலம் 150.40 ஏக்கர் ஆகும்.

(ஆ) இதில் 4.20 ஏக்கர் நிலம் மட்டும் திருக்கோயில் சுவாதீனத்தில் உள்ளது. மீதமுள்ள 146.20 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பில் உள்ளது. ஆக்கிரமிப்பை அகற்ற திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மற்றும் கோவை மாவட்ட முதன்மை சார்பு நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டு அவை நிலுவையில் உள்ளன.

(இ) இந்த நிலம் மூலம் கோயிலுக்கு கிடைக்கப்பெறும் ஆண்டு வருமானம் ரூ. 650 ஆகும்.

98—

அறந்தாங்கி வட்டத்தில் உள்ள கோவில்களை திருப்பணி செய்தல்

வினா எண்கள் 27585. 27605, 27595—**திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(1) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், நிலையூர் அ/மி செயகணேசர் கோயில், காமாட்சி அம்மன் கோவில், நற்பவளக்காடு ராக்காச்சி அம்மன் கோவில், வேட்டலூர் பிடாரி அம்மன் கோவில், வேங்கூர் எரியநயினார் காளி, வீரமங்கலம் வீரசோர உடையாண்டான் கோவில் மற்றும் வரதராஜப் பெருமாள் கோவில், லட்சுமி நரசிம்மபுரம் செல்வவிநாயகர் கோவில், பெத்த பெருமாள் கோவில், சுப்பிரமணிய சுவாமி கோவில், இரத்தினக் கோட்டை விநாயகர் கோயில்.

(2) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், ஆதம்பூர் அ/மி காத்தவராய சுவாமி மற்றும் காமாட்சி கோயில், காரவயல் அய்யனார் கோயில், கலக்கமங்கலம் முத்து மாரியம்மன் கோவில், கள்ளனேந்தல் முத்துமாரியம்மன் கோவில், கம்மங்காடு லாலீஸ்வரர் கோயில், ஓமக்கண்வயல் ஓமருடைய அய்யனார் கோவில், ஏகனிவயல் சித்தப்பெருமாள் அய்யனார் கோயில், எருக்கை கோட்டை பிள்ளை யார்கோவில் எரிச்சி விசுவநாத சுவாமி கோயில், மாங்குடி முத்தமாரியம்மன் கோயில்.

(3) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், ராயல்வயல் அ/மி காமாட்சியம்மன் கோயில், மொட்டையான்பு குருந்துடைய அய்யனார் கோவில், மேல அரசர்குளம் ஆலடிக் கோயில், மாரியம்மன் கோவில், நெய்தவலி அய்யனார் கோவில், குண்டவயல் காளியம்மன் கோயில், காமாட்சியம்மன் கோவில், மேற்பனைக்காடு முனிக்கோயில், உலகாம்பாள்புரம் திருமேனிநாதன் சுவாமி கோயில், இடையார் அய்யனார் குருத்துடைய அய்யனார் கோயில், இடையன்காடு பிள்ளையார் கோவில் ஆகிய கோயில்களைப் புதுப்பித்துத் திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

99—

அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயிலுக்குச் சுற்றுச்சுவர் எழுப்புதல்

வினா எண் **34167**—*திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கொடுமுடி தொகுதி ஒன்றியம், வெங்கம்பூர் அருள்மிகு வரதராஜப் பெருமாள் திருக்கோயிலுக்கு சுற்றுச் சுவர் எழுப்பி ஆக்கிரமிப்பை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்:

இத்திருக்கோயிலின் காலியிடங்களில் உள்ள தற்காலிக ஆக்கிரமிப்புக்கள் நீக்கப்பட்டு விட்டன. திருக்கோயிலைச் சுற்றி தரையிலிருந்து சுமார் ஒரு அடி உயரம் வரை மதிற்சுவர் கட்டி அதன்மீது முள் கம்பிவேலி அமைக்க ரூபாய் 1.75 இலட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

100—

புதுக்கோட்டையில் சுற்றுலா துறையின் மூலம் தங்கும் விடுதி கட்டுதல்

வினா எண் **2088**—*திரு. சி. சுவாமிநாதன்:* மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரில் சுற்றுலாத் துறையின் மூலம் தங்கும் விடுதி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): 1994-95-ஆம் ஆண்டில் புதுக்கோட்டை நகரில் வழித்தட வசதி ஏற்படுத்த நிதி ஒதுக்கீடு செய்ய கொள்கை அளவில் மத்திய அரசு ஒப்புக்கொண்டது.

ஆறாம் பட்டியல்

1—

சின்னமலை ஆதிதிராவிடர்களுக்கு குடிமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 6614—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சின்னமலை ஆதி திராவிடர்கள் பல வருடங்களாக தனியார் இடத்தில் குடியிருந்து வருபவர்களுக்கு குடிமனை பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சின்னமலை (சரபேந்திரராஜபட்டினம்) கிராமத்தில் தனியார் இடத்தில் குடியிருந்து வந்த கீழ்க்கண்ட 38 ஆதி திராவிடர்களுக்கு 28-4-1992 அன்று குடியிருப்புப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

வரிசை எண்ணும் பெயரும் (1)	புல எண். (2)	பரப்பு. (3)
1. அஞ்சாலை க.பெ.காளி	65/3டி	0.02.0
2. காளிமுத்து த/பெ. உடையான்	65/3எப்	0.02.0
3. லெட்சுமி க/பெ. வடிவேலு	65/3 எச்	0.02.5
4. சுப்பையன், த.பெ. பெரியதம்பி	65/3கே	0.02.5
5. லெட்சுமி க/பெ. காளிமுத்து	65/3எம்	0.01.5
6. மருதையன், த.பெ. காளி	65/3என்	0.02.5
7. மதியழகன், த/பெ. காளிமுத்து	65/3ஓ	0.02.0

வரிசை எண்ணும் பெயரும் (1)		புல எண். (2)	பரப்பு. (3)
8. ஜெயபால் த/பெ. காமாட்சி	..	65/3ப்பி	0.01.0
9. பாண்டியன், த/பெ. ஆறுமுகம்	..	65/3க்யூ	0.02.5
10. ஆறுமுகம், த.பெ. தூண்டி	..	65/3 எஸ்	0.03.0
11. லெட்சுமி, க/பெ. காமாட்சி	..	65/3 ப்பி	0.03.0
12. முனுசாமி, த/பெ. சாமிநாதன்	..	65/3 வி	0.01.0
13. காசியம்மாள், க/பெ. சீனுவாசன்	..	65/3 டபிள்யூ	0.01.0
14. மாணிக்கம் த/பெ. பிச்சை	..	65/3எக்ஸ்	0.01.0
15. வீரமணி, த/பெ. நல்லான்	..	65/3 எ3	0.01.5
16. நல்லான், த/பெ. சாமிநாதன்	..	65/3 எ4	0.02.5
17. நடேசன், த/பெ. சோலைமலை	..	65/3 எ5	0.02.0
18. சிவகாமி, க/பெ. சோலைமலை	..	65/3 எ7	0.02.0
19. காளியப்பன், த/பெ.குருசாமி	..	65/3 எ8	0.02.0
20. கோவிந்தராஜன், த/பெ. வெள்ளையன்	..	65/3 எ9	0.01.5
21. முருகையன், த/பெ. சோலைமலை	..	65/3எ10	0.01.0
22. சின்னக்கண்ணு த/பெ. வீரப்பன்	..	65/3 எ11	0.01.5

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்ணும் பெயரும் (1)	புல எண். (2)	பரப்பு. (3)
23. ஆடவச்சி, க/பெ. பிச்சை	.. 65/3 எ13	0.02.5
24. ஆராயி, க/பெ. கருப்பையன்	.. 65/3 எ15	0.02.5
25. நாகராஜன், த/பெ. கருப்பையன்	.. 65/3எ17	0.01.5
26. ஜெகநாதன், த/பெ. வீரன்	.. 65/3 எ 18	0.02.5
27. வருவாம்பாள், க/பெ. கண்ணையன்	.. 65/3எ19	0.02.0
28. அஞ்சலை, க/பெ. கோவிந்தராசன்	.. 65/3 எ20	0.02.5
29. பாக்கியம், க/பெ. காலையன்	.. 65/3 எ22	0.02.0
30. தங்கராசு, த/பெ. பாலையன்	.. 65/3 எ23	0.01.5
31. மாரியம்மாள், க/பெ. காசிராஜன்	.. 65/3எ 24	0.02.5
32. பன்னீர் செல்வம், த/பெ. பாலையன்	.. 65/3 எ 26	0.02.0
33. வடுணி, க./பெ. காளிமுத்து	.. 65/3எ28	0.02.5
34. கணபதி, த/பெ. சிங்காரம்	.. 65/3எ30	0.03.0
35. மாரியப்பன்	.. 65/3 எ31	0.02.5
36. ராஜாமணி, க/பெ. மாரி	.. 65/3 எ 33	0.03.0
37. சந்திரமோகன், த/பெ. ரங்கையன்	.. 65/3 எ 35	0.02.5
38. விவேகானந்தன், த/பெ. ரெங்கையன்	.. 65/3 எ 36	0.02.5

2—

மஞ்சகுழி கொடிக்கால் நகருக்கு மனைப்பட்டா வழங்குதல்

வினா எண் 7644—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப்பேட்டை ஒன்றியம், மஞ்சகுழி கொடிக்கால் நகருக்கு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): மஞ்சகுழி கொடிக்கால் நகரில் மனைப்பட்டா வழங்க நத்தம் சர்வேயில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அந்நகரில் புல எண் 32/5 இல் உள்ள 0.54.5 ஹெக்டேர் பரப்புள்ள புலத்தில் 12 நபர்களுக்கு நத்தம் நிலவரித் திட்டத்தின் கீழ் ஆகஸ்ட் 1993 திங்களில் மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

3—

முருகராஜ் காலனி மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்குதல்

வினா எண் 8213—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, சம்மட்டி விடுதி, பஞ்சாயத்துக்குட்பட்ட முருகராஜ் காலனியில் வசிக்கும் குடும்பங்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

புதுக்கோட்டை தொகுதி, சம்மட்டி விடுதி கிராமத்தில் முருகராஜ் காலனி என்பது தெற்கு காலனி என்றும், வடக்கு காலனி என்றும் உள்ளன. மேற்கண்ட காலனிகள் அமைந்துள்ள பகுதி பட்டா புஞ்சை நிலங்களாகும். முருகராஜ் நகர் தெற்குக் காலனியில் குடியிருப்பவர்களுக்கு நில உடமைத் திட்டத்தின் மூலமும், வடக்குக் காலனியில் குடியிருப்பவர்களுக்கு நத்தம் நிலவரித் திட்டத்தின் மூலமும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளன.

4—

ஆதிதிராவிடர் நிலங்களை ஆக்கிரமித்துள்ளவர்கள் விவரம்

வினா எண் 11561—டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை மற்ற பிரிவினர் ஆக்கிரமித்து உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) எந்தெந்தப் பகுதிகளில் இவ்வாறு நேர்ந்துள்ளது என்று ஆய்வு செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ), (ஆ) மற்றும் (இ): ஆதி திராவிடர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட (Depressed Class) நிலங்களை மற்ற பிரிவினர் ஆக்கிரமித்து உள்ளது தெரியவந்தால் மாவட்ட அளவில் தன்னிச்சை நடவடிக்கை எடுத்து; ஒப்படையை ரத்து செய்து, உரிய இனத்தவர்களுக்கு மீண்டும் அளிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து அனைத்து மாவட்டங்களிலும் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது பெறப்பட்ட விவரங்கள்படி, சென்னை, நீலகிரி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர்., திண்டுக்கல்-அண்ணா, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், காமராஜர், திருநெல்வேலி-கட்டபொம்மன், பெரியார் மாவட்டங்களில் இப்படிப்பட்ட நிலங்கள் இல்லை என்று தெரிய வந்துள்ளது. வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் 427 இனங்களில் மேற்படி நிபந்தனை மீறப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டு விதிமுறைகளின்படி ஒப்படை பெற்றவர்கள், வாங்கியவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, விசாரணை நடத்தி நிலங்களை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு, 121 இனங்களில் 30-40 ஏக்கர் மீளப் பெறப்பட்டு, மற்றவை விசாரணையில் உள்ளது. இது போன்று திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் 1024 இனங்களில் நிபந்தனை மீறல் கண்டு பிடிக்கப்பட்டு அவைகளில் நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, கோட்ட ஆட்சித் தலைவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தருமபுரி மாவட்டத்தில் 368.30.5 ஹெக்டேர் நிலம் மற்ற இனத்தவர்களால் அனுபவிப்பது கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இதே

போன்று இதர மாவட்டங்களில் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியின் முன்னேற்றம் குறித்து மாதந்தோறும் நில நிர்வாக ஆணையரால் ஆய்வு செய்யப்படுகின்றது.

5—

பரமக்குடி ஒன்றியத்தில் பட்டாக்கள் வழங்கிய விவரம்

வினா எண் 15136—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒன்றியம், பாம்புவிழுந்தான் கிராமத்தில் கொடுக்கப்பட்டுள்ள பட்டாக்கள் எத்தனை?

(ஆ) எஞ்சியுள்ள பட்டாக்களை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ):பரமக்குடி வட்டம், பாம்புவிழுந்தான் கிராமத்தில் ஆதிதிராவிடர்கள் மட்டுமே வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு விவசாய நிலத்திற்கான பட்டா எதுவும் வழங்கப்படவில்லை. 88 ஆதிதிராவிடர்களுக்கு ஆதி திராவிடர் நலத்துறையின் மூலமாக வீட்டு மனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இது தவிர இன்னும் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டிய நபர்கள் யாரும் இல்லை.

6—

கருவேலம்பாளையத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 19256—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், கொளாநல்லி கிராமம், கருவேலம்பாளையத்தில் பொது நிலத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், ஈரோடு வட்டம், நஞ்சைக் கொளாநல்லி கிராமம் க.ச.737/2 கருவேலம்பா.ளையத்தில் நத்தம் புறம்போக்கில்

1995 மார்ச் 14]

திரு. குழந்தைவேல் என்பவர் கூரை வீடு கட்டிக் குடியிருந்து வரும் ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்துவதை எதிர்த்து மேற்படி நபர், ஈரோடு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கினைத் தொடர்ந்துள்ளார். வழக்கின் நிலையைக் கண்காணித்து நீதிமன்றத்தின் தீர்ப்பு வரப் பெற்றதும் அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7—

தாமரைப்பாளையத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 19267—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், இச்சிப்பாளையம் கிராமம் தாமரைப்பாளையம் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

பெரியார் மாவட்டம், கொடுமுடி ஒன்றியம், இச்சிப்பாளையம் மற்றும் தாமரைப்பாளையம் ஆகிய கிராமங்களில் நத்தத்தில் வீடு கட்டி உள்ள மனைவரி தோராயப் பட்டா வழங்கப்பட்டதின் தொடர்ச்சியாக, மேற்படி கிராமங்களில் 31-8-1993 அன்று பட்டாக்கள் வழங்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு பொதுமக்கள் பயன் பெற்றுள்ளனர்:-

		நபர்கள்
1.	தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ..	265
2.	பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் ..	699
3.	இதர நபர்கள் ..	2
		966

8—

நில அளவைப் பதிவேடுகள் துறையில் உள்தணிக்கை முறை

வினா எண் 21561—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உள் தணிக்கை முறை என்ற முறை நில அளவைப் பதிவேடுகள் துறையில் செயல்பட்டு வருகிறதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

இல்லை.

9—

வருவாய் நீதிமன்றங்களின் எண்ணிக்கை விவரம்

வினா எண் 22829—திரு. எஸ். எம். துரை: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது தமிழ்நாட்டில் செயல்படும் வருவாய் நீதி மன்றங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஆ) அவற்றை மேலும் அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தற்போது தமிழ்நாட்டில் 11 வருவாய் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. அவற்றை மேலும் அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

10—

குத்தகைப் பதிவுச் சட்ட வழக்குகளை விசாரணைச் செய்ய தனித் தாசில்தார் நியமனம்

நெடுஞ்சாலை துறையால் பராமரிக்கப்பட்டு வரும் மாவட்ட பெருஞ்சாலை ஆகும். இச்சாலையில் கடந்த சில ஆண்டுகளில் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட பகுதியில் அவ்வப்போது தார் நொடிகள் போட்டு போக்குவரத்துக்கு ஏற்றவாறு சீர் செய்யப்பட்டுள்ளது. இச்சாலையில் 14.20 கி.மீ. ஒருவழிப் பாதையாகவும் மீதமுள்ள 3.00 கி.மீ. இருவழிப் பாதையாகவும் உள்ளது. இதில் ஒருவழிப் பாதையாக உள்ள 14.20 கி.மீ. சாலைப் பகுதியை இருவழிப் பாதையாக மாற்றி அமைக்க தோராயமாக ரூ. 175.00 இலட்சம் தேவைப்படும்.

திட்டப் பணிகளுக்கு குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு உள்ளதால் வினாவில் கண்டுள்ள சாலைப் பகுதியை எதிர்வரும் ஆண்டுகளில் இருவழிச் சாலைப் பகுதியாக மேம்பாடு செய்யும் சாத்தியக் கூறுகள் இல்லை.

47—

திருப்பத்தூர், கௌதம்பேட்டை சாலையைப் பராமரித்தல்

வினா எண் **22574**—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் நகர் கௌதம்பேட்டை சாலையைப் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

திருப்பத்தூர் நகர், கௌதம்பேட்டை சாலையானது அரசின் பெரிய மாவட்ட சாலை வகையைச் சேர்ந்தது. மேற்படி சாலை திருப்பத்தூர் நகரின் ஓர் இணைப்புச் சாலையாக இருப்பதால் இதில் போக்குவரத்து நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சமீபத்தில் பெய்த மழையினால் மேற்படி சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. மிகவும் பழுதுப்பட்ட பகுதிகளான கி.மீ. 0/2 மற்றும் கி.மீ. 0/10-ல் பழுதுபார்க்கும் பணிக்கு முறையே ரூ. 1.00 இலட்சம் மற்றும் ரூ. 0.95 இலட்சம் மதிப்பிற்கு மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டு வேலைகள் முடிக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள பகுதியில் செப்பனிடும் வேலைகளை வரும் நிதியாண்டில் அரசின் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப எடுத்துச் செய்யப்படும்.

1995 மார்ச் 14]

48—

அக்கானாவூர், நிலாவூர் சாலையைப் பழுதுபார்த்தல்

வினா எண் 23075—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதி, அக்கானாவூர் நிலாவூர் சாலையைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

திருப்பத்தூர் தொகுதி, அக்கானாவூர் நிலாவூர் சாலை 1983-ம் வருடம் பகுதி-2 திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்யப்பட்டது. அரசு ஆணை எண் 1482, போக்குவரத்துத் துறை, நாள் 11-12-1991-ல் பகுதி-2 திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட சாலைகளை அரசு சாலைகளாக எடுத்துக்கொள்ள வழங்கிய ஆணையின்படி மேம்பாடு செய்து 8 ஆண்டுகள் கழித்து மேற்படி சாலையை நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. 8 ஆண்டுகளாக பராமரிப்பு இல்லாமல் இருந்ததாலும் போக்குவரத்து மிகுதியாலும் சாலை பழுதுபட்டுள்ளது. இதனை சீரமைக்க தோராயமாக ரூ. 18.00 இலட்சம் தேவைப்படும். வரும் ஆண்டுகளில் பராமரிப்பு நிதி நிலைமைக்கேற்ப சாலைகளைச் சீரமைத்து நல்ல முறையில் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

49—

துறையூர், உப்பிலியாபுரத்தில் இருவழிச்சாலை அமைத்தல்

வினா எண் 23296—திரு. வி. ரவிச்சந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, துறையூரில் இருந்து உப்பிலியாபுரம் வரை இருவழிச் சாலையாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சட்டமன்ற வினாவில் அகலப்படுத்துமாறு குறிப்பிட்டுள்ள சாலையானது நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பிலுள்ள மாவட்ட முக்கிய சாலையான திருச்சி-துறையூர்-தம்மம்பட்டி சாலை ஆகும்.

துறையூர் மற்றும் உப்பிலியாபுரம் ஆகிய ஊர்களுக்கிடையில் உள்ள சாலைப் பகுதியின் நீளம் 16.4 கி.மீ. ஆகும். இச்சாலைப் பகுதியில் சிறு சிறு பகுதிகளாக 5.6 கி.மீ. நீளத்திற்கு முக்கியமான இடங்களில் ஏற்கெனவே இச்சாலை இருவழிச் சாலையாக அகலப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 10.80 கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதிகள் அகலப்படுத்தப்பட வேண்டும். இதற்குத் தோராயமாக ரூ. 38.00 இலட்சம் தேவைப்படும். திட்டப் பணிகளுக்கு குறைந்த அளவே நிதி ஒதுக்கப்படுவதால் அண்மைக் காலத்தில் இப்பணியைத் திட்டப் பணிகளில் எடுத்துச் செய்யும் சாத்தியக் கூறுகள் இல்லை.

50—

போளூர் வட்டத்தில் புறவழிச் சாலைகள் திட்டம்

வினா எண் **23939—திரு. தா. வேடியப்பன்** : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டம், போளூர்-பனப்பாம்பட்டு வழி மேம்பட்டு மேற்கு கொல்லைமேடு சாலையை கிராமப் புறவழிச் சாலைகள் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது சேர்க்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சட்டமன்ற உறுப்பினர் மேம்பாடு செய்யக் கோரியுள்ள சாலையானது போளூர்-அத்திமூர் சாலை கி.மீ. 5/0-ல் பிரிந்து பனப்பாம்பட்டு மேற்கு கொல்லைமேடு வழியாக போளூர்

மாம்பட்டு சாலையில் இணையும் சாலை கி.மீ. 0/0-3/2 வரை ஆகும். இச்சாலையில் கி.மீ. 0/0-2/4 வரையில் ஏற்கெனவே தார்ச் சாலையாக மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. கி.மீ. 2/4-3/2 வரையில் கிராவல் சாலையாக உள்ளதை தார்ச் சாலையாக மேம்பாடு செய்யவேண்டும். ஆனால் இச்சாலையை மேம்பாடு செய்வதால் பயனடையும் கிராம மக்கள் தொகை 1981-ம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி, 1,000-க்கும் குறைவாக இருப்பதாலும், அச்சாலையில் பேருந்து ஏதும் செல்லாததாலும், இச்சாலையினை கிராமச் சாலைகளின் எந்தத் திட்டத்திலும் எடுத்துச் செய்ய வகையில்லை.

51—

கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்டுதல்

வினா எண் **28487—***திரு. ஆர். சிங்காரம் :* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் தொகுதி, நாகப்பட்டினத்தில் கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச்சுவர் கட்டும் திட்டம் குறித்து அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இல்லை.

52—

அக்னியாற்றுப் பாலத்தைச் சீர் செய்தல்

வினா எண் **28979—திரு. சி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டைக்கும் பூதலூருக்கும் இடையில் அக்னியாற்றுப் பாலம் பழுதடைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அப்பாலத்தை புதுப்பிக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) வலுவிழந்த பழுதடைந்த இப்பாலத்திற்குப் பதிலாக இத்தடத்தில் ஒரு உயர்மட்டப் பாலம் கட்ட வேண்டியது அவசியமாகும். இதற்கு உத்தேசமாக ரூ. 125 இலட்சங்கள் தேவைப்படும். இப்பாலம் அமைக்கும் பணி அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள திட்டங்கள் எதிலும் இடம் பெறவில்லை. அரசின் குறைந்த நிதி வசதியின் காரணத்தினால் இப்பாலம் அமைக்கும் பணியினை அண்மைக் காலத்தில் பகுதி-2, திட்டத்தின் கீழ் மேற்கொள்ள இயலாது.

53—

தட்டாமனைப்பட்டி-ரெகுநாதபுரம் வரை தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் 28982—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், தஞ்சாவூர் - கறம்பக்குடிச் சாலையில் தட்டாமனைப்பட்டி - ரெகுநாதபுரம் வரையில் தார்ச் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துத் தரப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையின் சரியான பெயர் நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் உள்ள இதர மாவட்ட சாலையான கறம்பக்குடி - ரெகுநாதபுரம் சாலை கி.மீ. 41/6-59/8 (18.20 கி.மீ.) என்பதாகும். இதில் சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியானது கி.மீ. 55/6-58/6 (3.00 கி.மீ.) ஆகும். இதில் கி.மீ. 57/0-58/0 வரை 1991-92-ஆம் ஆண்டு பழுதடைந்த சாலைகள் திட்டத்தின்கீழ் ரூ. 57,000 மதிப்பீட்டில் தார்ச் சாலையாக மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. கி.மீ. 41/6-42/0 கி.மீ. 56/0-57/0 மற்றும்

கி.மீ. 58/0-59/0 வரை 1992-93-ஆம் ஆண்டு காலமுறை புதுப்பித்தல் பணியின் கீழ் ரூ. 2,15,000 மதிப்பீட்டில் பணி முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பகுதிகளை எதிர்வரும் ஆண்டுகளில் நிதி நிலைக்கேற்ப புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

54—

கந்தர்வக்கோட்டை - கறம்பக்குடி சாலையைப் பழுதுபார்த்தல்

வினா எண் 28984—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டையிலிருந்து கறம்பக்குடி சாலையைப் பழுதுபார்க்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைப் பகுதி கீழ்க்கண்ட மூன்று சாலைகளைக் குறிக்கிறது.

1. அம்புக்கோயில் சாலை கி.மீ. 0/0-15/6 :

இச்சாலை, அரசின் இதர மாவட்ட சாலை வகையைச் சேர்ந்தது ஆகும். 15-6 கி.மீ. நீளமுள்ள இச்சாலையில் 6.60 கி.மீ. நீளத்திற்கு தார் தளம் புதுப்பிக்கும் வேலை முடிந்து நல்லநிலையில் உள்ளது. மீதமுள்ள பகுதியை தார் நொடிகள் போட்டு போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

2. கரம்பக்குடி-ரெகுநாதபுரம் சாலை கி.மீ. 41/6-47/4 :

இச்சாலை, அரசின் இதர மாவட்ட சாலை வகையைச் சேர்ந்தது ஆகும். வ.எண் 1-ல் குறிப்பிட்டுள்ள அம்புக்கோயில் சாலை இச்சாலையில் கி.மீ. 47/4-ல் இணைகிறது. கி.மீ. 41/6-47/4 வரையுள்ள இச்சாலைப் பகுதியில் ஒரு கிலோ மீட்டர் நீளமுள்ள கி.மீ. 42/0-43/0 பகுதி தவிர மீதமுள்ள பகுதி முழுவதும் தார் தளம் புதுப்பிக்கும் வேலை முடிந்து நல்ல நிலையில் உள்ளது. கி.மீ. 42/0-43/0 பகுதியை தார் நொடிகள் போட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

3. புதுக்கோட்டை-பட்டுக்கோட்டை சாலை கி.மீ. 41/4-41/6 :

இச்சாலை, அரசின் மாவட்ட முக்கிய சாலை வகையைச் சேர்ந்தது ஆகும். வரிசை எண் 2-ல் உள்ள கறம்பக்குடி - ரெகுநாதபுரம் சாலை. இச்சாலையில் கி.மீ. 41/6-ல் பிரிந்து செல்கிறது. கறம்பக்குடி என்ற ஊர் புதுக்கோட்டை - பட்டுக்கோட்டை சாலையில் கி.மீ. 41/4-41/6-ல் அமைந்துள்ளது. இப்பகுதியையும் உள்ளடக்கி கி.மீ. 37/0-38/0 மற்றும் கி.மீ. 41/0-42/2 ஆகிய பகுதியை சீரமைக்கும் பணி ரூ. 6.70 இலட்சம் மதிப்பில் 1994-95-ஆம் வருட பழுதடைந்த சாலைகள் சீர் செய்தல் திட்டத்தில் நடைபெற்று வருகிறது. விரைவில் மேற்படி பணியை முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

55—

ஊத்தங்கரை செல்லும் சாலையை தார்ச் சாலையாக்குதல்

வினா எண் 23017—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் - ஊத்தங்கரை செல்லும் சாலையை அகலப்படுத்தி தார்ச் சாலையாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டு வரும் சேலம் - திருப்பத்தூர் சாலை (கி.மீ. 0/0-111/4)-இல் கி.மீ. 87/6-லிருந்து 111/4 வரையுள்ள 23.8 கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதியாகும். திருப்பத்தூரிலிருந்து ஊத்தங்கரை வரை உள்ள சாலைப் பகுதியில் 8.60 கி.மீ. சாலைப்பகுதி ஏற்கெனவே இருவழிப் பாதையாக உள்ளது. மீதமுள்ள சாலைப் பகுதியில் 5.6 கி.மீ. ஒருவழிப் பாதையாக உள்ளது. இதுபோக 23.8 கி.மீ. பகுதியில் 9.60 கி.மீ. சாலைப் பகுதியில் சில பகுதிகளில் அகலப்படுத்தும் பணி ஆண்டு பராமரிப்பு நிதியைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இப்பணி விரைவில் செய்து முடிக்கப்படும். மீதமுள்ள 5.6 கி.மீ. நீளமுள்ள சாலைப் பகுதியை இருவழித்தட அகலமுள்ள சாலையாக மாற்றுவதற்கு இன்றைய விலை விகிதப்படி ரூ. 50 லட்சங்கள் தேவைப்படும்.

திட்டப் பணிகளுக்கும் ஆண்டு பராமரிப்புக்கு திட்டம் சாரா பணிகளின் கீழும் மிகக் குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு உள்ளதால் இச்சாலைப் பகுதியை இருவழித்தட சாலையாக அகலப்படுத்தும் பணியை உடனடியாக மேற்கொள்ள இயலாது.

56—

ராஜபாளையம்-கூடப்பட்டு சாலையைப் பழுதுபார்த்தல்

வினா எண் **23081—திரு.ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா-

திருப்பத்தூர் தொகுதி, ராஜபாளையம்-கூடப்பட்டு சாலையை பழுது பார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு.எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

திருப்பத்தூர் தொகுதி, ராஜபாளையம்-கூடப்பட்டு சாலை 0/0-4/0 நெடுஞ்சாலைத் துறையின் பாராமரிப்பிலுள்ள இதர மாவட்ட சாலை வகையைச் சேர்ந்தது. போக்குவரத்து மிகுதியாகும் கடந்த ஆண்டுகளில் வருட பராமரிப்பு நிதி போதுமானதாக இல்லாததாலும் காலமுறையில் புதுப்பிக்கப்படாத காரணத்தாலும் சாலை பழுதடைந்துள்ளது. வரும் ஆண்டுகளில் சாலையைப் பழுதுபார்த்து நல்லமுறையில் பராமரிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

57—

புதுக்கோட்டை-கூவத்தூர் சாலையைப் பழுதுபார்த்தல்

வினா எண் **28978—திரு. சி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் இருந்து பூதலூர் வழியாக கூவத்தூர் வரை செல்லும் சாலை பழுதடைந்து இருப்பது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் புதுப்பிக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு.எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சட்ட மன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையின் சரியான பெயர் வைத்தூர் சாலை ஆகும். இச்சாலையின் நீளம் 4.40 கி.மீ. ஆகும். இதன் மேற்பரப்பு தார் தளம் கொண்டுள்ளது. இச்சாலை அரசின் இதர மாவட்ட சாலையான புதுக்கோட்டை பூதலூர் சாலையில் கி.மீ. 17/0-ல் பிரிந்து வைத்தூர் வரை செல்கிறது. இச்சாலையில் ஏற்பட்ட தார் நொடிகள் சீரமைக்கப்பட்டு போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் உள்ளது. வரும் ஆண்டுகளில் நிதிநிலைமைக்கு ஏற்ப இச்சாலையை புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

58—

இலுப்பூர் -எண்ணைக்கு இடையிலுள்ள பாலத்தைப் பழுது பார்த்தல்

வினா எண் 30162—திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி இலுப்பூர்-எண்ணைக்கு இடையிலுள்ள பாலம் பழுதடைந்து இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு.எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : சட்ட மன்ற வினாவில் குறிப்பிடப்படும் பாலங்களில் மண்புருவம் (Earth beam) சேதம் அடைந்துள்ளது. அது நெடுஞ்சாலைத்துறையின் சாலை பணியாட்களைக் கொண்டு சீர் செய்யப்பட்டு வருகிறது. கைப்பிடி சுவர் உடைந்துள்ளதை நடப்பு 1994-95-ம் ஆண்டு பராமரிப்பு நிதி ஒதுக்கீட்டின் கீழ் எடுத்து செய்ய தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1995 மார்ச் 14]

59—

தாந்தோணி ஊராட்சியில் குளங்களைச் செப்பனிடுதல்

வினா எண் 34187—*திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குடகனாறு நீர்த்தேக்கத்திற்குட்பட்ட தாந்தோணி ஊராட்சியைச் சேர்ந்த பரிமங்கலபுரம், சீரநாயக்கனூர் (பாக நத்தம், நம்மநாயக்கன்பட்டி, அம்மாப்பட்டி, குள்ளம்பட்டி, குளத்தூர் ஆகிய குளங்களைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

பரிமங்கலபுரம், சீரநாயக்கனூர், பாகநத்தம், நம்ம நாயக்கன்பட்டி, அம்மாப்பட்டி, குள்ளம்பட்டி, குளத்தூர் ஆகிய ஏழு குளங்களுக்கு தண்ணீர் விடுவது குறித்து தனித் திட்டமாக கருதப்பட்டு ஏழு குளங்களிலும் சீர்திருத்தும் பணிகளை ஆய்வு செய்து மதிப்பீடு தயார் செய்ய திருச்சி ஆய்வு கோட்டத்தினால் ஆய்வுப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது..

60—

திருப்பத்தூர் நகரிலிருந்து செல்லும் சாலைகளை அகலப்படுத்துதல்

வினா எண் 35445—*திரு. ஏ. சி. சுந்தரவேல்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் நகரத்திலிருந்து கிருஷ்ணகிரி-வாணியம்பாடி செல்லும் சாலைகளை அகலப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள திருப்பத்தூர் நகரத்திலிருந்து கிருஷ்ணகிரி செல்லும் சாலையின் சரியான பெயர் பர்கூர்-திருப்பத்தூர் சாலையாகும். இச்சாலையானது நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறையால் பராமரிக்கப்பட்டு வரும் ஒரு மாவட்டம் பெருஞ்சாலையாகும். இச்சாலையானது திருப்பத்தூர் நகரிலிருந்து கிருஷ்ணகிரி செல்கிறது. இச்சாலையில்(கி.மீ 7/8-24/4)-இல் 8.2 கி.மீ. நீளம் அகலப்படுத்தப்

பட்டுள்ளது. மீதமுள்ள அகலப்படுத்த வேண்டிய பகுதி 8.4 கி.மீ. நீளமாகும். இப்பகுதியை 7.00 மீட்டர் அகலம் கொண்ட இரு வழிப்பாதையாக அகலப்படுத்த தோராயமாக ரூ.60 இலட்சங்கள் தேவைப்படும். திட்டப் பணிகளுக்கு மிகவும் குறைந்த அளவில் நிதி ஒதுக்கீடு உள்ளதால் மிகவும் பெருந்தொகை தேவைப்படும். இப்பணியை எதிர்வரும் ஆண்டுகளில் எடுத்துச் செய்யும் சாத்தியக்கூறுகள் இல்லை.

மேலும் வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற சாலை நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டு வரும் மாவட்ட பெருஞ்சாலையாக தருமபுரி-திருப்பத்தூர், வாணியம்பாடி சாலை கி.மீ. 61/0-81/4 ஆகும். ஏற்கெனவே இச்சாலை இரு வழிச் சாலையாக அகலப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, மேலும் இதனை, அகலப்படுத்த வேண்டிய அவசியம் தற்சமயம் இல்லை.

61—

ஸ்ரீபுரம்-தச்சநல்லூர் சாலைப்பணி

வினா எண் 35818—திரு. டி. *வேலையா:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, திருநெல்வேலி நகரம், ஸ்ரீபுரத்திலிருந்து தச்சநல்லூர் வரை உள்ள சாலைப்பணியை விரைவில் முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையில் வலது பக்கம் நிரந்தர கடைகள் சுமார் 200 மீட்டர் நீளத்திற்கு உள்ளன. மேலும், இச்சாலை முடியுமிடத்தில் (தேசிய நெடுசாலை எண். 7-இல் கி.மீ. 148/ 8) நிரந்தரக் கட்டிடங்கள் உள்ளன. போதுமான அகலத்திற்கு சாலை அமைப்பதற்குச் சுமார் 33 நபர்களின் நிலங்கள் கையகப்படுத்த வேண்டி உள்ளது. இதில் 19 நபர்கள் மட்டுமே நிலம் கையகப்படுத்த வேண்டி உள்ளது. இதில் 19 நபர்கள் மட்டுமே நிலம் கையகப்டுத்தலுக்கு சம்மதம் தெரிவித்துள்ளனர். மற்றவர்கள் நிலம் கையகப்படுத்துவதற்கு அனுமதி மறுக்கிறார்கள். இது தவிர இச்சாலையில் சங்கிலி எண்.835 முதல் 1716 வரையுள்ள பகுதியில் விவசாய நிலத்தில் நன்செய் பயிர் பயிரிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி நிலம் கையகப்படுத்தும் பணி முடிந்தால்தான் இச்சாலை அமைக்க முடியுமென்ற நிலையில், கட்டாய நில ஆர்ஜீதத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டு, வருவாய்த் துறையினரின்

நடவடிக்கையில் உள்ளது. நில ஆர்ஜிதப்பணி முடிவுற்றதும், சாலை மேம்பாடு செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

62—

பரமக்குடி-முதுகுளத்தூர் சாலையை இருவழியாக்குதல்

வினா எண் 36209—*டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி-முதுகுளத்தூர் சாலையை இரு வழிச்சாலையாக உயர்த்த அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : பரமக்குடி முதுகுளத்தூர் சாலையானது நெடுஞ்சாலை மூலம் பராமரிக்கப்படும் ஓர் அரசு முக்கிய மாவட்ட சாலையாகும். இச்சாலை 25.4 கி.மீ. நீளமுடைய தார்ச் சாலையாகும். (கி.மீ.0/0-25/4). இச்சாலையில் கி.மீ.0/0-24/0 வரையுள்ள பகுதி ஒரு வழிப்பாதை அகலம் கொண்ட தார்ச் சாலையாகவும், மீதமுள்ள பகுதியான கி.மீ. 24/0-25/4 வரை இருவழிப்பாதை அகலம் கொண்ட தார்ச்சாலையாகவும் உள்ளன. இச்சாலையில் கி.மீ.0/0-24/0 வரையுள்ள பகுதியை இருவழிப்பாதையாக அகலப்படுத்த சுமார் ரூ.96.00 இலட்சம் தேவைப்படுகிறது. இப்பணி அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ள எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. தற்போது அரசின் நிதி வளம் குறுகிய காரணத்தினால் மேற்படி பணியினை உடன் எடுத்துச் செய்ய இயலாது.

63—

பரமக்குடி தாலுக்காவில் விவசாயிகளுக்கு வேளாண்மை அபிவிருத்திக்கு அரசு வழங்கிய கடன் விவரம்

வினா எண் 39086—*டாக்டர் எஸ். சுந்தரராஜ்:* மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1993 நவம்பர்-டிசம்பர் மாதங்களில் பெய்த பெரும் மழையால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண்மை அபிவிருத்தி செய்ய அரசு வழங்கிய மானியங்கள் பரமக்குடி தாலுக்காவில் எவ்வளவு?

(ஆ) இதனால் பயன்பெற்றோர் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : 1993 நவம்பர்-டிசம்பர் மாதங்களில் பரமக்குடி தாலுக்காவில் பெய்த பெரும்மழையால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்கள், அதன் பரப்பளவு, நிவாரணமாக வேளாண் அலுவலரால் வழங்கப்பட்ட மானியங்கள் மற்றும் பயன்பெற்றோர் விவரம் பின்வருமாறு:

வரிசை எண்	சேதமடைந்த பயிர்	பயிர் சேதமடைந்த பரப்பளவு (எக்)	வழங்கப்பட்ட மானியங்கள் (ரூ. லட்சத்தில்)	பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை — சிறு விவசாயிகள்	பயனடைந்த விவசாயிகளின் எண்ணிக்கை — குறு விவசாயிகள்.
1.	நெல் (முழு பாதிப்பு)	300	2.68	386	276
2.	நெல் (பகுதி பாதிப்பு)	952	2.84	910	786
3.	நிலக்கடலை	50	1.09	71	24
4.	பருத்தி	210	2.51	295	98
5.	மிளகாய்	118	3.54	..	168

64—

வடாற்காடு அம்பேத்கார் மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் பாலின் தரம்

வினா எண் 37799—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு-அம்பேத்கார் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் மூலம் வழங்கப்படும் பாலின் தரம் தாழ்ந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பாலின் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): வடாற்காடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் நாள் ஒன்றுக்கு 3,60,000 லிட்டர் பாலை பிரதம கூட்டுறவு சங்கங்களிடமிருந்து பால்மானியின் உதவியுடன் பாலின் தரத்தை பரிசோதனை செய்து கொள்முதல் செய்கிறது. கொள்முதல் செய்யப்பட்ட பால் குளிரூட்டப்பட்டும், பதப்படுத்தப்பட்டும் மீண்டும் கெடாமல் பாதுகாக்கிறது. ஒன்றியம், 4.5 சதவீதம் கொழுப்பு சத்தும் 8.5 சதவீதம் இதர சத்துக்களும் உடைய நிலைப்படுத்திய பாலை ஒப்பந்த வாகனங்களின் மூலம் குறித்த நேரத்தில் நுகர்வோருக்கு விநியோகம் செய்து வருகின்றது. பால் நுகர்வோர்கள் நேரத்துடன் பாக்கெட் பால் பெற்று பயனடைந்து வருகின்றார்கள். அதிகமாக உள்ள பாலை நன்கு குளிரூட்டியும், பதப்படுத்தியும், பாலின் காப்பு நேரத்தை அதன் மூலம் அதிகரித்து பால் டேங்கரின் மூலம் பாதுகாப்பாக வெளி மாவட்டங்களுக்கு ஒன்றியம் அனுப்புகிறது. எனவே, வடாற்காடு மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் மூலம் வழங்கப்படும் பாலின் தரம் தாழ்ந்துள்ளது என்பதற்கான எவ்வித ஆதாரமும் இல்லை எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

65—

அரசு மேல்நிலைப் பள்ளிகளிலேயே ஆசிரியர் பயிற்சிப் பள்ளி துவங்குதல்

வினா எண் 2581—திரு. க. அர்ச்சுனன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் நடத்தும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெற வருபவர்களிடம் சன்மானத் தொகை (Capitation Fees) கேட்பதால், அரசுப் பள்ளிகளில் ஆசிரியர் பயிற்சி அளிக்கும் வசதி முழுவதும் இருப்பதால் அரசு மேல்நிலைப் பள்ளிகளிலேயே பயிற்சி அளிக்கப்படுமா?

(ஆ) ஆரம்பப் பள்ளிகளில் பெண் ஆசிரியைகளையே நியமிக்க இருப்பதைப்போல், 8-ம் ஆகுப்பு வரை உள்ள பள்ளிகளிலும் ஆசிரியைகளையே நியமிக்க அரசு பரிசீலிக்குமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) அதுமாதிரியான தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் அனைத்தும் அங்கீகாரத்தை இழந்துவிட்டன. மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் பயிற்சி துவங்குவது போன்ற எண்ணமில்லை.

(ஆ) ஆரம்ப நடுநிலைப் பள்ளிகளில் 5-ஆம் வகுப்புவரை பெண் (அதனை ஆசிரியைகளையே நியமிக்க அரசு ஆணையிட்டுள்ளது. அதனை எட்டாம் வகுப்புவரை விஸ்தரிக்கும் எண்ணம் தற்போது அரசுக்கு இல்லை.

66—

ஊஞ்சலூர் பேரூராட்சியில் நூலகம் அமைத்தல்

வினாஎண் 26428—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, ஊஞ்சலூர் பேரூராட்சியில் நூலகம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

தற்சமயம் அரசிடம் கருத்துரு ஏதும் இல்லை. இருப்பினும் கீழ்க்கண்ட வசதிகளை ஊர்ப்பொது மக்கள் நிறைவேற்றித் தந்தால் ஊஞ்சலூர் பேரூராட்சிக்கு ஒரு பகுதி நேர நூலகம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யும்.

1. குறைந்தது 5 முதல் 10 சென்ட் வரையிலான காலி மனை மாவட்ட நூலக அலுவலர் பெயரில் பத்திரப் பதிவு செய்து தரப்பட வேண்டும்.

2. பகுதிநேர நூலகம் செயல்படுவதற்கேற்ற வகையில் வாடகையில்லாத உறுதியான கட்டடம் ஒன்று வழங்கப்படவேண்டும்.

3. ரூ.2,000/- ரொக்கம் (அல்லது) ரூ.2,000/- மதிப்புள்ள நூலகத் தளவாடங்கள் (மேஜை, நாற்காலி, பெஞ்சு, மரப்பீரோ, புத்தக அடுக்கு போன்றவை) நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

4. குறைந்தபட்சம் 100 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

67—

கம்பம் பள்ளி அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கும் போதிய ஆசிரியர்கள் நியமித்தல்

வினா எண் 27432—திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

கிருஷ்ணகிரி ஒன்றியம், கம்பம் பள்ளி கிராமத்தில் உள்ள அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு போதிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

1994-95-ம் ஆண்டிற்கான பகுதி -2 திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட 24 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் ஒரு பணியிடம் கம்பம் பள்ளி அரசு உயர்நிலைப்பள்ளிக்கு வழங்கப்பட்டுள்ளது.

68—

சிக்கத்தம்பூர் அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு விளையாட்டுத் திடல் அமைத்தல்

வினா எண் 34389—திரு. வி. ரவிச்சந்திரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, சிக்கத்தம்பூர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு விளையாட்டுத் திடல் அமைக்கும் திட்டம் குறித்து அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி கல்வி அமைச்சர்:

(அ) அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்ல.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

69—

அதிராமபட்டினம் அரசினர் மேல்நிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்

வினா எண் 34776—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, அதிராமபட்டினம் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டிடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

70—

தமிழகத்தில் தமிழே போதன மொழியாகப் பின்பற்றல்

வினா எண் **37072**—திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் எல்லா ஆரம்பப் பள்ளிகளிலும் ஒன்று முதல் ஐந்து வகுப்புவரை தமிழே போதன மொழியாக இருக்கவேண்டும் என்ற முறை இப்போது நடைமுறைப் படுத்தப்படுகிறதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: தமிழகத்தில் உள்ள அனைத்து அங்கீகாரம் பெற்ற ஆரம்பப் பள்ளிகளிலும் (சிறுபான்மை மொழியினம் தவிர) ஒன்று முதல் ஐந்து வகுப்புவரை தமிழே போதன மொழியாக இருந்து வருகிறது.

71—

வேலூர் அடுத்த இடங்களில் நூலகங்கள் அமைத்தல்

வினா எண் **37734**—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் அடுத்த அல்லாபுரம், வள்ளலார் நகர், தொரப்பாடி ஆதிதிராவிடர் காலனி, சேன்பாக்கம் ஆதிதிராவிடக் காலனி ஆகிய இடங்களில் நூலகங்கள் துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் செயல்படுத்தப்படும்?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தொரப்பாடியில் தற்போது கிளை நூலகம் ஒன்று செயல்பட்டு வருவதால், தொரப்பாடி ஆதிதிராவிடர் காலனியில் நூலகம் திறக்கும் திட்டமேதும் அரசிடம் இல்லை. அல்லாபுரம், வள்ளலார் நகர் மற்றும் சேன்பாக்கம் ஆதிதிராவிடர் காலனி ஆகிய இடங்களில் நூலகங்கள் துவங்கும் திட்டமும் அரசிடம் இல்லை. இருப்பினும் கீழ்க்காணும் நிபந்தனைகளை மேற்படி நகர்/காலனி மக்கள் பூர்த்தி செய்து தரும்பட்சத்தில் மேற்படி பகுதிகளில் ஒரு பகுதி நேர நூலகம் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1. குறைந்தது 5 முதல் 10 சென்ட் வரையிலான காலிமனை மாவட்ட நூலக அலுவலர் பெயரில் பத்திரப் பதிவு செய்து தரப்படவேண்டும்.

2. பகுதிநேர நூலகம் செயல்படுவதற்கேற்ற வகையில் உறுதியான வாடகையில்லாத கட்டடம் ஒன்று வழங்கப்படவேண்டும்.

3. ரூ.2,000/- ரொக்கம் (அல்லது) ரூ.2,000 மதிப்புள்ள நூலகத்தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்படவேண்டும்.

4. குறைந்த பட்சம் 100 உறுப்பினர்கள் சேர்க்கப்படவேண்டும்.

72—

தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளை வங்கிகள் தத்து எடுத்தல்

வினா எண் 37806—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எத்தனை பள்ளிகளை வங்கிகள் தத்து எடுத்து உள்ளன?

(ஆ) மேலும் ஊக்குவிக்க அரசின திட்டங்கள் யாவை?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :

(அ) இதுவரை ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

73—

ஒரத்தநாடு வட்டத்தில் பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க நடவடிக்கை

வினா எண் 41534—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பாப்பா நாடு, ஒரத்தநாடு, மேலஉளூர், ஈச்சங்கோட்டை, பொன்னாப்பூர் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையைப் போக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

வினாவில் குறிப்பிட்ட பள்ளிகளில் உள்ள காலி பணியிடங்கள் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

74—

நாடியம் அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக்குதல்

வினா எண் **43483—திரு. ஆர். சிங்காரம்** : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை கல்வி மாவட்டம், நாடியம் அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

தற்போதைக்கு செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

75—

உடைய நாடு அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

வினா எண் **43484—திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை கல்வி மாவட்டம், உடையநாடு அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி கல்வி அமைச்சர்:

தற்போதைக்கு அரசின் ஆய்வில் இல்லை.

76—

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகக் கட்டிடம் கட்டுதல்

வினா எண் **38203—டாக்டர் எஸ். சுந்தராஜ்:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகக் கட்டிடம் கட்ட அரசுக்குப் பரிந்துரை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன், தொழிலாளர் நல அமைச்சர்:

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகக் கட்டிடம் கட்ட பரிந்துரை ஏதும் வேலை வாய்ப்பு இயக்கத்தின் மூலம் அரசினால் பெறப்படவில்லை.

(ஆ) ஏழவில்லை.

77—

வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் விவசாயிகளுக்குக் கொடுத்த கூட்டுறவுக் கடன் விவரம்

வினா எண் 36926—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் விவசாயிகளுக்குக் கொடுத்த கூட்டுறவுக் கடன் எவ்வளவு?

(ஆ) அதைத் தள்ளுபடி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கூட்டுறவுக் கடன் விவரம் கீழ்வருமாறு:-

வரிசை எண் மற்றும் கடன் வகை (1)	1993-94 எண்ணிக்கை. (2)	தொகை. (3) (ரூபாய் இலட்சத்தில்)
1. குறுகிய காலக் கடன்கள்	31,348	2,023.58
2. மத்திய காலக் கடன்கள்	4,316	317.35
3. நகைக் கடன்கள்	29,847	1,669.56
கூடுதல்	**65,511**	**4,010.49**

வரிசை எண் மற்றும் கடன் வகை	1994-1995 (1-4-1994 முதல் 30-9-1994 வரை)	
	எண்ணிக்கை. (4)	தொகை. (5) (ரூபாய் இலட்சத்தில்)
1. குறுகிய காலக் கடன்கள்	21,576	1,589.52
2. மத்தியக் காலக் கடன்கள்	1,284	90.48
3. நகைக் கடன்கள்	21,426	1,369.93
கூடுதல்	**44,286**	**3,049.93**

(ஆ) கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்யும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

78—

வடஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் நிலவள வங்கி விவசாயிகளுக்குக் கொடுத்த கடன் விவரம்

வினா எண் 37239—திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் நிலவள வங்கி மூலம் விவசாயிகளுக்குக் கொடுத்த கடன் தொகை எவ்வளவு?

(ஆ) அந்தக் கடனை அரசு தள்ளுபடி செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர்:

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் நிலவள வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு 1991-92-ஆம் ஆண்டில், 181.80 இலட்சமும், 1992-93-ல் ரூ.277.47 இலட்சமும் 1993-94-ல் ரூ.453.31 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) அந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்யும் உத்தேசம் ஏதும் அரசுக்கு இல்லை.

79—

குடிநீர் தட்டுப்பாட்டை நீக்க அதிக நிதி ஒதுக்குதல்

வினா எண் 21572-திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது குடிநீர் தட்டுப்பாடு கடுமையாக ஏற்பட்டுள்ள நிலையில் இதன் முக்கியத்துவம் கருதி அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

1992 அக்டோபர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை வழக்கமாக பொழியும் வடகிழக்குப் பருவ மழை பொய்த்து போனதன் விளைவாக ஏரிகளில் போதிய அளவு நீர் சேரவில்லை. இதனால், 10-1-1993 முதல் இரு தினங்களுக்கு ஒரு நாள் குழாய்களின் மூலம் குடிநீர் வழங்கும் முறை செயலாக்கப்படுத்தியது. மேலும், மக்களுக்குப் போதிய அளவு குடிநீர் இல்லாமையால் ஏற்படக்கூடிய இன்னல்களைக் களையும்பொருட்டு ரூ.232.2 கோடி அளவில் சென்னை குடிநீர் வாரியத்தால் தயாரிக்கப்பட்ட முதல் அவசர கால திட்டத்திற்கும், ரூ.29.50 கோடி செலவில் சென்னை குடிநீர் வாரியத்தால் தயாரிக்கப்பட்ட இரண்டாம் அவசர கால திட்டத்திற்கும் அரசு ஒப்புதல் அளித்தது. மேற் குறிப்பிட்ட இரண்டு அவசர காலத் திட்டங்களை செயல்படுத்தும் வகையில் சென்னை நகர மக்களுக்கு 370 லாரிகள் மூலம் 6,033 குடிநீர் தொட்டிகளை நிரப்பியும், லாரிகள் உள்ளே செல்ல முடியாத குறுகலான தெருக்களிலும், சந்துகளிலும் 425 டிராக்டர் டிரெய்லர்கள் மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. மேலும், குடிநீர் அல்லாத மற்ற உபயோகத்திற்கு ஏற்கனவே இருந்த 4,600 ஆழ்துளைக் கிணறு பம்புகள் தவிர, புதிதாக சுமார் 2,600 ஆழ்துளைக் கிணறு பம்புகள் அமைக்கப்பட்டன.

இப்பொழுது குடிநீர் தேக்கங்களில் போதிய அளவு நீர் இருப்பதால் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தினமும் 55 மில்லியன் காலன் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

80—

அருள்மிகு வேட்ராயசுவாமி பெருமாள் கோயில் பராமரிப்பு விவரம்

வினா எண் 4014—*திரு. க. அர்ச்சுனன்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், சோரகை மலை அருள்மிகு வேட்ராயசுவாமி பெருமாள் கோயில் பராமரிக்கப்படுமா?

(ஆ) மலைக்கு மேலே கோயிலுக்குச் செல்ல ஒழுங்கான பாதை அமைத்துக் கொடுக்கப்படுமா?

(இ) இந்த கோயிலுக்கென்று வசூலித்த தொகை தனியாரிடம் உள்ளதா?

(ஈ) இந்தக் கோயில் மானிய நிலத்திலிருந்து வரும் வருமானம் தவறாமல் வருகிறதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) இத்திருக்கோயில், இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகைக்குட்பட்டு, பரம்பரை அறங்காவலர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) மலைக்கு மேலே கோயிலுக்குச் செல்ல பாதை வசதி அமைத்துக் கொடுக்க திருக்கோயிலில் நிதி வசதி இல்லை.

(இ) இத்திருக்கோயிலுக்கென்று வசூலித்த தொகை தனியாரிடம் இல்லை.

(ஈ) இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் மேற்படி திருக்கோயிலின் பரம்பரை அறங்காவலர்களும், பூசாரிகளின் குடும்பத்தினரும் உழுது பயிர் செய்து அனுபவித்துக்கொண்டு பூசைக் காரியங்களைச் செய்து வருகின்றனர். இத்திருக்கோயிலுக்கு சொந்தமான நிலத்தை அனுபவிப்பதற்கு குத்தகை செலுத்துவதுமில்லை; கோயில் ஊழியம் செய்வதற்கு சம்பளம் பெற்றுக் கொள்வதுமில்லை. எனவே, மேற்படி நிலத்திலிருந்து வரும் வருமானம் திருக்கோயிலுக்கு வருவதில்லை.

81—

வில்லியநல்லூர் காலனியில் கோயில் கட்டுதல்

வினா எண் **4143**—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் வில்லியநல்லூர் காலனியில் கோயில் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

1995 மார்ச் 14]

விடை—

மாண்புமிகு திரு.வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : பரங்கிப்பேட்டை ஒன்றிய வில்லியநல்லூர் காலனியில் அருள்மிகு மாரியம்மன் கோயில் என்னும் சிறு கோயில் உள்ளது. இத்திருக்கோயிலுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள கிராமப்புற நிதி உதவித் திட்டத்தின் கீழ் ரூ.25,000 அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திருக்கோயிலுக்குத் தேவைப்படும் திருப்பணி வேலைகளுக்கு திருப்பணிக்குழு அமைக்கவும், மதிப்பீடுகள் தயாரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

82—

மேலமூங்கிலடி ஆதிதிராவிடர் காலனி கோயிலைப் புதுப்பித்தல்

வினா எண் 12866—*செல்வி கோ. மல்லிகா:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியம், மேலமூங்கிலடி ஆதிதிராவிடர் காலனி கோயிலைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) : புவனகிரி ஊராட்சி ஒன்றியம், மேலமூங்கிலடி ஆதிதிராவிடர் காலனி கோயில் சிறிய கோயில்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டு உள்ளது. இக்கோயில் திருப்பணிக்கு விதிமுறைப்படி நிதி உதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

83—

தஞ்சாவூர் மாவட்டத்தில் திருக்கோயில்களைப் புதுப்பித்தல்

வினா எண்கள் 18714,18938,18943,18944,18945,18946,18948, 18951,18990,18996—*திரு.ஆர். சிங்காரம்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்:

1. தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், புண்ணியநல்லூர் அருள்மிகு சுந்தரமூர்த்தி விநாயகர் ஆலயம்.

2. திருவையாறு வட்டம், உஜ்ஜினி வேலத்தம்மன் ஆலயம்.

3. திருவையாறு வட்டம், கல்லணை, ஜெயவிலஅனுமார் ஆலயம்.

4. திருவையாறு வட்டம், கூத்தூர், ஹரிஹரபுத்திர சாமி ஆலயம்.

5. திருவையாறு வட்டம், கூத்தூர் லெட்சுமிநாராயணப் பெருமாள் ஆலயம்.

6. திருவையாறு வட்டம், கூத்தூர் காளியம்மன் ஆலயம்.

7. திருவையாறு வட்டம், செம்மங்குடி மாரியம்மன் ஆலயம்.

8. திருவையாறு வட்டம், சேனியபைரமூர் காளியம்மன் ஆலயம்.

9. வலங்கைமான் வட்டம், கருப்பூர் மாரியம்மன் மற்றும் செல்லியம்மன் ஆலயம்.

10. வலங்கையமான் வட்டம், மேலகபிஸ்தலம் கஜேந்திர வரதராஜ பெருமாள் ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

84—

தஞ்சாவூர் மாவட்ட திருக்கோயில்களைப் புதுப்பித்தல்

வினா எண்கள் 18820, 18822, 18823,18824, 18825, 18826, 18827, 18828, 19858, 19859-திரு. *ஆர். சிங்காரம்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்-

1. மன்னார்குடி வட்டம், புத்தங்கோட்டகம், வண்மீக நாதசுவாமி கோவில்.

2. ஒரத்தநாடு வட்டம், வடக்கூர் கல்யாணியம்மன் ஆலயம்.

3. ஒரத்தநாடு வட்டம், வடக்கூர் மாணிக்கவாசகர் பிள்ளையார் ஆலயம்.

4. ஒரத்தநாடு வட்டம், நார்தேவன் குடிக்காடு மாரியம்மன் ஆலயம்.

5. ஒரத்தநாடு வட்டம், சக்கரக்கோட்டை முனிஸ்வரசுவாமி பிடாரி ஆலயம்.

6. ஒரத்தநாடு வட்டம் தெலுங்கன்குடிகாடு, பத்ரகாளியம்மன் ஆலயம்.

7. ஒரத்தநாடு வட்டம், புலவன்காடு சுப்பிரமணிய சுவாமி ஆலயம்.

8. நீடாமங்கலம் வட்டம், தேவங்குடி லெட்சுமி நாராயணப் பெருமாள் ஆலயம்.

9. வலங்கைமான் வட்டம், சிக்கப்பட்டு அருள்மிகு நாகநாதசுவாமி மற்றும் சீனிவாசப் பெருமாள் ஆலயம்.

10. வலங்கையமான் வட்டம், திருக்கோயில் பத்து, உலக நாதசுவாமி ஆலயம்.

ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இல்லை.

85—

உடையார்குடி அனந்தீஸ்வரர் ஆலயம் திருப்பணி செய்தல்

வினா எண் 20039—திரு.என்.ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார் கோயில் உடையார்குடி அனந்தீஸ்வரர் ஆலயத் திருப்பணி நடத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், உடையார்குடி அருள்மிகு அனந்தீஸ்வரர் ஆலயத் திருப்பணி வேலைகளை மேற்கொள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையால், திருப்பணிக்குழு அங்கீகாரம் செய்யப்பட்டிருந்தது. இக்கோயில் ராஜகோபுரம் மொத்தம் 140 அடி உயரமாகும். இதில் மேலிருந்து 45 அடி வரை திருப்பணி செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள இராஜகோபுரத் திருப்பணி வேலைகள், திருமதில், திருப்பணி, சுவாமி சன்னதி விமானம், அம்மன் சன்னதி விமானம், மேல்தளம், கோயில் உட்புறத் தளவரிசை ஆகிய வேலைகள் செய்யப்பட வேண்டியுள்ளது. இந்நிலையில் திருப்பணி வேலைகளை மேற்கொள்ள அங்கீகாரம் செய்யப்பட்டிருந்த திருப்பணிக்குழுவின் பதவிக்காலம் முடிந்து விட்டதால் புதிய திருப்பணிக்குழு அமைத்து மதிப்பீடுகள் தயாரித்து திருக்கோயிலின் திருப்பணி வேலைகள் செய்து முடிக்க இந்து சமய அறநிலையத் துறை ஆணையரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

86—

உடையார்குடி அனந்தீஸ்வரர் ஆலய திருப்பணி செய்தல்

வினா எண். 20567—*திரு. என்.ஆர். ராஜேந்திரன்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காட்டுமன்னார் கோயில் தொகுதி, உடையார்குடி அனந்தீஸ்வர் ஆலயத்தின் திருப்பணி பாதியில் நிற்பதால் அதனை விரைவில் முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு.வெ. நடேசன் பால்ராஜ்: இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

காட்டுமன்னார் கோயில் தொகுதி, உடையார்குடி அனந்தீஸ்வரர் ஆலயத்திற்குச் செய்யப்பட வேண்டிய திருப்பணி வேலைகளை மேற்கொள்ள புதிய திருப்பணிக்குழு அமைத்து மதிப்பீடு தயாரித்து நிர்வாக அனுமதி அளிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1995 மார்ச் 14]

87—

தவத்திரு சுவாமி நந்தனார் கோயிலைப் புதுப்பித்தல்

வினா எண் 20573—திரு. என். ஆர். ராஜேந்திரன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரம் நகர செங்கட்டான் தெருவில் அமைந்திருக்கும் தவத்திரு நந்தனார் கோயிலைப் புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இத்திருக்கோயிலுக்குத் தற்போது புதிய திருப்பணிக்குழு சட்ட விதி 54(1)-ன்படி அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புதிய திருப்பணிக்குழு அமைத்தபின் மதிப்பீடுகள் தயாரித்து திருப்பணி வேலைகள் நடைபெறுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது.

88—

மேலசத்திரம் பெருமாள் கோவிலைச் சீர்செய்தல்

வினா எண் 21494—திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மேலசத்திரத்திலுள்ள பெருமாள் கோவிலை அரசு சீர் செய்ய முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்

சாத்தூர் வட்டம், மேலசத்திரம் அருள்மிகு பெருமாள் கோயில் இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகையில் இல்லை. எனவே, விதிமுறைகளின்படி இத்திருக்கோயிலைச் சீர் செய்ய நிதியுதவி வழங்க இயலாது.

89—

மருதூரில் உள்ள ஸ்ரீசிவன் கோயிலைப் புதுப்பித்தல்

வினா எண் **21621**—திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் - காயிதேமில்லத் மாவட்டம் மயிலாடுதுறை தாலூகா, மருதூர் ஊராட்சியில் உள்ள ஸ்ரீசிவன் கோயில் சிதலமடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இவ்வாலயத்தைப் புதுப்பித்து திருப்பணி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): அத்திருக்கோயில் திருப்பணிக்காக திருப்பணிக்குழு அமைத்து திருப்பணி செய்ய இந்து சமய அறிநிலைய ஆட்சித்துறை ஆணையர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

90—

பெரியார் காலனி ஸ்ரீமாணிக்க நாச்சியார் அம்மன்கோவில் திருப் பணி குறித்து

வினா எண். **21622**—திரு.எஸ். ஆசைமணி: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், கோமல் வட்டம், பெரியார் காலனியிலுள்ள ஸ்ரீமாணிக்க நாச்சியார் அம்மன்கோயில் திருப்பணி நிதியுதவி இன்றி பாதியில் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) இவ்வாலயத் திருப்பணியைப் பூர்த்தி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், கோமல் கிராமம், பெரியார் நகரில் அருள்மிகு

மாணிக்க நாச்சியாரம்மன் என்ற பெயரில் எந்த ஒரு ஆலயமும் இல்லை. எனினும், மேற்படி நகரில் ஆதிதிராவிடர் காலனியில் புல எண்.78/2ஏ-ல் அருள்மிகு காளியம்மன் என்ற பெயரில் ஒரு புதிய கோயில் கட்டப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலும் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பட்டில் இல்லை. தவிரவும் புதிதாக கட்டப்பட்டு வரும் திருக்கோயில்களுக்கு நிதி உதவி வழங்க இந்து சமய அறக்கட்டளை சட்டத்திலும் வழிவகை இல்லை.

91—

கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்களின் வருமான விவரம்

வினா எண். 26377—*டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மாத வருமானம் 10 ஆயிரத்திற்கு மேல் உள்ள திருக்கோயில்கள் எத்தனை?

(ஆ) எந்தெந்த கோயில்கள்?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் மாத வருமானம் பத்தாயிரத்திற்கு மேல் வருமானம் உள்ள திருக்கோயில்கள் மூன்று உள்ளன.

(ஆ) (1) அருள்மிகு மெய்நின்ற விநாயகர் திருக்கோயில், ஆரல்வாய்மொழி, தோவானை தாலுக்கா.

(2) அருள்மிகு நயினார் குலசேகர விநாயகர் திருக்கோயில்
3 ஆரல்வாய்மொழி, தோவானை தாலுக்கா.

(3) அருள்மிகு இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வம், சுசீந்தரம்.

92—

ஊஞ்சலூர் கோவில்களுக்கு திருப்பணி செய்தல்

வினா எண் 26665—*திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊஞ்சலூர் மாரியம்மன், ஸ்ரீசெல்லாண்டியம்மன் கோவில்களுக்கு திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

ஊஞ்சலூர் மாரியம்மன், ஸ்ரீசெல்லாண்டியம்மன் கோயில்களுக்கு திருப்பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு திருப்பணி குழு அமைக்கவும் திருப்பணி குறித்து மதிப்பீடு தயாரித்து நிர்வாக அனுமதி பெற்று திருப்பணி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

93—

பூஜை பொருட்கள் பொது ஏலத்தில் விடுதல்

வினா எண் **27315**—*திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினவிற்கு விடையளிப்பாரா—

அருள்மிகு கொடுமுடி மருடேஸ்வர் வீரநாராயணப் பெருமாள் கோவிலில் எள், தேங்காய் மூடி ஆகியவற்றின் விற்பனையை பொது ஏலத்தில் விட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

அருள்மிகு கொடுமுடி மருடேஸ்வரர் வீரநாராயணப் பெருமாள் கோயிலில் பக்தர்களின் நலனை முன்னிட்டும், திருக்கோவிலுக்கு வருமானம் அதிகரித்து வருவதை முன்னிட்டும், ஏலதாரர் கூடுதல் விலை கேட்பதாக வரும் புகார்களை தவிர்க்கும் பொருட்டும் எள்ளுப் பொட்டலம், தேங்காய் மூடி விற்பனை ஆகியவற்றை திருக்கோயில் நிர்வாகமே நேரடியாக நடத்தி வருகிறது.

94—

புதுக்கோட்டை மாவட்டத்தில் திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்தல்

வினா எண்கள் **27845, 27856**—*திரு. ஆர். சிங்காரம்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 14]

(1) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், அறந்தாங்கி நகர் அருள்மிகு கிருஷ்ணன் கோவில், கோட்டை முனீஸ்வரர் கோயில், ஆமாஞ்சி விநாயகர் கோயில், ஆளப்பிறந்தான் சாம்பன் கோயில், இராசேந்திரபுரம் கருப்பண்ண சாமி கோயில், ரெத்தினக்கோட்டை மாரியம்மன் ஆலயம், தர்மராஜன் வயல் மன்னமுடைய அய்யனார் கோயில், தாந்தாவி தண்டாயுதபாணி சுவாமி கோயில், தினையாகுடி காமாட்சியம்மன் கோயில், திருநாவூர் விஸ்வநாதசுவாமி கோயில், செங்கமாரி பிலிக்குத்தியம்மன் கோயில்.

(2) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், தனிக்கோட்டை அருள்மிகு முத்துமாரியம்மன் கோயில், சுப்பிரமணியபுரம் ஆத்மநாதசுவாமி கோயில், சுப்பிரமணியபுரம் சிவகிரிநாதசுவாமி கோயில், கடவாக்கோட்டை விநாயகர் கோயில், பிராமணவயல் இடும்பர் கோயில், பூவற்றுக்குடி பிம்மர் சுவாமி கோயில், பேட்டிவயல் அய்யனார் கோயில், பிராமணவயல் பணிக்குத்தி அய்யனார் கோயில், பரவாக்கோட்டை பாலசுப்பிரமணியசுவாமி கோயில், பாக்குடி உச்சிப்பிள்ளையார் கோயில், பரமந்தூர் பிடாரியம்மன் கோயில் ஆகிய திருக்கோயில்களைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(1) மற்றும் (2) இல்லை.

95—

சுசீந்திரம் கோயில் தேருக்குத் தேவையான துணிகள் வழங்குதல்

வினா எண் 35600—*திரு. இரா. அப்பு நடேசன்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்தரம் கோயில் தேரில் திருவிழா காலங்களில் அணிவிக்கப்படும் துணிகள் இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் புதிதாக தேவையான துணிகளை வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) சுசீந்திரம் அருள்மிகு தாணு மலையான் கோயில் தேருக்கு திருவிழாக் காலங்களில் அணிவிக்க புதிய தேர் பட்டுகள் தயாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன.

96—

வாணியம்பாடி வட்டத்திற்குட்பட்ட அறநிலையத்துறை பகுதிகளை வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் சேர்த்தல்

வினா எண் **38494**—*டாக்டர் ஜெ. பரந்தாமன்:* மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டம், வாணியம்பாடி வட்டத்திற்குட்பட்ட அறநிலையத்துறைப் பகுதிகள் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளதை மாற்றி வடாற்காடு-அம்பேத்கார் மாவட்டத்திற்கு மீண்டும் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:

இச்செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

97—

இறால் வளர்ப்பு தொழில் பேட்டைகள் அமைத்தல்

வினா எண் **44449**—*திருமதி கே. மரியம் உல் ஆசியா:* மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இறால் வளர்ப்புத் தொழில் பேட்டைகள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு இறால் வளர்ப்புத் தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) முதல் கட்டமாக சிதம்பரனார் மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், தருவைக்குளம் கிராமத்தில் சுமார் 50 ஹெக்டேர் நிலத்தில் பெரிய இறால் வளர்ப்பு தொழில்பேட்டை ஒன்று அமைக்க, 1994-95-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் தற்சமயம் துவக்கப்பட்டுள்ளன.

98—

மேட்டூர் மீன்பண்ணையில் மீன் உற்பத்தி மற்றும் வருமான விபரம்

வினா எண் 44467—திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் மீன்பண்ணையில் எவ்வளவு மீன் உற்பத்தி செய்யப்படுகிறது?

(ஆ) இதனால் அரசுக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கிறது?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): 1993-94 மற்றும் 1994-95 ஆகிய வருடங்களில் மேட்டூர் அணை மீன் பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட மீன்குஞ்சுகள் எண்ணிக்கை மற்றும் அதன்மூலம் அரசுக்கு கிடைத்த வருவாய் கீழ்வருமாறு:—

ஆண்டு.	நிர்ணயிக்கப் பட்ட இலக்கீடு. (இலட்சத்தில்)	உற்பத்தி செய்யப் பட்ட மீன்குஞ்சுகளின் விவரம். (இலட்சத்தில்) கட்லா	ரோகு
(1)	(2)	(3)	(4)
1993-94	300	208.25	183.50
1994-95 (30-11-1994 முடிய)	350	168.00	189.25

ஆண்டு.	உற்பத்தி செய்யப்பட்ட மீன்குஞ்சுகளின் விவரம். (இலட்த்தில்) மிரிகால்	கண்ணாடி கெண்டை.	மொத்தம்.	அரசுக்குக் கிடைத்த வருவாய். (ரூபாய் இலட்த்தில்)
(1)	(5)	(6)	(7)	(8)
1993-94	51.75	31.50	475.00	3.40
1994-95 (30-11-94 முடிய)	66.75	24.00	448.00	5.44

99—

வெம்பக்கோட்டை நீர்த்தேக்கத்தைச் சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 22300—திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெம்பக்கோட்டை நீர்த்தேக்கம் சுற்றுலாத் தலமாக்கப்படுமா?

(ஆ) இல்லை என்றால் தனியார் அமைக்க அரசு உதவி செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

100—

சுற்றுலாத்துறைப் பேருந்துகளை தனியாருக்கு வாடகைக்கு வழங்குதல்

வினா எண் 23278—திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுற்றுலாத் துறையின் கீழ் இயங்கும் பேருந்துகளை தனியாருக்கு வாடகை அடிப்படையில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பேருந்துகளை அக்கழகம் நடத்தும் சுற்றுலாக்களுக்கு அனுப்புவதுடன் மீதமுள்ள பேருந்துகளைத்

தனியார்களுக்கு அவர்களது விருப்பப்படி சென்றுவர தனிப்பட்ட சுற்றுலாக்களுக்காகவும் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் முடிவுற்றது.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. இரங்கல் தீர்மானங்கள்-தொடர்ச்சி

(உ) 12-3-1995 அன்று சுங்குவார் சத்திரம் அருகில் சாலை விபத்தில் பலர் உயிரிழந்தமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்:

செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம், சுங்குவார்சத்திரம் அருகில் தமிழகத்தில் இதுவரை நடந்திராத விபத்து, நடந்த விபத்துகளிலே மிகக் கோரமான விபத்தாக, 12-3-1995 அன்று நிகழ்ந்த ஒரு கொடூரமான சாலை விபத்தில் பலர் கோரமாக உயிரிழந்துள்ள செய்தியை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். கீழப்பொடவூர் என்னும் கிராமத்திலிருந்து டிராக்டரில் சென்றவர்களில் பெரும்பான்மையானவர்கள் கோரமான முறையில் இறந்துள்ளனர்; பெரிதும் பாதிக்கப்பட்டும் உள்ளனர்.

செய்தி அறிந்தவுடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று அரசின் சார்பிலும், தன் சார்பிலும் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி, மலர்வளையம் வைத்துள்ளார்கள். மேலும், பாதிக்கப்பட்ட கிராமத்திற்கும், மருத்துவமனைக்கும் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு தன் ஆறுதலையும் அனுதாபத்தையும் தெரிவித்துள்ளார்கள்; எல்லாவித உதவிகளையும் செய்திட உத்தரவிட்டுள்ளார்கள்.

மிகக்கொடிய இவ்விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும் அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்வதோடு உயிரிழந்தவர்களைப் பிரிந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும் அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறது."

இத்தீர்மானத்தை நிறைவேற்றும்வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் எழுந்து இரண்டு மணித்துளிகள் அமைதியாக நிற்கக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)